
# கிழக்கிலங்கை
## வாய்மொழிப் பாடல் மரபு

பதிப்பாசிரியர்
கலாநிதி சின்னத்தம்பி சந்திரசேகரம்



குமரன் புத்தக இல்லம்

**கிழக்கிலங்கை வாய்மொழிப் பாடல் மரபு**

''கட்டுப்பாடல்'' களின் தொகுப்பு

# கிழக்கிலங்கை
# வாய்மொழிப் பாடல் மரபு

''கட்டுப்பாடல்'' களின் தொகுப்பு


பதிப்பாசிரியர்

**கலாநிதி சின்னத்தம்பி சந்திரசேகரம்**

முதுநிலை விரிவுரையாளர், மொழித்துறை

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை



குமரன் புத்தக இல்லம்

கொழும்பு - சென்னை

2017

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | கிழக்கிலங்கை வாய்மொழிப் பாடல் மரபு :<br>''கட்டுப்பாடல்''களின் தொகுப்பு |
| பதிப்பாசிரியர் | : | கலாநிதி சின்னத்தம்பி சந்திரசேகரம் |
| பதிப்புரிமை | : | ©2017 கலாநிதி சின்னத்தம்பி சந்திரசேகரம் |
| வெளியீடு | : | குமரன் புத்தக இல்லத்தினால் வெளியிடப்பட்டது<br>39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6,<br>தொ.பே. 0112 364550<br>மி. அஞ்சல்: kumbhlk @gmail.com<br>3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி,<br>வடபழனி சென்னை - 600 026 |
| அச்சு | : | குமரன் அச்சகம் |
| அட்டை ஓவியம் | : | மருது |
| ISBN | : | 978-955-659-573-4 |
| விலை | : | 400.00 |
| Title | : | Kilakkilankai Vaimozhi Paadal marapu<br>'Kadduppadal' kalin Thokuppu |
| Edited by | : | Dr.Sinnathamby Santhirasegaram |
| Copyright | : | ©2017 Dr.Sinnathamby Santhirasegaram |
| Published by | : | Kumaran Book House<br>39, 36th Lane, Colombo -6,<br>Tel. - 0112 364550, E.mail : kumbhlk@gmail.com<br>3 Meigai Vinayagar Street,<br>Kumaran Colony, Vadapalani, Chennai - 600 026 |
| Printed by | : | Kumaran Press Private Limited |
| Cover Printing | : | Marudu |
| ISBN | : | 978-955-659-573-4 |
| Price | : | 400.00 |

தம் ஆற்றல்களுக்கும் அப்பால்
என்னை ஆளாக்கிய
அன்புத் தாய் சாரதாவுக்கும்
அமரத்துவம் அடைந்த அன்புத் தந்தை சின்னத்தம்பிக்கும்
இப்பண்பாட்டு அடையாளம்
சமர்ப்பணம்

# பதிப்புரை

கிராமிய மக்கள் மத்தியில் பயிலப்பட்டுவருகின்ற இலக்கியங்களை கட்டமைக்கப்பட்ட சில நியமங்களுக்கு உட்பட்ட ''வாய்மொழி இலக்கியங்கள்'' என்றதொரு வரையறைக்குள் வைத்தே இதுவரை நாம் நோக்கி வந்துள்ளோம். இத்தனை சமூக மாற்றங்கள் ஏற்பட்டுவந்த சூழலில் அவர்களின் இலக்கிய வெளிப்பாடுகளிலே ஏற்பட்ட மாற்றங்கள் - வளர்ச்சிகள் பற்றிப் பெரிதும் கவனம் செலுத்தப்படவில்லை என்றே கூறவேண்டும். இந்த அடிப்படையிலே முற்றிலும் வாய்மொழிப் பாடல்களாகக் கொள்ளமுடியாத, ஆனால் வாய்மொழிப் பாரம்பரியத்தின் ஒரு பகுதியாக - அதன் வளர்ச்சியாக அமைகின்ற பாடல் மரபொன்று இவர்கள் மத்தியிலே நீண்ட காலமிருந்து நிலவிவருவது அண்மைக் காலத்திலே அடையாளம் காணப்பட்டுள்ளது. அதாவது சற்று எழுத்தறிவுள்ள கிராமியப் புலவர்கள் தமக்குப் பரிச்சயமான வாய்மொழி மரபைப் பின்பற்றிப் பாடல்களைக் கட்டி மக்கள் மத்தியில் அளிக்கை செய்து வருகின்றனர். இவர்களை மக்கள் ''பாட்டுக் கட்டிப் பாடுபவர்கள்'' அல்லது ''கட்டுப்பாட்டு பாடுபவர்கள்'' என்று பொதுவாகக் கூறுவர். ''கட்டுதல்'' என்றால் அமைத்தல், இயற்றுதல், பிணித்தல் எனப் பொருள் படும். எனவே பாடலின் பல்வேறு பகுதிகளையும் ஒரு அமைப்பில் இணைத்து உருவாக்குபவர்கள் என்று பொருள்படுகின்றது. இவர்களைக் கிராம மக்கள் ''புலவர்'' என்ற புனைவுப் பெயரால் அழைப்பது வழக்கம். இவர்கள் நினைத்தவுடன் பாடலியற்றிப் பாட வல்லவர்களாகவும், மிக்க புலமைத்துவ ஆற்றல் உள்ளவர்களாகவும் இருப்பார்கள்.

தனிப்பட்ட கிராமப் புலவர்களால் உருவாக்கப்படுகின்ற கட்டுப் பாடல்கள் பெரும்பாலும் கையெழுத்துப் பிரதிகளாகவும், சிறு அச்சுப் பிரதிகளாகவும், துண்டுப் பிரசுரங்களாகவும் நிலவுகின்றன. எழுத்திலே உருவாக்கப்பட்ட போதும் இவை வாய்மொழி மரபிலே காலூன்றி உள்ளன. இந்தப் பாடல்கள் அவர்களுக்கு நன்கு பரிச்சயமான அம்மானை, காவியம், கும்மி, கவி, சிந்து, தாலாட்டு முதலான வாய்மொழிப் பாடல் வடிவங்களிலேயே கட்டப்பட்டவையாகும். சில பாடல்கள் மக்களிடம் பிரபலம் பெற்று விளங்கிய சினிமாப் பாடல் மெட்டுக்களிலும் கட்டப்பட்டுள்ளன.

இப்பாடல்கள் கிராமிய மக்களது படைப்புகளாகவும் அவர்களது வாழ்வில் வேரூன்றியவையாகவும் அமைந்துள்ளன. கிராம மக்களின் சமகால வாழ்வியல் அநுபவ வெளிப்பாடுகளே இவற்றில் முதன்மைப் படுகின்றன. முக்கியமாக அவர்கள் எதிர்நோக்கிய அனர்த்தங்கள், ஊரின் முக்கிய நிகழ்வுகள், கொலை, களவு, குடும்பப் பிரச்சினைகள், போரின் அவலங்கள் முதலியன பற்றியே அதிகமான பாடல்கள் பாடப் பட்டுள்ளன. இத்தகைய விடயங்கள் உடனுக்குடன் பாடப்படுவதே இந்த மரபின் தனித்துவமாகும்.

தாம் எதிர்கொள்ளும் சிக்கல்கள், முரண்பாடுகளைப் பாடல்களாக இசைப்பதன் மூலம் அந்த முரண்பாடுகளின் தீவிரத்தைக் குறைக்கவும், அவற்றிலிருந்து விடுபடவும் அவர்கள் முயற்சிக்கின்றனர். குடும்பப் பிரச்சினைகள் பற்றிய பாடல்கள், அனர்த்தம் பற்றிய பாடல்கள், இறப்புப் பற்றிய பாடல்கள், அரசியல் வன்முறை சார்ந்த பாடல்கள் எனப் பலவும் எதிர்கொள்ளும் முரண்பாடுகளில் இருந்து விடுபடுவதற்கான முயற்சி களாகவே உள்ளன. சிக்கல் × தீர்வு என்ற எதிர்நிலை இங்கு மையமாக உள்ளது. குறிப்பிட்ட பிரச்சினையைத் தீர்ப்பதற்கான, அவற்றிலிருந்து விடுபடுவதற்கான, ஆறுதல் பெறுவதற்கான ஊடகமாகவே இத்தகைய பாடல்கள் அமைகின்றன. அரசியல் சார்ந்த பாடல்கள், வழிபாட்டுப் பாடல்கள் என்பனவும் மக்களின் வாழ்க்கைச் சிக்கல்க ளையே பொருளாகக் கொண்டுள்ளன.

ஈழத்தில் இத்தகைய பாடல் மரபு குறிப்பாக மட்டக்களப்பு, அம் பாறைப் பிரதேசங்களில் வலுவானதொரு மரபாக இன்றுவரை நிலைத்து நிற்கின்றது. அதேவேளை யாழ்ப்பாணம், மன்னார், புத்தளம், திருகோண மலை, மலையகம் போன்ற தமிழர் பிரதேசங்களிலும் இப்பாடல் மரபு நிலவிவந்துள்ளது. கலாநிதி செ.யோகராசா அவர்கள் 2002 ஆம் ஆண்டு மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, பொலன்னறுவை, மலையகப் பிரதேசங்களைச் சேர்ந்த கிராமியப் புலவர்கள் சிலரின் பாடல்களை ''ஈழத்து வாய்மொழிப் பாடல் மரபு'' என்ற தலைப்பிலே தொகுத்தார். இது ஒரு முன்னோடி முயற்சியாகும். இந்த இலக்கிய அடையாளப்படுத் தலில் கிழக்கிலங்கை வாய்மொழிப் பாடல் மரபு - ''கட்டுப்பாடல்'' களின் தொகுப்பு என்ற இத்தொகுப்பு மேலும் வளத்தைச் சேர்க்கின்றது.

இத்தொகுப்பிலே உள்ள பாடல்கள் அனைத்தும் எனது கலாநிதிப் பட்ட ஆய்வின் பொருட்டு மட்டக்களப்பு, அம்பாறைப் பிரதேசங்களைச்

சேர்ந்த பல்வேறு கிராமங்களுக்கும் நேரடியாகச் சென்று கள ஆய்வின் நெறிமுறைகளுக்கு அமையச் சேகரிக்கப்பட்ட பாடல்களாகும். இந்தக் கள ஆய்வு 2009-2012 காலப்பகுதியில் இடம்பெற்றது. பெரும்பாலான பாடல்கள் கையெழுத்துப் பிரதிகள், அச்சுப் பிரதிகள் மூலமே பெறப் பட்டன. சில பாடல்கள் நேர்காணலின்போது அல்லது பாடல் அளிக்கை யின்போது ஒலிப்பதிவு செய்யப்பட்டதன் ஊடாகப் பெறப்பட்டன. கையெழுத்துப் பிரதிகளைப் பிரதி செய்யும்போது ஏற்பட்ட பல்வேறு மொழிச் சிக்கல்கள் காரணமாக அப்பாடல்களை ஒலிப்பதிவு செய்ய வேண்டியும் ஏற்பட்டது. கையெழுத்துப் பிரதியையும் ஒலிப்பதிவுப் பிரதியையும் ஒப்பீடு செய்தே சரியான பிரதியை எழுத முடிந்தது.

கிராமியப் புலவர்கள் அதிகமாக தமது பாடல்களைச் சிறு தாள் களிலும், கொப்பிகளிலும் எழுதி வைத்திருந்தனர். அவர்கள் ஆரம்ப எழுத்தறிவினையே பெற்றிருந்ததால் அவற்றில் எழுத்துப் பிழைகள் மலிந்திருந்தன. இவற்றைத் திருத்துவதில் சிக்கல்கள் ஏற்பட்டன. ஏனெ னில் சில இடங்களில் அது எழுத்துப் பிழையா, பேச்சொலியா என்பதை அறிவதில் சிரமங்கள் ஏற்பட்டன. இவற்றை அப்பிரதியில் உள்ள ஏனைய சொற்களுடன் ஒப்பிட்டு நோக்குதல், ஆசிரியரைப் பாட வைத்து ஒலிப் பதிவு செய்தல் என்பவற்றின் மூலம் உறுதிசெய்ய வேண்டி ஏற்பட்டது. சிலரது பாடல்கள் அடிபிரித்து எழுதப்படாமல் உரைநடைப் பாணியில் தொடர்ச்சியாக எழுதப்பட்டிருந்தன. இதனால் சந்த அமைவுக்கு ஏற்ப அவற்றை முறையாக அடி பிரித்து எழுதவேண்டி ஏற்பட்டது.

இத்தொகுதி மட்டக்களப்பு, அம்பாறைப் பிரதேச தமிழ் பேசும் மக்களின் ஒரு காலகட்ட சமூக வரலாற்றைப் பதிவு செய்கின்றது. அவர் களது வாழ்வை, உணர்வுகளை அடையாளப்படுத்த முனைகின்றது. அதன் ஒரு வெளிப்பாடாகவே தொகுதியின் தலைப்பும் அமைகின்றது. எமது தமிழ்ச் சூழலிலே இந்தப் பாடல் மரபைச் சுட்டுவதற்கு ஒருசில புலமையாளர்களால் கூறப்பட்டு வருகின்ற ''ஓரளவு வாய்மொழிப் பாடல்கள்'', ''பாதி வாய்மொழிப் பாடல்கள்'', ''அரை வாய்மொழிப் பாடல்கள், ''எழுத்து நிலைபெற்ற வாய்மொழிப் பாடல் மரபு'', ''முச்சந்தி இலக்கியம்'' முதலான தொடர்களின் பொருத்தமின்மை கருதி ''கட்டுப் பாட்டுக்கள்'' என்ற அந்த மக்களின் மொழியையே இத்தொகுப்பிலே பயன்படுத்தியுள்ளேன்.

அடுத்து, இதிலுள்ள பாடல்கள் அவை எழுதப்பட்டிருந்த அல்லது பாடப்பட்ட மொழியிலேயே தரப்படுகின்றன. பல பாடல்கள் பேச்சு மொழியினதும் விசேடிப்பு மொழியினதும் கலப்பாகவே விளங்கின. எனினும் அவற்றில் எவ்வித மாற்றங்களும் செய்யப்படவில்லை. பாடலின் அமைப்பைப் புரிந்துகொள்ளும் பொருட்டு அதிகமான பாடல்கள் அவற்றின் முழுமையான வடிவத்திலேயே தரப்படுகின்றன. இந்தப் பாடல்களில் அநேகமானவை அவர்களது அநுபவ வெளிப்பாடுகளாகும். சில பாடல்கள் உருவான பின்னணி பற்றிய விளக்கங்கள் அப்பாடல்களைப் புரிந்துகொள்ள அவசியமாக இருந்தபோதும் அவற்றை வழங்கமுடியாத நிலை ஏற்பட்டு விட்டது. காரணம் அதனால் குறிப்பிட்ட புலவர்களுக்கு ஏதும் தாக்கங்கள் ஏற்பட்டுவிடும் என்ற அச்சமாகும். அதற்கும் மேலாக இந்த அச்சம் காரணமாகவே ஒரு புலவரின் பெயர் தெரிந்திருந்தும் ''முஸ்லிம் வயோதிபப் பெண்'' என்று குறிப்பிட வேண்டியதாயிற்று.

இந்தத் தொகுப்பு அனர்த்தங்கள், சமூகப் பிரச்சினைகள், அரசியல், மதம் என்ற மேலோட்டமான பொருள் பகுப்பு ஒழுங்கிலே தொகுக்கப் பட்டிருக்கின்றது. எனினும் இவ்வாறு கட்டுத்திட்டமாக பகுப்பதிலே சிக்கல்களும் உள்ளன என்பதன் குறியீடாகவே பகுதிகளுக்குப் பெயரி டுவது தவிர்க்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுப்பின் கீழும் மாதிரியாக அமையும் ஒரு சில பாட்டுகள் மட்டுமே சேர்க்கப்பட்டுள்ளன. இந்த நான்கு பகுதிகளினுள்ளும் ஊடுபாவாக உள்ளது அந்த மக்களின் துன்ப துயரங்களின் வெளிப்பாடுகளும் பதிவுகளுமேயாகும். தமது சிக்கல் களை, அவலங்களை சில பாடல்களிலே ஏக்கத்தோடு பாடுகின்றனர்; சில பாடல்களிலே நகைச்சுவையோடு பாடுகின்றனர்; சில பாடல்களிலே மதவுணர்வு நிலை நின்று பாடுகின்றனர். இந்தப் பாடல் மரபிலே கோயில்கள் மீது பாடப்பட்ட பாடல்கள் கணிசமானவையாகும். அவற்றில் அதிகமானவை சமூக, அரசியல் சிக்கல்களால் பாதிக்கப்பட்ட மனநிலை யின் வெளிப்பாடுகளாக அமைவன. நீண்ட காலமாக யுத்த வன்முறை களுக்குள் வாழ்வு நடத்திய அவர்கள் கையறு நிலையில் தமது வேதனை களை, அவலங்களை மதநிலைநின்று வெளிப்படுத்தினார்கள். அது அவர்களுக்கு தம் மன அழுத்தங்களுக்கான மருந்தாகவே அமைந்தது. தொகுதியில் அமைகின்ற மதநிலைப் பாடல்களிலே இதனை உணரலாம். பாடல்களைக் கட்டிய புலவர்கள் பற்றிய சில குறிப்புகள் அவர்களின் பெயர்களுக்குக் கீழ் கொடுக்கப்பட்டுள்ளபோதும் மறைந்த புலவர்கள்

சிலரின் விபரங்கள் கிடைக்கப்பெறாமையால் அப்புலவர்கள் பற்றிய குறிப்புகள் எதனையும் வழங்க முடியாத அல்லது ஓரிரு குறிப்புகளை மட்டும் வழங்கவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது.

கால மாற்றத்தினாலும் நம் கலை இலக்கியப் புலத்தினுள் தொடர்ந்து செயற்படும் அதிகார நோக்கினாலும் அழிந்துகொண்டிருக்கின்ற எமது மக்களது இலக்கிய வேர்களின் ஒரு பகுதியை இந்நூல் ஆவணப்படுத்து கின்றது என்றே கருதுகின்றேன்.

இறுதியாக கள ஆய்வின்போது பாடல்களையும் அவை பற்றிய தகவல்களையும் வழங்கிய புலவர்கள், அவர்களது உறவினர்கள், ஏனைய தகவலாளிகள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். கால நீட்சியில் அவர்களில் பலர் மறைந்துவிட்டனர். அவர்களுக்கு எனது அஞ்சலிகள். அத்துடன் தொகுப்புத் தொடர்பாக ஆலோசனைகள் வழங்கிய ஓய்வுநிலைப் பேராசிரியர் கலாநிதி செ. யோகராசா, கலாநிதி சு.சிவரெத்தினம் ஆகியோருக்கும் முன் அட்டை ஓவியத்தை அழகாக வரைந்து தந்த ஓவியர் மருது அவர்களுக்கும் செவ்வை பார்ப்பதில் என்னுடன் உதவியாக இருந்த செல்வி கிருஷ்ண வேணி, கலாநிதி சந்திரா தேவி தயாகாந்தன், கலாநிதி M.I.M.ஹனிபா, திரு. கோ.குகன், திருமதி விஜிதா திவாகரன், செல்வி சி.சத்தியகலா ஆகியோருக்கும் இந்நூலை நேர்த்தியாக அச்சிட்டு வெளியிடும் குமரன் அவர்களுக்கும் எனது நன்றிகள்.

**சின்னத்தம்பி சந்திரசேகரம்**

110/3, கண்ணகி அம்மன் கோயில் வீதி,
மட்டக்களப்பு

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | பதிப்புரை | vii |
| 1. | சூறாவளித் துயர் அம்மானை | 1 |
| | புயல் காவியம் | 12 |
| | சூறாவளி அம்மானை | 17 |
| | 1957ஆம் ஆண்டு பெருங்காற்று மழையால் ஏற்பட்ட பெரு வெள்ளத்தம்மானை | 22 |
| | சுனாமி கடல் கொந்தளிப்பு காவியம் | 26 |
| 2. | பிள்ளைத் தவம் | 30 |
| | கவிகள் - 1 | 32 |
| | கவிகள் - 2 | 40 |
| | கவிகள் - 3 | 43 |
| | மச்சான் மீராமுகைதீனுக்கு அனுப்பிய கவிகள் | 48 |
| | நோய் நீக்கும் ஒப்பாரி | 49 |
| | நோயுற்றவருக்குப் பாடிய இரப்புத் துவா | 51 |
| | வெளிநாடு போன வெள்ளம்மா | 52 |
| | சத்தாரும் செளதாவும் | 57 |
| | ரெண்டாயிரத்திப் பத்தாம் ஆண்டு வெள்ளம் | 59 |
| | வெள்ளாம வெட்டு | 61 |
| | ஊரின் பழங்கால இக்கால நிலை | 62 |
| | பொலிவெழந்த ஊர் | 65 |
| | அறப் பாடல்கள் | 67 |
| 3. | அஷ்ரப் ஒப்பாரி | 70 |
| | இராசமாணிக்கம் கும்மி | 78 |
| | கனவு கண்டேன் | 79 |
| | மணப்பாறை மாடுகட்டி என்ற மெட்டு | 80 |

| | | |
|---|---|---|
| | அசறப்பை ஆதரிப்பம் | 81 |
| | பாலப்பாட்டு | 84 |
| | சூடடி | 85 |
| | செல்வெடி | 86 |
| | கப்பலடி | 87 |
| | அகதி | 88 |
| | அகதிகள் ஒப்பாரி | 90 |
| 4. | வுக்கர் | 92 |
| | தமிழ் அகதிகளுக்காக மாமாங்கப் பிள்ளையார் தோத்திரம் | 94 |
| | மட்டக்களப்பு அமிர்தகழி பிள்ளையார் அகவல் விநாயகர் தோத்திரம் | 103 |
| | வன்செயல் கட்டுப் பாடல் | 106 |
| | திருக்கோயில் சித்திரவேல் செம்மல் பேரில் தமிழ்மொழி அனுதாபபப்பத்து | 109 |
| | செல்லப்பா சிறைமீண்ட திருப்பதிகம் | 114 |
| | கள ஆய்வில் தகவல் வழங்கியோரின் விபரங்கள் | 119 |

# 1

## சூறாவளித் துயர் அம்மானை (1979)

**மா.பொன்னன்:**

மண்டூரைச் சேர்ந்தவர். பல வருடங்களுக்கு முன் இறந்துவிட்டார். தரம் நான்கு வரை கல்வி கற்றவர். சலவைத் தொழில் புரிந்தார். சூறாவளித் துயர் அம்மானை, நாவலடி நாகதம்பிரான் அம்மானை, கலிகாலக் கேவலம், முருகன் வழிநடைச் சிந்து முதலிய பல பாடல்களை எழுதியுள்ளார். இவற்றில் முதலிரண்டும் அவரால் அச்சிடப்பட்டன. அவை அவரால் மக்கள் மத்தியில் பாடிக்காட்டப்பட்டு விற்பனை செய்யப்பட்டன. குறும் பாடல்கள் பலவற்றைக் கொப்பியில் எழுதி வைத்துள்ளார்.

### விநாயகர் துதி

ஐங்கரனே ஐயாவே அடியேன்நான் உன்பாதம்
ஆதரித்துப் பிராணபயம் தருவாய் சிவப்பொருளே
சூறாவளி என்னும் அம்மானை பாடுதற்கு
விக்கினங்கள் தீர்த்தருளும் விநாயகனே முன்னடவாய்
மூலப்பொருளே முதற்பொருளே வாருமிப்போ
அடியேன் நான் செய்த ஆறுகுற்றம் நூறுபிழை
விநாயகனே வந்தெனக்கு விடைதாரும் தற்பரனே
உன்பாதம் பணிந்தேன் சரணம் சரணமையா.

### சரஸ்வதி துதி

வாலை சரஸ்வதியே மலர்ப்பாதம் தெண்டனிட்டேன்
வாழ்த்தி விடைதாரும் வரந்தருவாய் ஈஸ்வரியே
வாக்கில் குடியிருந்து மனமகிழ்ச்சி தாருமம்மா
சூறாவளி என்னும் அம்மானை பாடுதற்கு
கூர்ந்து மனதுள்ளிருந்து சுகம்தாரும் ஈஸ்வரியே
நாவில் குடியிருந்து நல்லொளியைத் தாருமம்மா
சரஸ்வதி மாதாவே தாயாரே வாருமம்மா
உன்பாதம் பணிந்தேன் சரணம் சரணமம்மா.

## சூறாவளித் துயர் அம்மானை

01. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபத்தெட்டாம் ஆண்டில்
கார்த்திகை மாதம் இருபத்து மூன்றாம் தேதிதன்னில்
வியாழக்கிழமையிலே வந்தது சூறாவளி.
எட்டு மணியளவில் வந்தது புயல் காற்று.
அதிலே நாம் பட்டதுயர் பார்க்கவே கூடாது.
மக்கள் அழுகிறதும் மண்மேல் விழுகிறதும்
கானகத்தில் நாமிருந்து கண்டோமே அம்மானை.

02. மண்டூர்த் திருமுருகன் மகிமையுள்ள கோபுரமும்
முன்னூறு ஆண்டுமுதல் வந்துதித்தார் தில்லையிலே.
இரவு பகலாக எட்டு நாள் பூசையில்லை.
மக்களெல்லாரும் தத்தளித்து நிற்கிறதை
பட்டிருப்புத் தொகுதி எம்பி பார்த்திருக்க மாட்டாமல்
அரசில் ஓடிவந்து அறிவித்தார் அப்போதே.
அழிமதி வந்து அழிந்ததே என்று சொன்னார்.
சூறாவளி வந்து சூழ்ந்ததே அம்மானை.

03. கப்பலில் சாப்பாட்டுச் சாமான்கள் அத்தனையும்
ஆமிப் படையோடு வாகனத்தில் தான் ஏற்றி
ஆகாயமார்க்கமாய் அந்தரத்திலே வந்து
மண்டூர்க் கிராமம் மற்றுமுள்ள கிராமமெல்லாம்
கொண்டு கொடுத்து பாதுகாத்துத் தான் வந்தார்.
மக்கள் எல்லோரும் மயங்கிக் கிடந்தவர்கள்
தத்தளித்து நின்று தடுமாறி நின்றவர்கள்
உணவு வகை உண்டு உயிரெடுத்தார் அம்மானை.

04. மண்டூர் பெரியோர் மனேச்சர் பேரின்பமவர்
இரவு பகலாகச் சாதங்கள் தான் கொடுத்து
அரிசி நெல்லும் கொடுத்து ஆதரவு செய்து வந்தார்.
அயல் தேசமிருந்து சாப்பாடு கொண்டுவந்து
கொடுத்தாரே அப்போது மக்கள் துயர் தான் பார்த்து.
அழுதழுது மக்களெல்லாம் அவலமென்று தானிருந்தார்.
இன்னும் கொஞ்ச நேரம் சூறாவளி தானிருந்தால்
அடியோடே தரைமட்டம் அழிந்திடுமே அம்மானை.

05. ஆண்டவனே வழிவாசல் தெரியாமல் ஓடிவந்தார்
திசையுமறியாமல் திகைத்தங்கே நின்றவரும்
ஊணுமே உண்டவரும் உண்ணாதிருந்தவரும்
உறங்கி இருந்தவரும் உறங்காதிருந்தவரும்
கைகால் உடைந்து காயங்கள் பட்டவரும்
ஓடிவருகையிலே மரத்திலடிபட்டவரும்
என்ன செய்வோம் என்று இருந்தாரே இப்புவியில்
சூறாவளி வந்து சூழ்ந்ததே அம்மானை.

06. இரங்கி அரசாங்கம் காசுமுதல் ஆடைகளும்
அரிசி மா கருவாடு பருப்பு முதல் அத்தனையும்
கொண்டு வந்து கொடுத்து பாதுகாத்து வந்தார்.
மக்கள் அனைபேரும் மயங்கிக் கிடந்தவர்கள்
தத்தளித்து நின்று தடுமாறி நின்றவரும்
அரசினர் கொடுத்து ஆதரித்தார் அப்போதே.
உணவு வகை உண்டு உலகமெலாம் உயிரெடுத்தார்
சூறாவளி வந்து சூழ்ந்ததே அம்மானை.

07. ஈராறு கையான் இரங்கி மனம் குளிர்ந்தது
மக்கள் அழுகிறதும் மண்மேல் விழுகிறதும்
கண்டந்த வேல்முருகன் வெளிப்பொன்றைக் காட்டிவைத்தார்.
மூன்று மணியளவில் மெல்ல மெல்லக் குறைந்ததுவும்
மக்கள் அனைபேரும் மயங்கிக்கிடந்தவர்கள்
ஓங்கி எழுந்து இருந்தாரே வையகத்தில்.
வையகத்தில் சூறாவளி வந்ததோ என்று சொல்லி
அழுதழுதே மக்களெல்லாம் அபயமென்றார் அம்மானை.

08. உள்ளத்துள் இருக்கும் உயிர்த்துணையாய் நின்றோனே,
வழி வாசல் தெரியாமல் வகைதப்பி நின்றழுதார்.
மக்கள் படும்பாட்டை யார்தான் அறிவாரோ?
என்ன செய்வோம் என்று இருந்தாரே வையகத்தில்.
நாடுகளும் காடாய்ப் போச்சுதோ என்பார்கள்.
ஏழாம் ஆண்டில் அடித்த புயலிலேதான்
அழிவு சேதம் இல்லை என்று சொன்னார்கள் வையகத்தில்.
சூறாவழி வந்து சூழ்ந்ததே அம்மானை.

09. ஊர்வன செத்தும் உலாவி உட்காருமிடம்
காற்றில் அடிபட்டு கனசேதம் போச்சு தென்பார்.
நாற்கால் மிருகம் அழிந்ததோ லெட்சமுண்டு.
பட்டதோர் துன்பமெல்லாம் பார்த்திருக்கக் கூடாது.
மரங்கள் இலைகள் மடிந்ததே அப்போதே.
இன்னும் கொஞ்ச நேரம் சூறாவளி தானிருந்தால்
அடியோடே தரைமட்டம் அழிந்திடுமே அம்மானை.

10. என்னென்று சொல்லி எண்ணி எண்ணி இருந்தவரும்
தன்தரையில் தான் இருந்து ஐயையோ என்றவரும்
மேலுடைந்து காலுடைந்து மெய்மறந்து போனவரும்
ஐந்துபேர் தாய்தகப்பன் சுவர் இடிந்து மாண்டவரும்
மாண்டு மடிந்தோரை அளவிடப் போகாது
என்ன செய்வோம் என்று இருந்தாரே இவ்வுலகில்.
முருகன் அருளாலே வெளிப்பொன்றைக் கண்டார்கள்.
சூறாவளி வந்து சூழ்ந்ததே அம்மானை.

11. ஏழை படும் துயரை ஆர் அறிவார் வையகத்தில்
மட்டக்களப்பூர் அநாதையாய்ப் போனதுபார்.
நீதி தீர்க்கும் மண்டபமும் சீட்சை செய்யும் மண்டபமும்
கல் சுவர் வீடுகளும் கனசேதம் போனதுபார்.
ஓடுகள் வைத்து உறுதியாய் கல் வைத்த சுவர்
சிதறி அடிபட்டுச் சீரழிந்து போனதுவே
பண அழிவும் பொன் அழிவும் பார்க்கவே கூடாது
சூறாவளி வந்து சூழ்ந்ததே அம்மானை.

12. ஐயன் உமையும் ஆதிசிவன் தன்னருளால்
மூன்று மணியளவில் மெல்ல மெல்ல அமர்ந்ததுவே.
ஆறுகடலில் அடவியில் அடைந்த பிணம்
எண்ணிக் கணக்கெடுக்க என்னாலே கூடாது.
பதினேழாம் ஆண்டில் பாரப்புயலுமில்லை.
இவ்வாண்டில் கண்ட துயர் என்ன செய்வோம் என்று
அழுதழுதே மக்கள் அமர்ந்திருந்தார் இவ்வுலகில்.
சூறாவளி வந்து சூழ்ந்ததே அம்மானை.

13. ஔவிப்பிடித்துக் காற்றோடே போனவரும்
உருண்டு பிரண்டு ஓடிப்போய் நின்றவரும்
திக்குகள் தெரியாமல் திகைத்துப்போய் நின்றவரும்
கைக்குழந்தை இல்லாமல் கதறி அழுதவரும்
என்ன புதுமை என்று ஏங்கி இருந்தவரும்
ஐயையோ என்று அழுதுகொண்டிருந்தவரும்
சிவ சிவா என்று திக்கிட்டு நின்றவரும்
சூறாவளி வந்து சூழ்ந்ததே அம்மானை.

14. கல்முனைத் தொகுதி அழிவென்று சொல்வார்கள்.
சம்மாந்துறைப் பகுதி அழிவென்று சொன்னவரும்
நீலாவணைப்பகுதி மெத்தவழிவாச்சுது பார்.
கல்லாறு பட்டதுயர் கடும்துயரமாய்ப் போச்சு.
ஓந்தாச்சிமடம் அழிந்ததே என்று சொன்னார்கள்.
பட்டிருப்புத் தொகுதி அழிந்ததே என்று சொன்னார்.
களுதாவளையும் அதற்கடுத்த ஊர் மனையும்
சூறாவளி வந்து சூழ்ந்ததே அம்மானை.

15. காத்தான்குடிப்பகுதி கனசேதமாய்ப் போச்சு.
கற்குடாப்பகுதி கனசேத அழிவு என்பார்.
வாழைச்சேனை மிறாவோடை வாயாலே சொல்லவொண்ணா.
சிற்றாண்டி வேல்முருகன் சிவனார் அருளாலே
மக்கள் படும் துயரை முருகன் ஒளி காட்டிவந்தார்.
களுவங்கேணி வாகரை கடும் துயர் என்பார்கள்.
கதிரவெளி ஊரும் கன அழிவாய்ப் போச்சுதுபார்
சூறாவளி வந்து சூழ்ந்ததே அம்மானை.

16. கிளறியே மெல்லக் கிளப்பி மரங்களையும்
சாய்ந்து விழுந்து தரை மட்டமாய் போச்சு.
பழுகாமம் பட்டதுயர் பார்க்கவே கூடாது.
போரதீவு வெல்லாவெளி பெருந்துயரம் என்பார்கள்.
அம்மன் அருளாலே பாதுகாத்து வந்தார்கள்.
எருவில் குறுமண்வெளி பட்டதுயர் என்ன சொல்வேன்.
கொலனிகளும் மெத்தக் கேவலமாய்ப் போச்சுது பார்.
சூறாவளி வந்து சூழ்ந்ததே அம்மானை.

17. கீழ் உலகம் வானம் வனமிருளாய்ப் போச்சுதப்போ.
மரங்கள் முறிந்து விழுந்ததோ சத்தமில்லை.
ஓடி இருந்தவரும் ஓடாதிருந்தவரும்
வழிகள் தெரியாமல் வகைதப்பி நின்றவரும்
ஆற்றில் பிணங்கள் அழிந்ததோ லெட்சமுண்டு.
காற்றில் அடிபட்டு மரம் செடிகள் வீழ்ந்ததுவும்
தப்பி பிழைத்தவரும் தான் மரணமாகினதும்
சூறாவளி வந்து சூழ்ந்ததே அம்மானை.

18. குண்டெடுத்து வேலைக் குத்தினார் உலகமதில்.
வெளிப்பொன்றைக் கண்டு மக்கள் மெல்லமெல்லத் தான் எழுந்து
ஐயா சிவனே என்று அனைபேரும் சத்தமிட்டார்.
மூன்று மணியளவில் மெல்லவே அமர்ந்ததப்போ
முருகா முருகா என்று கூவினார் எல்லோரும்.
ஆடைகளும் இல்லாமல் அனைபேரும் தானிருந்தார்.
அந்தநேர வேளையிலே கைகொடுத்தார் வேல் முருகன்.
சூறாவளி வந்து சூழ்ந்ததே அம்மானை.

19. கல்குடா எம்பி தலைவர் தேவநாயகமும்
பட்டிருப்பு எம்பி கணேசலிங்கத்தாரும் அப்போ
வாகனத்திலேறிப் பவனி வருகையிலே
மட்டக்களப்பூர் அழிந்ததோ என்று சொல்லி
கண்டார்கள் அப்போது கண்கள் இரண்டும் தன்னாலே.
என்ன செய்வோம் என்று ஏங்கியே நின்றாரே.
மக்கள் அனைபேரும் மயங்கியேதான் கிடந்தார்.
சூறாவளி வந்து சூழ்ந்ததே அம்மானை.

20. கெட்டே அலைந்து கேவலமாய்ப் போச்சுது பார்.
உணவைக் கொடுத்து உயிர் எடுப்போம் என்று சொல்லி
இரவு பகலாக ஓடியேதான் திரிந்து
ஊக்கமதாய்க் கொண்டுவந்து உலகமக்கள் அத்தனைக்கும்
கொடுத்தாரே, அப்போ மயங்கிக் கிடந்தவர்கள்
தழைத்தோங்கி நின்றார் உலகமக்கள் அத்தனையும்
என்ன அழிமதியோ என்றாரே வையகத்தில்.
சூறாவளி வந்து சூழ்ந்ததே அம்மானை.

21. கேடுகள் வந்து கெட்டதே உலகமெல்லாம்.
இன்னும் அழிமதியை யார் அறியப் போறாரோ.
பண அழிவும் பொருள் அழிவும் பார்க்கவே கூடாது.
சுவர் இடிந்து ஐந்துபேர் தாய்தகப்பன் மாண்டாரே
இன்னும் அநேக மக்கள் குளிர்வந்து தாவினதே.
மாண்டார் அறிவாரோ வையகப் பூமியிலே
தேசங்கள் எல்லாம் சீர்கெட்டுப் போனதுவே
சூறாவளி வந்து சூழ்ந்ததே அம்மானை.

22. அன்னை சுற்றம் தான்மறந்து அத்தனையும் தான்மறந்து
செத்து மடிந்தவரும் சிவலோகம் போனவரும்
ஆற்றில் புரண்டு ஐயோ என்று மாண்டவரும்
தரையில் அடிபட்டுத் தான்மடிந்து போனவரும்
ஆண்டவனே என்று அடித்துப் புரண்டவரும்
என்ன செய்வோம் என்று இருந்தாரே இப்புவியில்.
அயல்வீடு தேடி அடுத்தடுத்தே ஓடிவந்தார்.
சூறாவளி வந்து சூழ்ந்ததே அம்மானை.

23. எல்லோரும் கூடிக் கும்பிடும் கோயிலெல்லாம்
பூசைகளும் இல்லாமல் பூலோகம் அழிந்ததுவே
வாயுபகவானும் வருணபகவானும்
அக்கினி தேவரும் அடுக்காக நின்றதுவே
அவரவர் கொடுங்கோலை அவரவர் செய்தாரே.
எழுபத்தெட்டாமாண்டில் உலகழிவு வந்ததுவே.
இன்னுமழிமதியை என்ன என்று சொல்வேனோ.
சூறாவளி வந்து சூழ்ந்ததே அம்மானை.

24. சவளக்கடையூர் அடுத்தடுத்த ஊர்மனையும்
பதினைந்தாங் கொலனி அதற்கடுத்த கொலனிகளும்
பதிமூன்று பதினாலும் பார்க்கவே கூடாது
காக்காச்சிவட்டை கடுந்துயராய்ப் போச்சுதுபார்.
அழிமதியை வெல்ல ஆராலும் கூடாது.
என்ன செய்வோம் என்றிருந்தாரே அப்போது
அழுதழுதே மக்களெல்லாம் அமர்ந்திருந்தார் அந்நேரம்.
சூறாவளி வந்து சூழ்ந்ததே அம்மானை.

25. யானைகள் இரண்டும் அதிவேகமாக வந்து
குறுமண்வெளியூரில் கூச்சலிட்டோடி வந்து
ஆற்றிலிறங்கி அமர்ந்ததுவே மண்டூரில்
வந்தே இறங்கிநிற்க மக்களெல்லாம் கூச்சலிட
காட்டை முறித்துக் கடுரமாய் வந்ததுவே
கண்டோமே இவ்வுலகில் காணாத புதுமைகளை
ஓடியே கூச்சலிட்டு உலகமதில் சொன்னார்கள்.
சூறாவளி வந்து சூழ்ந்ததே அம்மானை.

26. எம்பியும் டீயாறும் விதானைமார் அத்தனைபேர்
ஆடை பணங்கள் அத்தனையும் கொண்டுவந்து
காட்டுகளை எடுத்துக் கொண்டுமே வாருமென்றார்.
நம்பர்படியே போளினிலே நின்றார்கள்.
கொடுத்தாரே மக்கள் துயர்தன்னைத் தான்பார்த்து.
வீட்டுப் பணம்தருவோம் மேன்மையுடன் கட்டுமென்றார்.
என்ன செய்வோம் என்று ஏகினார் அப்போது.
சூறாவளி வந்து சூழ்ந்ததே அம்மானை.

27. கொக்கட்டிச்சோலை குடிகொண்ட வேல் முருகன்
பட்டிப்பளை முனைக்காடு முதலைக்குடா அத்தனையும்
வேலன் அருளாலே வெளிப்பொன்றைக் கண்டார்கள்.
ஐயோ சிவனே என்று அனைபேரும் சத்தமிட்டார்.
முருகா முருகா என்று கூவினார் எல்லோரும்.
மக்கள் எல்லோரும் தத்தளித்துக் கூப்பிடவே
வேலை எடுத்துச் சுற்றினார் உலகமெல்லாம்
சூறாவளி வந்து சூழ்ந்ததே அம்மானை.

28. மாங்காய் உடன் தேங்காய் மற்றும் கனிகளெல்லாம்
உண்டாக்க எத்தனையோ காலமோ நாமறியோம்
புதுத்தேசம் என்று பூவுலகோர் சொல்வார்கள்.
அயல் தேசம் இருந்து ஆடைகளும் கொண்டு வந்து
கொடுத்தாரே மக்கள் துயர்களைத்தான் பார்த்து
ஆடைகளே இல்லாமல் அமர்ந்திருந்தார் இவ்வுலகில்
சூறாவளி வந்து சூழ்ந்ததே அம்மானை.

29. பட்சி இனங்கள் குருவியினங்கள் பறவை பட்சி அத்தனையும்
அவரவர் இருப்பிடத்தில் அமர்ந்திருக்கும் நேரமதில்
சூறாவளி வந்து சுழற்றியே தானடிக்க
கூவா கூவா என்று குழறி அழுதவரும்
காற்றில் அடிபட்டு கனசேதம் போனதுவும்
ஊர்வன ஜெந்தும் அழிந்ததுவே இவ்வுலகில்.
இன்னும் கொஞ்ச நேரம் சூறாவளி தானிருந்தால்
அடியோடே தரைமட்டம் அழிந்திடுமே அம்மானை.

30. டாக்குத்தர் நேசும் மருந்துவகை அத்தனையும்
எடுத்துமே கப்பல் வாகனத்தில் தானேறி
கொண்டுமே வந்து குபீரெனத் தானிறங்கி
மக்கள் தனக்குரிய மருந்துதனைச் சிகிச்சை செய்தார்
ஏறினார் கப்பல் இருளாய்ப் பறந்ததுவே.
மக்கள் துயரை யார்தான் அறிவாரோ
என்ன செய்வோம் என்று இருந்தாரே இவ்வுலகில்
சூறாவளி வந்து சூழ்ந்ததே அம்மானை.

31. பட்டிருப்புத் தொகுதி எம்பி மனைவி சுற்றம் அத்தனைபேர்
தேங்காயும் மாவும் தேயிலையும் சர்க்கரையும்
இன்னும் அநேக உணவுச் சாமான்கள் அத்தனையும்
பெட்டி மிசினில் பூறாகச்சாமானும்
மக்கள் அனைபேர்க்கும் வரிசையுடன் தான் கொடுத்தார்.
ஏறியே போய் அவர்கள் இருப்பிடத்தில் தான் அமர்ந்தார்.
சூறாவளி வந்து சூழ்ந்ததே அம்மானை

32. தென்னோலை கட்டிசீராக மேய்ந்த சுவர்
இடிந்து விழுந்தது என்னசெய்வோம் என்றழுதார்.
ஓடுகள் வைத்து உறுதியாய் வைத்த சுவர்
சிதறி அடிபட்டுச் சீரழிந்து போனதுவே.
மாண்டார் வருவாரோ வையகத்தில் என்பார்கள்.
இந்தநேர வேளையிலே காடென்றும் சொல்வார்கள்
இன்னும் கொஞ்ச நேரம் சூறாவளி தான் இருந்தால்
அடியோடே தரைமட்டம் அழிந்திடுமே அம்மானை.

33. மரங்களை பிடுங்கி மண்மேல் விழுத்தினதும்
மழைகள் பெய்தாப்போல் மண்ணை அள்ளி வாரினதும்
பட்டமரங்களெல்லாம் தழைத்தோங்கி நின்றதுபார்.
மக்களும் பட்டெழும்பி நின்றாரே வையகத்தில்.
என்ன செய்வோம் என்றிருந்தாரே இப்புவியில்.
அந்தநேர வேளையிலே மக்களையும் பெற்றார்கள்.
இன்னும் கொஞ்ச நேரம் சூறாவளி தான் இருந்தால்
அடியோடே தரைமட்டம் அழிந்திடுமே அம்மானை

34. முப்பத்தெட்டாம் கொலனி வீட்டில் வசித்திருந்த
அட்டம் பக்கத்துள்ளோரும் அனைபேரும் அங்கிருந்த
மரங்கள் முறிந்து சுவரில் வந்து தாவினதும்
சுவரும் இடிந்து விழுந்ததே அப்போது
மாண்டார்கள் என்று அனைபேரும் சத்தமிட்டார்.
அந்நேர வேளையிலே வெளிப்பொன்றைக் கண்டார்கள்.
முருகா முருகா என்று கூவினார் எல்லோரும்
சூறாவளி வந்து சூழ்ந்ததே அம்மானை.

35. யாழ்ப்பாணப் பகுதிமக்கள் ஐயோ சிவனே என்று
மட்டக்களப்பூர் அழிந்ததே என்று சொல்லி
கோடாலி கத்தி கிடுகு கயிறுகளை
ஆணி விளக்கு அத்தனையும் கொண்டுவந்து
ஆதரவு அத்தனையும் அன்பாகச் செய்து வைத்தார்
தானதருமவகை அன்பாகச் செய்தாரே.
இன்னும் கொஞ்ச நேரம் சூறாவளி தான் இருந்தால்
அடியோடே தரைமட்டம் அழிந்திடுமே அம்மானை.

36. ஓர் மனையில் தான் இருந்து ஓடி ஓடி வந்தவரும்
வாவிகளில் விழுந்து மதிமயங்கிப் போனவரும்
மாண்டுமடிந்தவரை வாயாலே சொல்ல ஒண்ணா.
அழிவு சேதம் அத்தனையும் அளவிடப் போதாது.
மக்கள் படும் துயரை ஆர் அறிவார் வையகத்தில்.
உணவுவகை கொடுக்கப் போளினிலே நின்றவரும்
காட்டுக்களை தான்கொடுத்து உணவுவகை பெற்றாரே
சூறாவளி வந்து சூழ்ந்ததே அம்மானை

37. ஏழை பணக்காரர் எல்லோரும் ஒருசமனாய்
தன் தரையாக்கித் தரைமட்டமாய் போச்சு
மண்ணில் புதைத்துச் சீராக வைத்தபணம்
சிதறி அடிபட்டுச் சீரழிந்து போனதுவே
பண அழிவும் பொன் அழிவும் பார்க்கவே கூடாது.
அதர்மமும் மிஞ்சி அலங்கோலமாய்ப் போச்சு.
எவ்வுலகில் கண்டோமோ இந்த அழிமதியை.
சூறாவளி வந்து சூழ்ந்ததே அம்மானை.

38. சூறாவளி என்னும் அம்மானை பாடுதற்கு
மாணிக்கன் பொன்னன் இயற்றி எழுதினதை
ஏதுபிழை இருந்தாலும்தான் பொறுத்து
மண்டூர்த் திருமுருகன் அருள்கொடுத்துத் தானிருந்தார்.
குற்றம் குறையும் கேடுகள் வந்தாலும்
ஆறுகுற்றம் நூறுபிழை அடியேன் நான்செய்த குற்றம்
எல்லாம் பொறுத்து உயிர்த் துணையாய் நின்றருள்வீர்.
அம்மானை பாட அருள் புரிந்தார் வேலனார்.

39. ஆனைமுகத்தோனும் ஐங்கரனும் தான் வாழி
நாவில் சரஸ்பதியாள் நல்லமுத்துதான் வாழி
ஆதிசிவனும் அம்மை உமையும் வாழி
மாயவனும் இங்கே மண்ணளந்தோன் தான் வாழி
ஆதிமுருகா ஐயாவே உன் வாழி
பாடினோர் வாழி பழுதறக் கற்றோர்தான் வாழி
கேட்டோர்கள் வாழி கிளைமன்னர் வாழியவே.

# புயல் காவியம் (1979)

**மா.சிதம்பரப்பிள்ளை:**
கன்னன்குடாவைச் சேர்ந்த இவர் பிரபல நாட்டுக்கூத்து அண்ணாவியாக விளங்கியவர். அதிகமான கூத்துக்களைப் பழக்கியதோடு பல கூத்துக் கலைஞர்களை உருவாக்கியும் உள்ளார். இவரைப் புலவர் என்றே அழைப்பர். தரம் 3 வரை கல்வி கற்றவர். பல வருடங்களுக்கு முன் இறந்துவிட்டார். புயல் காவியம், மட்டக்களப்பு வரலாற்று அம்மானை, கன்னன்குடா கண்ணகி அம்மன் ஆலயத்தில் கள்வர் பிடிபட்ட காவியம், புளியடிமடு வடபத்திரகாளி அம்மன் காவியம், கன்னன்குடா கண்ணகி அம்மன் கும்மிப்பாட்டு, பூபதி புகழாரக் கும்மி, கன்னன்குடா கண்ணகை அம்மன் பேரில் காவடிப்பாட்டு முதலான பல பாடல் நூல்களை அச்சிட்டுள்ளார்.

1. பெருமையுறு மட்டக்களப்பு நகர் நல்லபுகழ்
பேசரிய பொலனறுவை கல்முனை அம்பாறை
உருளவே மானிடர் மரம் மிருகம் எல்லாம்
உலகுதனில் வந்த புயல் தன்னை அடியேனும்
அருமையுடன் காவியமதாகவே பாட
அருள் ஆனைமுகனே உனது பாத மலர்தந்து
ஒரு குறையும் வாராமல் எந்தனிட சிந்தையிலே
ஓடி வரவேணும், வேழ ஐங்கரனே.

2. ஐங்கரனுஞ் சரசுபதி அம்மன் அருளாலும்
அரிய புயல் காவியம் அருளுவேன் கேளும்
பங்கமுடன் ஆயிரத் தொள்ளாயிரத்திப்
பரிவான எழுபத்தி எட்டாவது ஆண்டில்
அங்கதனை அறிவார்கள் கார்த்திகை மாதம்
அழகான தமிழுக்கு ஏழாந் திகதி
எங்கணுங் கிடுகிடென்றதிரவே வந்த புயல்
எவரும் அறிவார் கிழமை வியாழனதுதானே

3. வியாழக்கிழமையது பின்நேரம் ஏழுமணி
வீறிட்டெழுந்த புயல் சீறி சினந்து
அசையவே மாளிகை மரங்குடிசை எல்லாம்
அரிய கடல் நீர் சுவறி மழை பொழியவேதான்

இசையவே வடபக்கமாகவிருந்து
இருள் பரந்தே உலகு கிடுகிடெனவேதான்
விசயாக வந்தபுயல் மறுபடி திரும்பியே
விண்ணதிர மண்ணதிர வந்தவிதங் கேளே.

4. வந்ததங்கே தெற்காக சென்றபுயல் மீண்டும்
வடமேற்கு முகமாக கிடுகிடெனவேதான்
இந்த உலகெங்கணும் நடுங்கவே திரும்பி
ஈசுபரா என்றலர மானிடர் நடுங்கி
எந்தவிதஞ் செய்குவோம் என்றவர் தவிக்க
எங்கணும் இருந்த மரம் இடை இடை தெறிக்க
சிந்தை துயராகியே மானிடர்கள் பட்ட
சில காரணங்கள் தனை உரை செய்குவேனே

5. செய்ய புகழ் மட்டக்களப்பு நகர் தன்னிலே
செல்வமுறு சீமான்கள் ஏழை எளியோரும்
ஐயையோ இதுவென்ன கொடுமை என்றே உலகு
அழியவே போகுதேயென்றவர்கள் கதற
உய்யவகை இல்லாமல் ஓடினவர் சிலபேர்
உயிர் போகுமே என்று வாடினவர் சிலபேர்
தையலர்கள் வாலிபர்கள் சிறியவர்கள் முதியவர்கள்
தான்பட்ட பாடுகளை சொல்லமுடியாதே.

6. முடியாது சிலவற்றைச் சொல்லுகிறேன் கேளும்
மூண்டபுயல் தன்னாலே நின்றமரமெல்லாம்
அடியாலே சாய்ந்தவையும் இடையாலே போனவையும்
ஆகாயந்தன்னிலே சிதறினதுமாக
கொடிய இருள் தன்னிலே கண்குருடர் போலே
குட்டையிலும் பத்தையிலும் கனபேர்கள் வீழ்ந்து
விடியும்வரை மானிடர்கள் மிருகங்கள் போலே
வீடு வீடாகவே ஓடியே திரிந்தார்.

7. ஓடினர் கல்வீடு தேடினவர் சில பேர்
ஓடுகள் விழுந்துதிரம் ஓடினவர் சிலபேர்
வாடியே குழந்தைகளை ஏந்தினவர் சிலபேர்
வாசல் வழிதெரியாமல் விழுந்தவர்கள் சிலபேர்

தேடியே இனத்தவரை ஏங்கினவர் சிலபேர்
தெய்வமே துணை என்று நம்பினவர் சிலபேர்
கூடியே சிலபேர்கள் குளிரால் நடுங்கி
வாடியே மாண்டவர்கள் பலபேர்கள்தானே.

8. அங்கேதான் காலையிலே பார்த்திடவே ஐயோ
ஆறுகடல் பூமியது வேறுலகு போலே
எங்கேதான் பார்த்தாலும் முழுவீடு இல்லை
எழில் பெரிய கல்வீடு ஓடுகளுமில்லை
தங்கையரே தாய்மாரே என்றலறுவார்கள்
தான்பட்ட பாடுகளைச் சொல்லி அழுவார்கள்
பங்கமாய் வட்டையிலே உள்ள பயிரெல்லாம்
பாழாச்சே அரசாங்கம் செய்த உதவிகளே.

9. பாடுகிறேன் பன்குடாவெளி கற்குடாவும்
பாங்கான மகிழவட்டவான் நரிப்புல்லுத் தோட்டம்
காடுதிகழ்கரவெட்டி விளாவட்டவானும்
கருதரிய நாவற்காடு ஈச்சந்தீவூரும்
மேடான மங்கீகட்டுத் தூணடி சாளம்பக் கேணியோடு
குறிஞ்சாமுனை கன்னன் குடாவும்
வாடாத பேரில்லை கரையாக்கன் தீவூரும்
வாகான மண்டபத்தடி ஊரும் ஐயோ.

10. உதவியது சொல்லுவேன் புயலது அடித்த
ஊரெங்கும் அரிசி மா கருவாடு சீனி
பதனமுடன் பால்மாவும் பாணோடு பருப்பும்
பாரிசல் சோறுடனே உடுபிடவை தானும்
அதனமுடன் மக்களுக் கரசாங்கம் ஈந்து
அவர் அவர்கள் சமைத்திடும் சாமான்கள் வாங்க
இதனமுடன் ஒருவீட்டுக்கு நூறு ரூபாய் ஈந்தார்கள்
இனியவர்கள் பேர் புகழுவேன்.

11. புகழுவேன் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவும்
புத்திமிகு பிரதமர் பிரேமதாசா அவரும்
செகமது புகழ் நீதி மந்திரியுமான தேவநாயகமுடனே
சிவசிதம்பரமும் கனகரெத்தினமும்
பகருவேன் ராசதுரை மட்டுநகர் எம்.பி

பரீத் மீராலெவ்வையொடு கூட்டணித் தலைவர்
அகமகிழவே அமிர்தலிங்கமும் கணேசலிங்கமும் மாகாண
அதிபர் பெயர் கேளே.

12. பெயரதுவோ மட்டுநகர் மாகாண அதிபர்
பெருமையுறு டிக்சன் நிலவீர என்போரும் அந்தோனிமுத்து
அயராது சமூகசேவை பகுதி அதிகாரி
அன்புடைய பத்தினி அம்மாவுமேதான்
தயவாகவே உதவி அரசாங்க அதிபர்
தாண்மையுறு சொர்ணவடிவேல் என்பவரும்
இயல்பாகச் சுப்பையாபிள்ளையவர் தானும்
இன்பமுடனே பெரியதம்பி என்போரும்.

13. ஐயையோதான் கொத்தியாவலையாம் ஊரும்
அடுத்த ஊர் இலுப்பையடிச்சேனையதுதானும்
மெய்யாக முனைக்காடு முதலைக்குடாவும்
மேன்மையுறு கொக்கட்டிச் சோலையதுதானும்
செய்ய புகழ் மகிழையடித் தீவினோடு
பண்டாரியாவெளியும் படையாண்ட வெளியும்
உய்யவகை இல்லாமல் அரசையடித்தீவும்
உழன்றார்கள் கடுக்காமுனை பட்டிப்பளையும்.

14. பழைய ஊர் அம்பிளாந்துறை நாவற்காடு
பழுகாமம் பனிச்சையடிச்சேனை போரதீவும்
மழையால் வருந்தினார்கள் வெல்லாவெளியினோடு
மண்டூரு நாகமுனை சவளக்கடையும்
பிழையது செய்தோமோ என்றேங்கினார்கள்
பேரான அம்பாறைக் கொலனி முழுதாக
அழையாமல் வந்த புயல் உன்னிச்சை உறுகாமம்
ஆயித்தியமலையினோடு பல ஊரே.

15. ஊரதுவோ இன்னமும் அநேக நகருண்டு
உற்ற புயல் தன்னாலே பட்ட துயர் கண்டு
தாரணியில் அரசாங்கம் செய்த உதவிபோலே
தாய்தந்தை ஆனாலும் தான்செய்குவாரோ

நேராக இவ்வரசி நீடூழி வாழ்க
வல் விழைவு தானியம் மென்மேலும் ஓங்க
சீராக மன்னவர்கள் செங்கோல் தழைக்க
தென்கதிரை வேல் முருகனே அருளுவாயே.

16. அருள்பெருகு மட்டக்களப்பு நகர் வாழி
அரசாங்க மன்னவர்கள் குடிகளுமே வாழி
இருள் நீங்கி இவ்வுலகும் ஓங்கிடவே வாழி
ஈசுபரன் யீசுபரி பாத மலர் வாழி
பெருமையுறு மாநகரங் கன்னங்குடாவிலுறை
பெண்ணரசி கண்ணகியாள் பாதமலர் வாழி
தருமகுணம் எங்கணுமே ஓங்கிடவே என்னுடைய
தாய் தந்தை பாதமலர் வாழ்க வாழியதே

# சூறாவளி அம்மானை (1979)

**மு. காசுபதி**

இவர் கோட்டைக் கல்லாற்றைச் சேர்ந்தவர். 2ஆம் வகுப்பு வரை கல்வி கற்றிருக்கின்றார். அண்ணாவியாக விளங்கிய அவர் புராண, இதிகாசக் கதைகளை நாடகமாகப் பழக்கினார். 1984 ஆம் ஆண்டு இறந்தார். அவரது சூறாவளி அம்மானை அச்சிடப்பட்டது. கும்மிப்பாடல்கள் உள்ளிட்ட பல பாடல்களை அவர் பாடியுள்ளார்.

**விநாயகர் காப்பு**

சித்தி விநாயகரே சிவனார் திருமகனே
சக்தி கணபதியே சரிந்த வயிற்றோனே
சீரான தென்னிலங்கை செல்வமுள்ள நாடதனில்
மட்டக்களப்பு மாகாண மீதினிலே
சூறாவளிக் காற்று சுழல்காற்று வீசியதை
பேராகப் பாட பெருமான் காப்பாமே

**கதையின் வரலாறு:**

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபத்தெட்டதனில்
கார்த்திகை மாதம் திகதி இருபத்திமூன்றதனில்
காலக்கொடுமையிதோ கடவுளார் சோதனையோ
பார்த்தால் உடல் நடுங்கும் பாரப் புயலும் மழையும்
கடலும் பெருகிக் கலந்தடித்த தம்மானை
பொல்லாத காற்றுப் புயலும் மழையும் கடலும்
ஒன்பது மணித்தியாலம் ஓயாமலே யடித்து
நாட்டை அழித்து நாசப்படுத்தியதால்
வீடு இடிந்து விழுந்து இறந்தவரும்
தென்னைமரம் மேல் விழுந்து செத்து மடிந்தவரும்
சுழல் காற்றில் சிக்கி சுழன்று மடிந்தவரும்
காற்றில் பறந்து கடலில் இறந்தவரும்
வாவி குளம் வாய்க்கால் மடுவில் இறந்தவரும்
தாவ இடமின்றித் தரையில் இறந்தோரும்
மட்டுமிதங்கள் இல்லை மடிந்தவர்கள் அம்மானை
மாடு ஆடு, கோழி வளவிலுள்ள தென்னைமரம்

மாவும் பலாவும் வாழைமரம் தோடைகளும்
ஆலோ டரசு அத்தி வம்மி மா விலுப்பை
தேவாலயங்களுக்குச் சிறந்த நிழல் மரங்கள்
வேரோடு சாய்ந்து விழுந்ததுகாண் அம்மானை
கோரப் பெரும் புயலின் கொடுமைகளைச் சொல்லவென்றால்
நாவோடு நெஞ்சம் நடுங்கிப் பதைபதைக்கும்
குடியிருந்த வீடுகளில் குடிசை முதல் கல்வீடு
அடியோடிடிந்ததுவும் அரைமட்டம் போனதுவும்
ஓடு சரிந்ததுவும் ஓலை பறந்ததுவும்
அழகான கட்டடங்கள் அடியோடு இடிந்ததுவும்
பாடசாலைக் கட்டடத்தைப் பார்க்க முடியாது
பார்க்க முடியாது படிப்பது இனி எந்நாளோ
என்னவென்று சொல்லி எடுத்துரைப்பே னம்மானை.

**ஊர்களின் வரலாறு:**

வாகரை மாங்கேணி மக்கள் மனையிழந்து
தாவ இடமின்றித் தவித்தழுதார் அம்மானை
கடதாசி ஆலைக் கட்டடத்தைப் பேர்த்தெறிந்த
அநியாயச் சூறாவளி யாரை இனி விட்டுவைக்கும்
வாழைச்சேனை ஓட்டமாவடி மீறாவோடை
பாழான காற்றால் பலபேர் இறந்தார்கள்
மக்கள் மனையிழந்தார் மாடு கன்று தானிழந்தார்
குடியிருந்த கட்டடங்கள் தரைமட்டமானதையோ
கிரானூர் சந்திவெளி கீழ்த்திசையிலுள்ளவர்கள்
மடிந்தார் சிலபேர்கள் மற்றோர் மனையிழந்தார்
மொறக்கட்டான்சேனை முத்துப்போல் சித்தாண்டி
அரகரா கந்தாவென் றபயமிட்டார் அந்நேரம்
காலொடிந்தார் கையொடிந்தார் கணக்கறியோம் மாண்டவர்கள்
அரன் மகன் வேலவன் அபயமென்று கையெடுத்தார்
வந்தாறுமூலை வாகான செங்கலடி
கந்தா உனக்கபயம் காருமென்றார் அம்மானை
ஏறாவூர் தன்னாமுனையிலுள்ள மக்களெல்லாம்
பாலர் முதல் பெரியோர் பலபேர் இறந்தார்கள்
மட்டக்களப்பு மாநகரம் பட்டதுயர்
அழுதழுது நேர்ந்தாலும்அநியாயச் சூறாவளி

பலமாயடித்துப் பலபேர் உயிரிழந்தார்
அரசினர் வைத்தியசாலை அரைமட்டம் போனதப்பா
வாட்டுகளும் சேதம் மடிந்தார் சிலபேர்கள்
தேவாலயங்கள் சில சிதறுண்டு போயினகாண்
கோடு தரைமட்டம் கோட்டையிலும் சேதமப்பா
சென் மைக்கல் என்ற திறமையுள்ள பாடசாலை
பலப்பல ஊர் மாணவர்கள் பயிற்சி பெறும் கல்விமனை
கலைமகள் வாழிடங்கள் கவிழ்ந்து விழுந்ததப்பா.
தந்தித் தபால் நிலையம் தவிடுபொடி அம்மானை
மின்விளக்குத் தூண் முறிந்து விழுந்தது பாதையிலே
பாதைகளின் சேதம் பார்க்கமுடியாது
விஜயாவுடன் றீகல் ராஜேஸ்வராத் தியேட்டர்
அடியோடு விழுந்ததுவும் அரைமட்டம் போனதுவும்
பார்த்தால் பரிதாபம் படத்தியேட்டர் அத்தனையும்.
வலையிறவு மாந்தீவு வழுத்த முடியாது
வழுத்தமுடியாது மக்கள் மனை தானிழந்தார்.
அமிர்தகழி ஊரும் அதேநிலைதான் அம்மானை

**மக்களின் துயரம்:**

புருசனைப் பறிகொடுத்து புலம்பி அழுவாரும்
தந்தை தாயை இழந்து தவிக்கும் குழந்தைகளும்
மைந்தரைப் பறிகொடுத்து மயங்கி அழுவாரும்
மனைவியைப் பறிகொடுத்து மனைத்துயர் பட்டவரும்
சொல்லி முடிப்பதென்றால் துயரமிது அம்மானை
இன்னம் சிலமணிக்கு இருந்திருந்தால் அச் சூறை
பாலோடும் நாடு பாலைவனமாயிருக்கும்
உயிரேது மில்லா உடல் சுமந்து மண்மகளும்
காட்சியளித்திருப்பாள் கடவுள் இல்லாமலில்லை.

**புயல் அமர்ந்தது:**

வெற்றி வேல் ஏந்தும் வேல் முருகன் என் பெருமான்
சக்தி சிவபாலன் சண்முகனார் அன்புவைத்து
கடலை அமர்த்தி காற்றைச் சமப்படுத்தி
மழையைக் குறைத்துவிட்டார் மால்மருகன் வேல்முருகன்
அவதிப்படுகையிலே அபயமென்று கைகொடுத்து
ஓங்கார வேல்முருகர் ஓடிவந்து காத்துவிட்டார்

ஆதிசிவன் இயேசு அல்லாவும் புத்தரொடும்
தெய்வ கடாச்சத்தால் தேசத்தார் தான் பிழைத்தார்
உண்ணும் உணவுமின்றி உடுக்கத் துணியுமின்றி
அவதிப்படுகையிலே அரசாங்கம் தானறிந்து
அம்பாறை மட்டக்களப்பிலுள்ள மக்களுக்கு
விமானத்திற் போசனங்கள் விரைவாய் அனுப்பிவைத்தார்
அந்நேர வேளையிலே அயல் நாடும் தானறிந்து
மாவுடன் பாலும் மற்றும் துணி பொருளும்
கூடாரம் போர்வை குழந்தைகளுக்குப் பால்மாவும்
ஏராளமாக இலங்கைக்கு அனுப்பிவைத்தார்
இலங்கையில் உள்ள மக்கள் இரக்கமுடன் அந்நேரம்
வாகனங்கள் மூலம் மக்களுக்குச் சாமான்கள்
பால் மா துணிவகைகள் பகிர்ந்து கொடுத்தார்கள்
மா பருப்பு சீனி அரிசி கருவாடு
சீத்தைத் துவாய் சாரம் சேட்டுடனே போர்வைகளும்
பாதித்த மக்களுக்குப் பகிர்ந்து கொடுப்பதற்கு
அரசாங்கம் அந்நேரம் அனுப்பிவைத்த தம்மானை
இப்படியாக இருக்கின்ற வேளையிலே
மன்னார்த் தொகுதி எம்.பி. மலைத் தொகுதி எம்.பி. யுடன்
யாழ்ப்பாணத்து எம்.பி. நவரெத்தின எம்.பி.யுடன்
தொண்டர் படையினருடனே துரிதமாய் வந்தவர்கள்
மட்டக்களப்பு மாகாணம் மீதினிலே
வீடு அமைப்பதுவும் வீதி திருத்துவதும்
மக்கள் வசிப்பதற்கு மனை அமைத்தார் அம்மானை
மட்டக்களப்பு எம்.பி. இராசதுரை அந்நேரம்
மக்கள் படுந்துயரம் மனதிலே தான் உணர்ந்து
மக்களுக்கு நற்சேவை புரிந்தார்கள் அந்நேரம்
பட்டிருப்புத் தொகுதி எம்.பி.பட்டார் பெரும் துயரம்
உணவுப்பொருள் வகையும் உடுதுணியும் தான்
ஓலைக் கிடுகு முதல் ஊருக்கு ஊர் கொண்டு சென்று
வீதி வெளியாக்கி வீடுகளும் தான் அமைத்தார்
இவ்விதமாக இன்னல் படுகிறதை
யாழ்ப்பாண மக்கள் நல்லுதவி செய்வதற்கு
மா தேயிலை சீனி மருந்து குளிசைகளும்
ஓலை முதல் அரிசி உடுப்புடனே லாம்பெண்ணை

தொண்டர் படையும் துரிதமாய் அனுப்பிவைத்தார்
வந்த பொருள் அத்தனையும் மக்களுக்குத் தான் கொடுத்தார்
இக்கொடிய சூறாவளி இந்நாட்டில் வீசியதால்
கஸ்ட நிலை அடைந்து கலங்குகிறார் மக்களெல்லாம்
பாடிய ஊர்களிலே பல ஊர் குறிக்கவில்லை
எல்லா ஊரும் இந்நிலையில்இருக்கிறது அம்மானை
பாடிய ஊர்களிலே பரகதி சேர்ந்த உயிர்
கோடியோ லன்று குறித்தெழுதவொண்ணாது
காலக் கொடுமையிதோ கலியன் விளையாட்டோ
பஞ்சப்படி ஏழைகட்குப் பார் மன்னர் தான்கொடுக்க
மனைவி மக்கள் தவிக்க வாழ்ந்தவர்கள் பாதகமோ
பிச்சையிட்டு உண்ணாத பெரும்பாவி பாதகமோ
கணவனைத் தள்ளிவிட்ட கசடிகளின் பாதகமோ
மாதா பிதாவின் வயிறெரியச் செய்ததுவோ
கடவுளில்லை என்று சொல்லும் கயவர்களின் பாதகமோ
பொல்லாத சூறாவளி புயல்தான் வீசிடினும்
தெய்வ கடாச்சத்தால் தேசத்தார் தான் பிழைத்தார்
தீமை புரியாது சிறப்பாக வாழ்ந்திருப்போம்
ஆதிசிவன் வாழி ஆனைமுகனும் வாழி
மாயவனார் வாழி வடிவேலர் தான் வாழி
நாமகளும் வாழி நான்மறையும் தான் வாழி
நீதி மன்னர் வாழி நெடுமாலையன் வாழி
பாடினோர் வாழி படித்தோர் மிக வாழி
கேட்டோரும் வாழி கிளைகள் சுற்றம் தான் வாழி
வாழ்க வளம் ஓங்கி வளம் பெருக வாழியவே

# 1957 ஆம் ஆண்டு பெருங்காற்று மழையால் ஏற்பட்ட பெருவெள்ளத்தம்மானை (1957)

**தம்பிமுத்து சுப்பிரமணியம்**

சித்தாண்டியைச் சேர்ந்தவர். தரம் ஒன்று வரை கல்வி கற்ற இவர் விவசாயத் தொழில் புரிந்தார். பல வருடங்களுக்கு முன் இறந்துவிட்டார். பெருவெள்ளத் தம்மானை, தாந்தாமலை அம்மானை முதலிய நெடும் பாடல்களைப் பாடியுள்ளார்.

சீரான இலங்கை நகர் செல்வமது போனதைத்தான்
பேராகப் பாடப் பெருமான் கணபதியுங் காப்பாமே
ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பத்து ஏழுதனில்
தாயதி ஆதனத்தில் சஞ்சலம் வந்தது போல்
மார்கழி மாதம் திகதி இருபத்தியைந்திரவு
பாரெங்கும் வெள்ளம் பகவானால் காற்று மழை
தாங்கொண்ணாத் தண்ணீர் தத்தளித்து வந்ததினால்
பாங்கான வீடுகள் பளபளத்திடிந்ததுவே
கண்டார் மனிதரெல்லாம் கைகால் தடுமாறி
நின்றார் நெடுநேரம் நினைவு தப்பியம்மானை
பிள்ளைகளைத் தூக்கிப் பெருமூச்சிடுவாரும்
வெள்ளையெலி யேறும் விநாயகர் காப்பாரென்பாரும்
அரசினர் பள்ளியிலே அமந்தார் சிலபேர்கள்
தரைமட்டமான தென்று தடுமாறினார்கள் சிலர்
எங்கே திடலென்று ஏங்கித் திரிவாரும்
தங்க இடமில்லாமல் தயங்கி அழுவாரும்
மங்கையரைப் பார்த்து மணவாளன் ஏதுசொல்வான்
நங்கையரே நாகரிகம் நாடுகளில் வந்ததினால்
ஆகடியம் செய்தவரால் அலைகிறோம் நாங்களப்பா
ஏகமனமானவர்கள் இலங்கையிலே இல்லையப்பா
இப்படியா யூற்சனங்களேங்கி அழுகிறது
சொற்படி கேளாத மங்கை துயரமென்றாரம்மானை
சாய்ந்த கொண்டை பின்னல் சனியனால் வந்ததென்று
காய்ந்து மனமேங்கிக் கணவனைப் பார்த்தழுவாள்

எட்டுமுழச் சேலை கட்டி இதற்குமேல் சட்டையிட்டு
தட்டு உடுப்பால் வந்ததென்று தாய்முகத்தைப் பார்த்தழுவாள்
நீண்ட கொண்டை கட்டி நெடுங்காலமாய்த் திரிந்தேன்
ஆண்டவனால் வந்த அழிமதியென்றே அழுவாள்
பின்னல் கொண்டை கட்டிப் பிறரை மதியாக் குற்றம்
அன்னை தந்தை பார்க்க அலையவந்ததம்மானை
என்புருசன் தானிருக்க இன்னுமொருவனைத் தேடித்
தன்கணவன் செய்தருமம் தான் பலித்ததென்றழுவாள்
தாய்தந்தை பசித்திருக்க சமைத்த கறி சோறிருக்கப்
பேயென்று தள்ளி வைத்த பெண்புத்தியோ என்றழுவாள்
கணவனுக்கு முன்னே கறிசோறு உண்ட குற்றம்
தணல் போல வந்து மூண்டதென்று தானழுவாள்
கைபிடித்த கணவனைக் கடவுளென்று பாராமல்
தைப்பிறப்புக்கு முன்னே சாகவந்த தென்றழுவாள்
வாடும் முகம் பார்த்து மனிதருக்கீயாததினால்
நாடு துயர் கண்டேனே நான் செய்யேனென்றழுவாள்
தாயதி ஆதனத்தைத் தனியே எடுத்ததினால்
நாய்போல் கதறி நானலயக் காலமிதோ
இன்னமொரு முழ தண்ணீரேறியெந்தன் வீட்டில் வந்தால்
தென்னை மரம் சாய்ந்ததுபோல தெருவில் கிடப்பேனே
என்று அழுது இனித் தெய்வம் காத்ததென்று
நின்று மனமேங்கியினிப் பிழைத்தேனென்றழுவாள்
பச்சை மிளகாய் கிடையா பால்தயிரும் தான்கிடையா
மச்சமது தான்கிடையா மணவாளா என்றழுவாள்
யாழ்ப்பாணம் தன்னைக் காப்பாற்ற அரசாட்சி
வாய்ப்பான ஆகாய விமானமதிலுணவேற்றி
சாகவிடாமல் தற்காக்க வேணுமென்று
ஏகமனதாக இறக்கினார் சாமான்கள்
வேணுமென்ற சாமான் விமானத்தில் தானேற்றி
காணுமென்று சொல்லளவும் கற்பித்தாரம்மானை
திருகோணமலைப் பகுதி செப்புகிறேன் கேளுமினி
அருகான ஊர்ப்பகுதி அன்னமே இன்னமுங்கேள்
தம்பலகாமமென் பார்சாம்பற்தீவு நிலாவெளியாம்
அன்பான குச்சவெளி ஆழ்கடலோவென்றழுதார்
கிளிவெட்டி மேன்காமம் கீழ்த்திசையிலுள்ளோரை

அழிமதி செய்த வெள்ளமாரை விடப்போகுதம்மா
கொட்டியாரப் பகுதி கொதித்து மழை பெய்ததினால்
பட்டியொடு மாடுகன்று பரகதியாச்சுதம்மா
சம்பூர் கூனித்தீவு சகலதுமழிந்ததென்று
அன்பான பேர்கள் அறிவித்தாரம்மானை
வெருகல் பகுதியெல்லாம் வெள்ளத்தால் சேதமென்று
அருகிருக்கும் கதிரைவெளி அனைவரும் கூறுகிறார்
மட்டக்களப்பில் வந்த மழையும் காற்றும்
எட்டுநாளாக இரவுபகலாய் பெய்து
முறக்கட்டாஞ்சேனை முத்துப்போற் சித்தாண்டி
அரகரா கந்தாவென் றாடினர் காணம்மானை
தம்பன்கடவைப் பகுதி தங்க இடமில்லாமல்
அம்மனால் வந்ததென்று அழுதிட்டாரூரவரும்
வந்தாறுமூலை வடிவான செங்கலடி
கந்தா உனக்கபயம் காரென்றாரம்மானை
ஏறாவூர் தன்னாமுனையிலுள்ள மக்களெல்லாம்
மாறாத பஞ்சம் வரப்போகுதென்றழுதார்
தாளங்குடா ஐயோ! தங்கையரே புதுக்குடியிருப்பு
பாழான காற்றால் பலபேரலைந்தார்கள்
களுவாஞ்சிகுடியும் கல்லாறும் பட்டதுயர்
அழுதழுது நேந்தாலுமதிகமழை பெய்ததம்மா
கல்முனைக் கரைவாகு காரைநகரென்பார்கள்
வல்லவராம் முன்னோர் வடிச்சல் வெட்டித்தானிருந்தார்கள்
சாய்ந்தமருதூற் சனங்கள் தவித்தோடிப் பள்ளியிலே
ஆய்ந்த புத்திகெட்டு அல்லாவே தஞ்சமென்று
ஊனுறக்கமின்றி ஓலமிட்டாரன்றிரவில்
சேனுயந்த பள்ளிதிடீரென்றிடிந்ததுவே
காலொடிந்தார் கையொடிந்தார் கணக்கறியோ மாண்டவர்கள்
தோலுரித்த மானதுபோல் துடித்தழுதாரம்மானை
இப்படித்தானிருக்க இளமயிலே இன்னமுங்கேள்
முற்பழியால் வந்ததுதானோ முருகன் செயலோ அறியோம்
அம்பாறை என்பாரடுத்த தொரு இக்கினியா
நம்பவொண்ணாக் குளம் கட்டி நாட்டிற் தண்ணீரைவிட்டார்
குளமில்லாக் காலம் குடியிருந்தார் முன்னோர்கள்
தளமிடிந்து வீடு தத்தளித்ததில்லையென்பார்

சம்மாந்துறைப்பகுதி தாங்கவொண்ணா வெள்ளமென்று
கம்மாளப் பிள்ளைகள் தான் கண்டுவந்து சொன்னார்கள்
தம்பலவத்தையென்பார் தங்கையரே மண்டூராம்
அம்பலம் போலே அழிந்ததென்றாரம்மானை
பழுகாமமெரிவில் பட்டிருப்புக் குறுமண்வெளி
அழுதழுது ஊரவர்கள் ஐயோவென்றோலமிட்டார்.
மகிழடித்தீவு வடிச்சலுள்ள பள்ளநிலம்
அழகுள்ள வீடெல்லா மழிந்ததென்றாரம்மானை
சிப்பிமடுவில் நின்ற திறமான புளியமரம்
தப்பிவிடுவோமென்று சனங்களெல்லாம் தானேற
மரம் சாய எல்லோரும் மாயவா என்றழுது
தரைமட்டம் காணாமல் தானிறந்தாரெல்லோரும்
ஈசன் திருப்பணியிலிடும்பு செய்த பாதகமோ
மாசகன்ற மாதவற்கு வம்பு செய்த பாதகமோ
தொண்டரென நடித்துத் தோகையரைக் கற்பழித்த
சண்டாளர் தம்மால்தான் வந்த பாதகமோ
பஞ்சப்படி ஏழைகட்குப் பார் மன்னர் தான்கொடுக்க
அஞ்சாமற் செல்வர் சிலர் அபகரித்த பாதகமோ
தீர்த்தக் கரைதனிலே திருடி உயிர்தான் வாழ்ந்தோர்
மாற்கமது விட்டோர் மாபாதகம்தானோ
கள்ளுண்டு தள்ளாடிக் கற்றோர் கணக்கறியார்
உள்ளமுடைய சில உலுத்தர் செய்த பாதகமோ
எத்தனையோ இன்னுமெண்ணவொண்ணாப் பாதகங்கள்
மெத்திய தாலிக்கொடுமை விளைந்ததோ நானறியேன்
பாரிய ஊர்களிலே பரகதி சேர்ந்தவர்கள்
கோடிசனமோ அறியேன் குறித்தெழுத வொண்ணாதே
அநியாயம் செய்யாது அகிலத்து மக்களினி
இனிதாக வாழ எங்களிலங்கை நகர்தான் விளங்க
கனக்க மழை பொழிந்து காசினியெல்லாம் செழிக்கப்
பிணக்கற்று மன்னர் செங்கோல் பெருகவி உழவுயர
ஆனைமுகன் வாழி அரிகேசவன் வாழி
மானைக் கரத்தணிந்த மாதேவன் தான்வாழி
எங்கள் குலம் தழைக்க இலங்கை நகர் வந்தபிரான்
தங்கவடிவேலிருதாள் சரணமிக வாழியவே

# சுனாமி கடல் கொந்தளிப்பு காவியம் (2005)

**எம்.எம்.எம். இஸ்மாயில்**

ஏறாவூரைச் சேர்ந்தவர். தரம் 10 வரை கல்வி கற்ற இவர் இலிகிதராகப் பணியாற்றினார். ஒருசில வருடங்களுக்கு முன் மரணமடைந்தார். சுனாமி பேரலையின் அனர்த்த காவியம், சூறாவளிக் காவியம், வெளிநாடு போன வெள்ளம்மா (இணை) முதலிய பாடல்களைப் பாடியுள்ளார்.

1. துய்தான இறைவனின் சோதனையால் வந்த
துயரமாம் அனர்த்தத்தின் துலங்கும் காவியம் பாட
தூயவனே எனக்கு துணைபுரிய
அருள் புரிவாய் ஆளும் றஹ்மானே.

2. இலங்குமது இரண்டாயிரத்து நான்கில்
துவங்குமது டிசம்பர் இருபத்தி ஆறில்
துய்தான கிழமைகளில் ஞாயிற்றுக் கிழமை
தூயவனே உன்னுடைய சோதனையு மாச்சே.

3. ஞாயிற்றுக் கிழமையது நேரம் எட்டு மணி இருபது
நானிலத்தில் உள்ள மக்களை நடுக்கடலில்
நல்லோனே பெரியோனே திசைகள் எங்கும்
திக்கு தெரியாமல் திசைமாறி ஓட்ட மதுகோரம்.

4. மருதமுனை எண்ணூறு மீற்றர் அலைவேகம்
பன்னிரெண்டு அடிவேகம் கடலலையின் ஓசை
மாட மாளிகைகள் மண்ணோடு தரைமட்டமாச்சே
மனம் பிழை பொறுத்திரும் மாபெரியோனே.

5. கடலோரப்பகுதி கல்முனைக்குடி கல்லாறு
கடும் கடல் அலையின் ஓசை கட்டிடம் எங்கே
சாந்தமான சாய்ந்தமருதை கரையோரப் பகுதி
கடலோடு சங்கமமாச்சே ஐயோ! ஐயோ! அப்பா.

6. எட்டு பிள்ளைகளையும் இழந்ததோர் மங்கை
ஏங்கித் தவிக்கும் துடிதுடிக்கும் காட்சி
கண்ணிலே கண்டோர் யாராக இருந்தாலும்
கல்லான நெஞ்சையும் புண்ணாக்குமம்மா.

7. உயிரை இழந்தவர்கள் எத்தனையோ பேர்கள்
உடைமை இழந்தவர்கள் எத்தனையோ பேர்கள்
கல்வீடு நகை நட்டு அத்தனையும் இழந்து
காணாத் துயரில் கண்ணீரும் சிந்தி.

8. கல்முனைக் குடியில் ஒரு சம்பவம் உண்டு
காணாத புதுமையது சொல்லுகிறேன் கேளு
ஒன்பது மாதக் குழந்தை உயிருடன் ஒன்று
ஓங்கும் மரத்தில் தூங்குவதைக் கண்டு வியந்து

9. ஊடகங்கள் எல்லாம் ஓடோடி வந்து
ஒலிபரப்பிய வானொலியில் அன்று
இறைவனின் செயலால் எல்லோரும் நம்பி
ஏங்கி இரங்கினார்கள் இறைவனை நம்பி

10. மூதூரில் அறுநூர் பேர் பலி எங்கும் மரண ஓலம்
ஆறாயிரம் குடும்பம் அகதிகள் ஆச்சி
ஆலயடி சேனையில் அகதி முகாம் உண்டு
ஆண்டவனே அனைத்தும் பிழை பொறுப்பாயே.

11. பொன்னான பொத்துவில் மண்ணாகப் போச்சாமே
அருகம்ப வாடி வீடு அனலாகிப் போச்சே
அடியோடு மண்ணோடு தவிடுபொடி அநியாயம்
முன்னாள் அமைச்சர் மனைவி மக்கள் மீட்பு

12. காத்தான்குடி கதிரவெளி களுவங்கேணி மாங்கேணி
வாகரை பனிச்சங்கேணி விட்டதா கொந்தளிப்பு
கல்குடா சவுக்கடி மக்கள் சஞ்சலம் ஆச்சே
காட்டுத் தண்ணீர் மோட்டுத் தண்ணீர் கடுமோசமாச்சே.

13. புன்னைக்குடா வீதியிலே பொன்னான வீடுகள்
பொங்கி எழும்புதாம் புயல் வேகத் தண்ணீர்
தாமரைக் கேணியிலே தலைதாண்டிப் போனதாம்
மீராகேணியிலே மீதம் ஏதுமில்லை.

14. கல்லடிப் பாலமது கடலாக மாறி
கணக்கில்லா சனங்களெல்லாம் கண்ட திசை மாறி
சொல்லொண்ணாத் துயரத்தால் ஓடோடி வந்து
திரண்டார்கள் அனைவரும் அரசயடியில்.

15. பிள்ளை தாய் தந்தை மதிக்காத காரணமோ
பெரியோர்க்குருநாதரை மதிக்காத காரணமோ
இனசனம் பந்துகளை மதிக்காத காரணமோ
எதிர்கால சந்ததியினர் மனம் பொறுப்பாய் இறைவா.

16. கொள்ளையடித்த வித்தைகள் கேளுங்கள் அம்மா
ஊரிலுள்ள T.V ரேடியோவுக்கு உரிமையாம்
உரிமை பேசுதல் மாறுதல் மாயவனே
உரிமைக்கு உரிமை உறவினர் உண்டாம்.

17. பசுந்தோல் போத்திய புலிகளுக்கு வேட்டை
பைலுக்குள் பாவை அவளுடைய பெயர் பைங்கிளியாம்
பங்கீட்டுப் பருப்பு முதல் அரிசிமுதல் பாலியர்களுக்கு
பங்கீட்டு ரூபாய்க்கும் வேட்டையது வேட்டை.

18. உணவு முத்திரை ஈட்டுக்கு வட்டிக்குக் குட்டி
ஒன்றுக்கு முக்கால் ஒருமாத வட்டியாம்
விதானைக்கும் இதில் ஒரு பங்கு உண்டாம்
பங்கு இல்லாவிட்டால் பகிரங்க மாட்டல்.

19 வேளாண்மை அறுவடை கூலியது கொடுமை
கூலிக்கார மக்களுக்கு கொடுக்காத கொடுமை
உள்ளவன் போடியவன் கூலி கொடாத கொடுமை
குண்டகம் மனதில் கொண்டவன் அவன்.

20. ஊரிலொரு போடியாராம் கொடியவன் அவன்
ஊரிலொரு பகுதி திருட்டுச் சொத்தாம் அவை
ஊரே அழுது புலம்பிடும் நேரமது
இல்லையென்று சொல்லிவிட்டான்பே..பே..

21. பாடசாலையில் பகிரங்க கூட்டம்
பட்டினி பசி தீர்க்கும் நிவாரணக் கூட்டம்
பதறித் துடித்து எடுத்தார்கள் சேவைகள்
விவேகமாய் செய்தார்கள் நிவாரண சேவை

22. அரசாங்க மந்திரிகள் அவசர அனுமதி
அரசாங்க விமானங்கள் ஆகாயத்தில் பறக்க
அக்கரைப் பற்று முதல் ஆர்க்கமாய் பார்வையிட்டு
கொடுத்தார்கள் உடனே அவசர ஓடர்

23. ஈகை மனம் படைத்த ஈமானுடைய மக்கள்
இனமதம் பாராது கொடுக்கின்ற பொருட்கள்
இரக்கமுடன் கருணையுடன் ஒன்று சேர்த்து
ஏற்றிப்பறித்தார்கள் எல்லாமிழந்த மக்களுக்கு

24. மானிடனே ஆண்டவனே மன்றாட்டம் என்ன
மாநிலத்தில் மனிதகுலம் வேண்டுகிறோம் நாங்கள்
மங்காத மன்னவனே மனம் பிழை பொறுத்திட
பத்து நாட்டு மக்களும் பாவமன்னிப்பாய் இறைவா.

25. இனிமேல் இருக்கின்ற மக்கள் இளகிய மனதுடன்
எல்லோரும் சமமாக சேர்ந்து இரத்தமது சிவப்பு
இனபேதம் சாதி பேதமைகள் மறைந்து
இனிமேலாவது இரக்கத்துடன் இணைந்து வாழ்வோம்.

# 2

## பிள்ளைத் தவம்

**மைமுநாச்சி**

ஏறாவூரைச் சேர்ந்தவர். 19 ஆம் நூற்றாண்டு அல்லது 20 ஆம் நூற்றாண்டு ஆரம்பத்தில் வாழ்ந்தவராகக் கூறப்படுகின்றது. கவி பாட வல்லவரான இவர் பிள்ளைப் பாக்கியம் இல்லாத தனது நிலையை எண்ணி ''பிள்ளைத் தவம்'' என்ற தலைப்பின் கீழ் பல கவிகளைப் பாடியதாகக் கூறப்படுகின்றது. அவற்றில் சில கவிகளே கிடைக்கப் பெற்றன.

1. ஆதி பராபரனே றெப்பில் ஆலமீனே ஆண்டவனே
   ஓதியுனைப் புகழ்வேன் எனக்கொரு உதவி செய்வாய் வல்லவனே

2. அத்தியிலோர் பிஞ்சுக் காயை நீ அழகாய் பிடிக்க வைத்தாய்
   என் வயிற்றில் ஒரு புழுவை நீ ஏத்தி வைக்க மாட்டாயா

3. அத்திமரம் இத்திமரம் அதன் நடுவே வேப்பமரம்
   வேப்பமரத்தின் கீழே விளையாடக் குழந்தையைத் தா

4. கட்டிலிலே நான் படுத்து கண்ணுறங்கும் வேளையிலே என்னைத்
   தட்டி எழுப்பிவிட எனக்கொரு பாலகனைத்தா இறைவா

5. புல்லைப் பிடிங்கி வைச்சன் புறவளவைத் தூத்து வைச்சேன்
   கோழி அடியொழிய ஒரு குழந்தையடி காணலியே

6. பள்ளிக் கூடமிருந்து மகனார் பசியோட வருவாரென்று
   சோறு வைத்துக் காத்திருக்க எண்ட சோட்ட எப்ப தீருவதோ

7. கையில் குடை பிடித்து மகனார் கூட்டாளி மாருடனே
   ஓடி வருவாரென்று நான் வழிபார்த்து நிற்பதெப்போ

8. மன்னவனே உன்னடியாள் மைமுநாச்சியென்னும் பேருடையாள்
   மலடி என்னும் பேரழிந்து நான் மனநிறைவில் வாழ்வதெப்போ

9. வேப்பிலைக் கசாயம் உண்டேன் வெள்ளறுகுச் சாறும் உண்டேன்
   உள்ள வியாதிக்கெல்லாம் ஒட்டு மருந்தும் உண்டேன்
   நான் கண்ட பலன் அல்லா ஒன்றுமில்லை

10. சரிவா உமறு நாச்சி சகர்வான் அலிமாநாச்சி
தருவாய் ஒரு குழந்தை தங்க சுபைதா நாச்சி

11. புவியில் நான் பெற்றெடுத்த புள்ள சுலைகா நாச்சி என்ற
பேரு சொல்லி நான் அழைப்பதெப்போ

12. அழுதழுது வாடுகிறேன் நான் உனதடியாள் மைமுநாச்சி
தொழுதழுது கேட்கிறேன் நான் எனக்கொரு குழந்தை வரம் தா
இறைவா

13. மருதோண்டி கொண்டு வரும் மாதரெல்லாம் திரண்டு
தெருவீதி நின்று கொண்டு செல்லச் செருக்குக் காட்ட

14. புருச தெருவளந்து ஓடிப்போய் நான் பார்க்க
எனக்கொரு புள்ளயத் தா வல்லவனே

15. மேள தாளம் அடிக்க மேல் கட்டியம் குடை பிடிக்க
தாளம் தம்புறா வீணையிட தக்க பூபாளம் பறக்க

16. வாழும் மகளாருக்கு மருதோண்டி கொண்டுவர
எனக்கொரு குழந்தையைத் தா ஆண்டவனே.

17. ஆதி பராபரனே றெப்பில் ஆலமீன் ஆண்டவனே
ஓதி உனைப் புகழ்வேன் எனக்கொரு உதவி செய்வாய்
வல்லவனே

# கவிகள் – 1 (1991)

**முஸ்லிம் வயோதிபப் பெண்**

அக்கரைப்பற்றுப் பிரதேசத்தைச் சேர்ந்த இவர் கவிகளைப் புனைவதில் மிக்க திறமை பெற்றவர். இவரது கவிகளில் பாவனை அற்ற துயர வெளிப்பாடு களாக அமையும் மூன்று கவித் தொகுதிகள் முக்கியமானவை. கவிகள் மூலம் தொடர்பாடல் கொள்ளும் வழக்கு கிழக்கிலங்கை முஸ்லிம்களிடம் இருந்து வந்தமைக்கு இக்கவித்தொகுதிகள் சிறந்த எடுத்துக் காட்டுகளாகும்.

1. இருளில் மறைந்து எங்கும் அகதாய் அமைந்து - அந்த
அருள் ஒளி தங்கும் - நம்மள் ஆதியிடம் நான் வாதார்றன்

2. அல்லாகுத்தாலா - என்ர அருகில் அமைந்த பங்கெ - நான்
பாட்டெடுத்துப் படிக்கேன் இதைப் பார் மகளே

3. பத்துமாதம் நான் சுமந்து - ஒன்னப் பாராட்டி பெத்தெடுத்த
குத்தமிது என்று - நான் குழறி அழுதேன் மகளே

4. ஊட்டி வளத்து ஒன்னளவில் நான் உத்தரித்து
பாடுபட்டேன் என்று - இந்தப் பரிசி தந்தாய் என்ர சீனி மகள்

5. தாங்காமல் தாங்கி - என்ர சதிர் எறி
ஏங்கி வழிநடக்கன் மகளே- எனக்கி என்ன விதி வந்ததென்று

6. கண்ணால் அழுதால் சனம் கண்டு கதை கேக்கும் என்று - என்ர
கல்பால் அழுகிறத்த - ஆரும் காணல்ல என்ர சீனிமகள்

7. என்ர கருவில் அமைப்போ - அவன் கலத்தால் எழுதினதோ - என்ர
தாய் தகப்பன் பங்கோ - எனக்கி தாங்குதில்ல என்ர சீனி மகள்

8. மூணு கட்டும் கட்டி முகமூடியும் தான் போட்டு - என்ன
மண்ணறையில் வெச்சாலும் - எனக்கி மாறுமோகா என்ர சீனிமகள்

9. இந்தப் பக்கத்தே எடுத்து - நீ பரப்பும் அந்த வேளையில - என்ர
பாலுகந்த நெஞ்சி - மகளே பதறினத்த யார் அறிவார்

10. மாறு கதைத்து - என்ர மனதோ பதறேக்க
ஏன் துணிஞ்சாய் என்று - நான் இருந்தழுதேன் என்ர சீனிமகள்

11. மாண்டு மடிஞ்சி - நான் மண்ணுலகம் போனாலும் - நேக்கி
ஆறாக் கவல இது அயக்கிறதோ என்ர சீனிமகளே

12. மக்களுக்காக நான் மனம் துணிஞ்சி - தேர் ஏறிக்
காத்தில் பறந்தேன் மகளாரெ கரைசேப்பம் என்று செல்லி

13. தன்ன மறந்து - என்ர சதிரம் திமிரேறி
எண்ணி அழுத கண்ணீர் - மகள் ஏழு கடல் பொங்கிறது

14. கண்ணால் அழுது கடல் நீராய் கொப்பளிச்சி - என்ர
மார் மேல் விழுந்த தண்ணி - மகளே ஒன்ன மவுசறவே கக்கிரிக்கி

15. ஒன்னத் தாவி அணச்சி - நான் தந்த முலப்பால அறியாம
மாறு சைதார் ஒன் புருசன் - மகளே என்ர மனம் கிடந்து பத்துதுடி

16. என்ர ஈரலில் வாள் பூட்டி இழுத்து ஒரு துண்டறுத்து
வெந்நீரில் போட்டது போல் - நான் வீதியில நிண்டழுதன்

17. என்ர மனம் போலே என்று-என்ர ஈரலையும் நான் கொடுத்தன் - இந்த
மாறு நினைப்பார் என்று - நான் மதிக்க இல்லகா மகளே

18. என்ர ஈரலப் பிச்சி இளம் வாழ இலக்கி மேல வச்சி
தின்னக் கொடுத்தன் - எனக்கி தீம சைவார் என்று சொல்லி

19. பட்டிக்கித் தலயாரி மக்களப் பாதுகாக்கும் ஓர் தலைவன் - நம்முட
குடும்ப விளக்கென்று நான் குழரித்தன்கா மகளே

20. மாறாத் துயர மனதிலே நீ ஏற்படுத்தி இருந்தே
தூரத்தில் உட்கார்ந்து இரிக்கான் மகளே

21. என்ர ஈரலுக்கும் தாமரைக்கும் எடநடுவெ வெச்சிருந்தன் - இந்த
மாறு நினைப்பார் என்று - நான் மதிக்கல்ல என்ர சீனிமகள்

22. எரந்து துவாக் கேட்டு - அந்த இறைவனிடம் தூக்கி வச்சி
அக்குறு சைதன் அவன்ர சோதினைக்கி நான் ஆளாகி

23. கோடி வரிசம் நீங்க கூடித் தவம் சைதாலும் - ஒன்ன
கண்டெடுத்த தாய் நெருப்பால் மகளே - நீ ஈடேறப் போறதில்ல

24. என்ர திரய வளச்சி- நீ தீனாவப் போட்டிருக்காய் - அது
ஆறா நெருப்பு -அது அழியர எப்ப என்ர சீனிமகள்

25. குடியிருந்த கோயிலுக்கு கொள்ளி வெச்சி -நீ
எரிக்க ஊத்தினெ பேரொளி னெக்கு ஒழியிரெப்ப என்ர சீனிமகள்

26. என்ர மானத்தப் போக்கி - என்ர மதிப்பு குறயவெக்க - அவர்
ஏன் துணிஞ்சார் எண்டு நான் இருந்தழுதேன் என்ர சீனிமகள்

27. சாகத் துணிஞ்சன் என்ர தைரியத்த நான் எழந்து
வாழ வழி தேடுகிறன் - என்ர வருச மகள் வந்து சேருமட்டும்.

28. எலும்பில்லா நாக்காலே ஏண்ட மட்டும் அவர் கதைத்தார் - அந்த
நாவ அடக்க - அவன்ர நாள் வருகும்கா மகளே

29. ஏண்ட மட்டும் சொன்னாலும் எனக்குக் கவல இல்ல
என்னப் படச்ச றகுமான் - அந்தப் பங்கு கொடுப்பான் மகளே

30. என்ர தங்க மகளார் சவுதியிலிருந்து வந்தாவெண்டால்
என்ர முடிவு தெரியும் - நான் அத முன்னே செல்லப் போறதில்ல

31. பட்டணத்தச் சுத்திப் பறந்து வரும் காக்கைகாள் - என்ர
மகளாரக் கண்டால் - என்ர மறுமொழியச் செல்லிடுங்கோ

32. கடலக் கடந்து கப்பலிலே போன மகள்
ஊருவந்து சேருமட்டும் - என்ர உயிரிருக்கும் என்றழுதேன்

33. தங்க மகளாரிடத்தில் - என்ர சரித்திரத்த நான் கதச்சி
மண்மறைவேன் என்று - என்ர மகளாரே நான் காத்திரிக்கன்

34. வாங்கி எடுத்து - என்ர வலது கைய நான் கொடுத்து
தாங்கி சவுற அடைந்தேன் - என்ர தங்கமகள் வந்து சேருமட்டும்

35. காத்துக்க அலை எழும்பி கரைக்கு நுரை வந்தது போல்
ஒருதுக் காத்து மகளே - என்ர உள்ளமெல்லாம் பொங்குதுகா

36. பால் மரத்த வெட்டி பட்ட கழத்தியிருக்காய் - அந்த
வேதினெ தீராம - மகளே நான் வீதியில நிண்டழுதன்

37. வீதியில நிண்டு - நான் விம்மி அழுத கண்ணீர்
ஆறாக ஓடுறத்த - இஞ்ச ஆர் அறிவார் என்ர சீனிமகள்

38. நேரான பாதையிலே நெடுநாளாப் போன போது - என்ன
வீணாக் கதச்ச மகளே அந்த வேதினய நான் என்ன சைவன்

39. ஆறாக் காரியத்த - எனக்கி அழியாமல் தந்திரிக்காக
மாறுதில்லே என்மனதில் மகளே - நான் மவுசரிலே சேருமட்டும்

40. முந்தி எடுத்து முதல் சோட்ட தீத்த மகன் - அந்த
மாறு நினச்சார் என்று - நான் மண்ண மண்ணத் திண்டழுதேன்

41. காதும் அடச்சி - என்ர கண்ணும் இருட்டாகி
நாவும் உலர்ந்தேன் மகளே - என்ர நாணயங்கள் பெரிதென்று

42. ஊரெல்லாம் பேரு உலகமெல்லாம் என்ர கதை - என்ர
நாதம் எழும்பி மகள் நாலு பக்கம் நீ வீச வெச்சாக

43. ஆறியிருப்பேன் ஆறிப்போம் என்று நான் பாப்பேன்
மாறுதில்லே என்மனதில்-மகளே நீ மருந்து போட்டுச் சுட்டபுண்ணு

44. ஒண்ட புருசனும் நீயும் போட்ட திட்டம் போல் நடத்தி என்ன
வீதியிலே உட்டே - மகளே வேதினய நான் என்ன சைவன்

45. தோட்டாத் துவக்கால் - என்ன சுட்டெரியாமலுக்கு - நீ
கதையால சுட்டே - மகளே காயமெப்ப ஆறுவதோ

46. எண்ணாதத்த எண்ணி - என்ர இதயம் குமுறலுட்டு
பொங்கி வழிஞ்சி - நான் படிச்சேன் கவி இதைக் கேள் மகளே

47. ஆம்புளப் புள்ள - எனக்கி ஆதி தரவில்லை என்று
ஒன்னத் தாவி எடுத்தேன்- இந்த சதி நினைக்கறதுக்காக்கும்

48. ஊரோட எதுத்து ஒன்னளவில் உத்தரிச்சி - ஒன்ன
தாவி எடுத்தேன் - இந்த தீது நினைக்க வேணும் என்று

49. காட்டில் கிடக்கும் கறடி புலிக்கி கொடுத்த பாக்கிசத்த
ஆதி எனக்கி ஒரு பங்கு தந்தான்கா மகளே

50. கத்தி எடுத்து - என்ர கழுத்த அறுக்காமலுக்கு - நீ
கதையால் அறுத்த மகளே காயம் எப்ப ஆறுவதோ

51. சவுற் என்னும் பெட்டகத்தை-எனக்கி தந்த றகுமானிடத்தில்-என்ர
இன்னலெல்லாம் செல்லி - நான் இருந்தழுதேன் என்ர சீனிமகள்

52. முப்பதும் ஓதி முழுதும் தமாமாக்கி
அறிவு விளங்கியிருந்தால்-மகளே இந்த அன்னிதத்தப் பேசுவியோ

53. அவ்வலில போட்டே அடிக்கலிமம் தூணு அதில்
அறிச நிறுத்தி வச்செ - அந்த அக்கேனிடம் நான் கேட்டழுறன்.

54. என்னப் படச்சி எனக்கி இரணவம் தந்தவனே
தன்னப் புகண்டு - நான் தவிச்சழுறன் என்ர சீனி மகள்.

55. என்ர வாழ்க்கப் பலன - அந்த வல்லோனிடம் ஒப்படைத்து
பெருமையுடன் கேக்கேன்-அல்லா எனக்கி பொட்டப்புள்ள ஏன் என்று

56. என்ர மண்டயில எழுதி - நீ மயிராலே மூடி வச்ச
எழுத்த அழிக்க - நான் என்ன சைவன் என் ஆண்டவனே

57. என்ன விதியோ இறைவன்ர கட்டளையோ
பொல்லாத காலம் - என்னப் புடிச்சதென்று நான் அழுதேன்

58. நீ அள்ளி எனக்கி அளிச்ச அமானிதத்த - நான்
காப்பாத்த வேணும் என்று - நான் கடுந்துயரம் பட்டேன் அல்லா

59. நான் பட்ட துயர் செல்ல - ஒரு பகலிருந்தாலும் காணா
என்ன சைவோம் என்று - நான் இருந்தழுதேன் என்ர சீனி மகள்

60. உசக்கால் பறக்கும் ஒரு கோடி மலக்கெழும்பி - என்ர
தன்மைகளக் கேட்டு தவவு செல்லுங்கோ

61. என்ர தலையில் அடிச்சி தரையிலே நான் கொண்டுழுந்து
விம்மி அழுதேன் அல்லா - எனக்கி விதிச்ச பங்கு என்ன என்று

62. காவேப் பறந்தான் இஞ்ச கனநாளா தங்கிறல்ல - நாம
தங்குமடம் ஒண்டிரிக்கி - அங்க சந்திப்பேன் நீ வா மகளே

63. தங்கும் மடத்தில் தனிய ஒரு றூமிருக்காம் - அந்த
அறையில் அடைபட்டோம் என்றால் - நம்முட தீர்ப்ப
அல்லா கூப்பிடுவான்

64. கொட்டிலுள்ளே நீ கேவன் போல் - நம்மளக் கூப்பிட்டு கிட்ட
வச்சி அல்லா
கேக்கிற கேள்விக்கி என்ன கிருப சைவார் என்ர சீனி மகள்

65. மவுசேற் வழியில் - அந்த மவுசரிலே கொண்டுவெச்சி அல்லா
கேக்கிற கேள்விக்கி - என்ன கிருப சைவார் என்ர சீனிமகள்

66. உலகம் பெரிதென்று உயிர்வாழும் நம்மளுக்கு
மைவு சேர் வழி ஒண்டே அல்லாஹ் மறைமுகமாக வெச்சிருக்கான்

67. நிறுக்கத் திராசிம் நிண்டறுக்கக் கத்தியும்
அளக்க மரைக்காலும் நம்மளுக்கு அங்கே இரிக்காம் நீ வா மகளே

68. மவுத்தும் அயாத்தும் - என்ர மகளாரிடத்தில் என்று செல்லி - நான்
கட்டினேன் கோட்டை - மகளே கரஞ்சி தண்ணியாப் போச்சி

69. தொண்ணூத்தி இரண்டு எட்டாவது மாதத்தில் - என்ர
ஆவி பறந்து - மகளே ஆகிறத்தத் தேடுறன்

70. ஆகிறத்தத் தேடி - நான் அடங்கும் நாள் வந்தவுடன் - என்ர
முகத்தில முழிக்க வந்தால் முள்வளக்கு அங்கே இரிக்கும்

71. என்ர மகளார் கதைத்த மறுமொழியக் கேட்டவுடன் - நான்
அண்டு மவுத்தானேன் அல்லா அரமனிசனாப் போனேன்

72. உம்மா என்னக் கழுவிக் குளிப்பாட்டிடவே நீயேதான்
கொண்டு வச்சி ஒப்புக்கொடுத்திருந்தன் - எனக்கி ஒண்டுமில்லகா
மகளே

73. இந்த ஒவ்வாப் பொருள எனக்காக அவன் படைத்து - என்ர
கழுத்தில் முடிந்தவன நானிருந்து உணர்ரன் என்ர சீனிமகள்

74. அள்ளி அணச்சி - என்ர அடிமடியில் தூக்கிவச்சி - நான்
பாலுகந்த நெஞ்சி எனக்கி பதறுதுகா என்ர சீனிமகளே

75. கல்லாத்து ஓடையிலே கறுப்பன் என்னும் ஓர் முதள
மாறு சைதோருடைய மணிக்குடல திங்கிறதாம்

76. நாக்கப் புடிச்சி நடுவால் இழுத்துவெச்சி - ஒண்ட
பொய் சென்ன நாக்க அங்கே பூட்டுறதாம் சங்கிலியில்

77. ஏழாப் புறிச்சி இரு தலைமயித்த ஒண்டாக்கி - அங்கே
பாலமொண்டு போட்டிருக்காம் - அதப் பாத்து நட என்ர சீனிமகள்

78. சில்பா மலையில் சீறி எழும்பும் காத்து
அன்பாய் அமந்திருக்கும் - மகளே என்ர அழுகுரலக் கேட்ட உடன்

79. ஆறாக் காரியத்த - எனக்கி ஆதி தந்தான் என்று செல்லி
பாரம் எடுக்காமல் - அந்தப் படைத்தோன் இரிக்கான் மகளே

80. நுன்னல் அமைத்து நெக்கேத்தால் கோவ சைது
சீனில் உருவாக்கினேன் - அதுற தீர்ப்பளிப்பான் என்ர சீனிமகள்

81. எரத்தக் கடலில் எரதேடும் பாம்பது போல்
தவிச்சி அழுதேன் - இந்தச் சங்கதியக் கேட்ட உடன்

82. வாழ்க்க எழந்து - என்ர மகள் என்று கைகொடுத்தேன் - இந்த
மாறு நினைப்பாய் என்று - நான் மதிக்க இல்லகா மகளே

83. தன்ன மறந்து தரையிலே தான் கொண்டுழுந்து
விம்மி அழுதேன் - மகளே ஒண்ட விசேளத்தக் கேட்ட உடன்

84. எரிக்கில கன்னி கட்டி ஏழு லெச்சம் காயி காச்சி
பழுத்துச் சொரிஞ்சது போல் - நான் பதறி அழுறேன் மகளே

85. அந்தி விடிஞ்சி அனிதினமும் நீர் ஓடி
பள்ளியில் தொழுதெ பலனளிச்சார் என்ர சீனி மகள்

86. ஒகுத்துக் குறையாமல் ஓடி ஓடி நீ தொழுது
திக்கிறு சைதாலும் - அந்த தீர்ப்பளிக்க மாட்டான் அல்லாஹ்

87. அஞ்செகுத்தும்போய் தொழுது அவனிடத்தில் கையேந்தும் நீயொரு
அமானுள்ள சீமானென்று நான் எண்ணியிருந்தேன்கா மகளே

88. அள்ளி உன்னத் தூக்கி அடிமடியில் தூக்கி வச்சி
சாம்புறாணி போட்ட மனம் மகளே சனம் கதைகள் கேக்கிறா

89. என்ர தங்க மகளார்ரெ தாவரத்தில் நான் போகாம
மண்மறைந்து போக - எனக்கி ஒரு மவுத்த உற்றுத்தா ஆண்டவனே

90. என்ர கண்டு மகளார்ர கண்ணில் முழியாமலுக்கு - நான்
மண் மறைந்து போக-எனக்கி ஒரு மவுத்த உற்றுத்தா என் ஆண்டவனே

91. நெருப்பால் படைத்த நேர்மையுள்ள ஓர் மலக்கு - ஒண்ட
உறுப்ப எரிப்பான் - நீ உணந்து நட என்ர சீனி மகள்

92. அஞ்செகுத்தும் நீ தொழுது அவனிடத்தில் கையேந்தி
கெஞ்சித் துவாக் கேட்டாலும்- உனக்குக் கிருப சைய்ய மாட்டான்
அல்லா

93. சிறுகுருவி சிறகடிச்சி தான் பறந்து - இங்க அலைந்தே சுத்திறத்தப்
போல் - நான்
அலைகிறத்த அல்லா பாத்திரிக்கான்

94. பெத்து வளத்து பேருவெச்ச மக்களுக்கு - ஒரு
ஆண்துணயத் தேட வாப்பா அறிவு கெட்டுப் போயிருந்தார்

95. நம்முட மூணுபேர் மக்களுக்கும் முடிவு என்ன என்று செல்லி - நான்
ஆணுக்கே உத்தரிச்சேன் - இந்த ஆலிசே மகளாரே

96. கல்லூட்டக் கட்டி கதவு நிலயும் போட்டு - உனக்கு
தெறப்பக் கொடுக்க வாப்பா துணிஞ்சதுமோகா மகளே

97. சவுதியில் இரிக்கும் என்ர தங்க மகள் இல்லாட்டி - ஒண்ட
நெலம தெரியும் - அத நீ உணந்து பார் மகளே

98. விஸ்மில்லா என்று - என்ர விரலில் கலாம் எடுத்து - நான்
எழுதி முடிச்சேன் எங்கள் எல்லோரையும் நீ கார் வாழி

99. உலகப் படச்சி உயிர் கொடுக்கும் நாதாவே
உன்னருள் கொண்டு - நான் உரைத்தேன் கவி
எங்களக் கார் வாழி

100. உறுப்பப் படச்சி உயிர் கொடுக்கும் நாதாவே
உன்னருள் கொண்டு - நான் உரைத்தேன் கவி
எங்களக் கார் வாழி

101. நான் ஏழையாயிருந்து எடுத்தழுத ஒப்பாரி - இந்த
ஆலம் நிறைந்த அல்லா அறுகது போல் எங்களக் கார் வாழி

## கவிகள் - 2 (1991)

1. விஸ்மில்லா என்று மேலவன முன்னிறுத்தி - நான்
எழுதும் கவியில் ஏது பிழையும் வாராமல்

2. இந்தச் சங்கம் பொருந்தும் சபையிலதான் நான் பாடுறன்
ஒரு பங்கம் பழுதில்லாமல் - என்னப் பாதுகாக்க வேணும் அல்லாஹ்

3. கேளாமல் கொடை கொடுக்கும் கிருபையுள்ள நாயகனிடம்-நான்
ஓயாமல் கேக்கன் - உனக்கு உதவி செய்வான் என்ர சீனிமகள்

4. ஒண்ட மண்டயில் எழுதி மயித்தால மூடிவெச்ச
எழுத்த அழிக்க - நான் என்ன செய்வன்கா மகளே

5. தாயாரும் ஏழை - நம்மளத் தாவரிப்பார் இல்லயென்று - நீ
சவுதிக்கிப் போயி உழைக்க - ஒண்ட தலையெழுத்தோ என்ர
சீனிமகள்

6. ஆம்புளப்புள்ள நமக்கு அறவே இல்லையெண்டு சொல்லி
சவுதிக்கிப் போக அல்லாஹ் - உனக்குத் தந்த புத்தி என்ர சீனிமகள்

7. மூணு குமர்களுக்கும் - ஒரு முடிவுமில்ல என்று செல்லி - நீ
காலெடுத்து வெச்சாய் - உனக்கு கருணை சைவான் என்ர சீனிமகள்

8. தலிரக் குறச்சி - ஒங்களத் தந்த றகுமானிடத்தில் - நம்மோட
இன்னல் எல்லாம் செல்லி - மகளே என்னேரமும் நான் குழர்ரன்

9. ஒண்ட வாழ்வ நினைச்சி கண்ணீர் வடியாத நாள் கிடையா - நான்
என்ன செய்வேன் என்று - மகளே இறைவனிடம் தூக்கி வெச்சேன்

10. என்ர பாரக் குமரே பாத்திரிக்க ஏலாம - உனக்கு
களியாணம் பண்ணி - மகளே கண்குளிர ஒன்னப் பாக்க நினைத்தன்

11. கைக்கூலி சீதனமும் கழுத்து நிறைந்த நகையும்
போட்டுக் குடுத்தன் மகள் - ஒரு புறந்த புள்ள போலிருந்தாய்

12. பரதேசி போலே - நீ பாடுபட்டுப் போயி
உழச்ச பணத்த கொடுத்தேன் என்று - இந்தப் பரிசி தந்தாங்க
கோமகளே

13. நாலு வரிசம் நாட்ட உட்டுப் போய்
உழச்ச பணத்தக் கொடுத்தேன் என்று - இந்தப் பரிசு
தந்தாங்க மகளே

14. நித்திரக் கண்ணிலயும் நினைவிலேயும் நான் இருந்து
கண்ணீர் வடிக்கேன் - ராத்தா கதைத்த கதை தாங்காமல்

15. என்ர ஈரலில பிச்சி இளம் வாழஇல மேலவெச்சி
சந்தியில போட்டது போல் - நான் தவிச்சழுதன் என்ர சீனிமகள்

16. கூடு கலஞ்சி குருவி பறந்தது போல்
வீதியிலே நான் பறந்தேன் மகளே - ராத்தாட விசேளத்தக்
கேட்டவுடன்

17. கானான் பறக்கும் கருக்குருவி கூவிக் கூடும்
ஆலாச் சிறகடிக்கும் மகளே - என்ர அழுகுரல் கேட்டவுடன்

18. மண்ணும் அழுது மலை மரமும் தானழுது
விண்ணும் அழுகும் அல்லா - என்ர வேதனயக் கேட்டவுடன்

19. பட்ட மரம் தளச்சி பாலேறிக் காயி காச்சி
சவரம் கொடுக்கும் மகளே - என்ர தன்மைகளக் கேட்டவுடன்

20. என்ர கல்பில் இரிக்கும் கவலைகளச் சென்னேன் என்றால்
ஏழு கடலும் மகளே இரையாம அமந்து கேட்டிருக்கும்

21. தாழம்பூ பூத்து தரையில் சொரிஞ்சது போல் - என்ர
கண்ணால் ஓடுற தண்ணீர் - ஒரு கடலிருக்கும் என்ர சீனிமகள்

22. ஒத்த மரமேயாகி - ஒண்ட ஊடுலதான் நான் இருந்து
கண்ணீர் வடிக்கிறத்த - ஆரும் காணயில்லகா மகளே

23. வாழவழி இல்ல - என்ன வந்து பாப்பாரும் கிடையா
தானே கிடந்து தவிச்சழுறன் என்ர சீனி மகள்

24. அறுத்தால் இரத்தமுண்டு அணைச்சால் கிருபையுண்டு
படைத்தான் எழுத்ததனால - அல்லா நம்மள பங்கு பங்கா
ஏன் பிரிச்சான்

25. ஒத்த மரம் என்றால் ஓர்மிச்சி நான் இரிப்பன்
கந்து விசிறி - நான் காச்ச மரமாப் போனேன்

26. சவுதியிலே நிக்கும் தளச்ச மரம்
இச்சயிலே அண்ணாந்து பார் மகளே - அதிலே இரிக்கும்
என் றோகு

27. எரத்தக் கடலில் எரைதேடும் பாம்பது போல்
தவிச்சி அழுறேன் - என்ர தங்க மகள் ஒன்னால

28. கப்பலிலே ஏத்தி - என்ர கதய வரக்காட்டுறன்
உத்து ஊந்து பாத்து உணந்து நட என் சீனி மகள்

29. சவுர் என்னும் பொட்டகத்த-நமக்குத் தந்த றகுமானிடத்தில்- நம்மட
இன்னலெல்லாம் செல்லி - நீ இரப்புத் துவா கேள் மகளே

30. ஒன்னத் தவிர ஒரு துணையும் இல்ல நெக்கு - என்ர
மக்கள் அமானம் அல்லா மாறி வந்து சேருமட்டும்

31. சுவகில் எழும்பி சிறுபள்சியப் போல் நான் இருந்து - ஒண்ட
பங்க நினச்சி - மகளே படைத்தவன நான் நொந்தழுதேன்.

32. ஈமான் உள்ள சீமான் இரக்கமுள்ள யா றகுமான் - நம்மட
பங்கத் தருவான் - அந்தப் படைத்தோனிடம் நீ கேள் மகளே

33. ஒழுவும் எடுத்து உடன சுன்னத்தும் தொழுது
கையெடுத்துக் கேள் மகளே - அல்லா கருணை செய்வான் நம்மளுக்கு

34. குறிஞ்சா மரத்தில் குருவி இருந்து கத்துறாப் போல் - ஒண்ட
வாழ்வ நினச்சி - அந்த வல்லோனிடம் நான் கேட்டழுறன்

35. பெத்த வயிறு பேதலிச்சி நான் குழற - என்ர
தங்க மகள் மூணயும் - நீ தளிராக்கித் தா றகுமான்

# கவிகள் - 3 (1991)

1. அகது வகதானவனே அலிபு நிலையானவனே - இந்த
ஓதல் மறவாதவனே - ஒண்ட ஒப்பினய நான் நொந்தழுதேன்.

2. எங்கிட வாழ்க்கைப் பலன - அந்த வல்லோனிடம் ஒப்படைத்து
பொறுமையுடன் கேக்கேன் றகுமான்.

3. ஏழயாப் படைத்து - இந்த இன்னல் எல்லாம் தங்கவெச்சி - இந்த
பூலோகத்தில் உட்ட - ஒண்ட புதுமய நான் கேட்டழுறேன்.

4. என்ர தாயார் தலையில் - நீ தந்த பங்க நான் பொருந்தி
கடலக் கடந்து அல்லா - ஒண்ட கருணையுடன் நான்
போய்ச் சேந்தன்.

5. சின்னம் சிறுவயசு திசை தெரியா பருவம்
சவுதியில போய் உழைக்க - நீ தந்த பங்கோ என் ஆண்டவனே.

6. தாங்காமல் தாங்கி - என்ர சதிரம் திமிரேறி
ஏங்கி அழுதேன் அல்லா - நெக்கு என்ன விதி வந்ததென்று.

7. ஏறினன் கப்பலில இருந்தன் அந்தப் பத்திரிப்பில்
பூட்டினன் நான் வார - என்ர பொறிகலங்கி போச்சிதும்மா.

8. வாரை எடுத்து வரிஞ்சி கட்டும் வேளயில - என்ர
ஆலம் பதறி உம்மா அழுத கண்ணீர் கொஞ்சமில்ல.

9. ஆலவேர் போலே - இந்த ஆலமெல்லாம் சுத்தி வந்து
ஒரு பகுதிக்கடங்காது-ராத்தா பெரும் பட்டணத்தில்
போயி சேர்ந்தன்.

10. பாச தெரியா படிப்பறிவும் நான் குறய
என்ன சைவோம் என்று ராத்தா - நான் இருந்தழுதன்
அந்த யாபோட்டில்

11. பங்கப் புறக்கி பகுத்தெடுப்போம் என்று செல்லி - நம்முட
ஊர எழந்து - ராத்தா நான் உலகமெல்லாம் சுத்துறன்.

12. மூணு தரம் போற தயாரால் முடியுதில்ல என்று செல்லி - நான்
காலெடுத்து வெச்சேன் ராத்தா - ஒன்ன கரசேக்க வேணுமெண்டு.

13. அண்ணன் தம்பி இல்ல - நமக்கு ஆருதவி என்று செல்லி - நம்முட
பங்கப் புறக்க - நான் பறந்து வந்தேன்கா ராத்தா.

14. ஆம்புளப் புள்ள நமக்கு அறவே இல்ல என்று செல்லி - உனக்கு
கலியாணம் பண்ணி - நாங்க கண்ட மகன் ராத்தா.

15. ஒண்ட கலியாணம் பண்ணி அந்தக் களரி நிறவேறுமட்டும் -
உம்மாட கண்ணால ஓடினத்த - நீ காண இல்லயோ ராத்தா

16. சந்தண மரத்த தலை வாசலில நாட்டி வெச்சி
தண்ணீர் ஊத்தி அதுக்கு தளிரு சைதகா என் தாயார்

17. தளச்ச மரத்திணல்ல தங்க வந்த தாயாருக்கு - நீ
அடிச்சி விரசி அகத்தி விட்டாய்கா ராத்தா

18. அடிச்சி விரசி - எங்கள அடியோட நீ மறந்து
கலியாணம் பண்ண - நீ காத்திருந்ததோகா ராத்தா

19. நீ அடிச்சி விரச தாயார் அங்க போயிருந்து
குழறின தண்ணீ - ஒரு குளமிருக்கும்கா ராத்தா

20. வாரி அணச்சி - ஒன்ன மடிமேல தூக்கி வச்சி
பாலுகந்த நெஞ்சில் - இப்ப பழுதுற்றதென்னகா ராத்தா

21. ஒன்ன அள்ளி அணச்சி அடிமடியில் தூக்கி வெச்சி
பாலுகந்த நெஞ்சில் - இப்போ பழுதிருக்காம்கா ராத்தா

22. முந்தி எடுத்த மூத்த மகன் என்று செல்லி - ஒங்கிட
தாவரத்தில கிடந்து உம்மா தலிரு சைதா மூத்த மச்சான்

23. நம்முட குடும்பத்தக் காக்கும் நீங்க ஒரு குலவிளக்கு என்று செல்லி
உத்தரிச்ச தாய உதறிவிட்ட மூத்த மச்சான்

24. அந்தப் பங்கப் பொருந்தி படைத்தோனிடம் தூக்கி வச்சி
அந்தி விடிஞ்சி உம்மா - அந்த ஆதியிடம் கேட்டழுறார்

25. நாலு புள்ள தலமுறக்கும் - ஒண்ட நடுவாசலில தான் கிடந்து
உத்தரிச்ச தாய - நீ உணர இல்லயோ ராத்தா

26. ஆண் குழந்த இல்ல நமக்கு ஆணுதவியும் கிடையா - நம்முட
மக்கள் உதவியென்று உம்மா மாறி வந்தா ஒண்ட காலடிக்கி

27. படந்த மரத்தில பறவை அசஞ்சது போல்
தங்கவந்த தாயாருக்கு - நீ என்ன சதி நெனச்சாக ராத்தா

28. எட்டு வரிசமெல்லாம் - நான் எழுதும் கடிதமெல்லாம்
பாத்திருந்தே ராத்தா - இந்தப் பரிசி தரக் காத்திருந்தாய்

29. ஒங்கிட கன்னிக் கலியாண களரியில நான் இல்லாமேல் - நீ
கலியாணம் பண்ண - ஒண்ட கல்வு சொன்னதோ ராத்தா

30. தீறோனில வெச்சி மக்களுக்கு சீரு சைய வேணும் என்று - நான்
எண்ணின எண்ணமெல்லாம் - நீங்க ஏன் அழிச்சாய்கா ராத்தா

31. சோடியப் போட்டு மக்களத் தூக்கி வச்சி - நான்
பாத்து சிறப்பு சையவேணும் என்று நான் சோட்ட வெச்சேன்கா
ராத்தா

32. மனக்கோட்ட கட்டி மறிபட்டன் சவுதியில - நீ
மண்கோட்டயாக்கி ராத்தா - நீ மாறு சையக் காத்திருந்தாய்.

33. பீக்கர் எடுத்து பெரிய வயிரத்தில் - நீங்க
பண்ணும் கலியாணத்த - நான் பாக்க இருந்தன்கா ராத்தா

34. மாடும் அறுத்து ஊர் மக்களுக்கு சோறு கொடுத்து நீங்க
பண்ணும் கலியாணத்த - நான் பாக்க இருந்தன்கா ராத்தா

35. பச்ச இல வெட்டி பந்தல் அலங்கரிச்சி - ஒன்ன
சோடியப் போட்டு மகனே - ஒன்ன தோறணத்தில் நான் பாக்க
இருந்தன்

36. மாலயப் போட்டு மண மேடயில கொண்டு வெச்சி
ஆலாத்தி ஏந்த - நான் ஆசை வெச்சேன்ரா மகனே

37. மச்சிமார் கூடி நொக்கு மருதோண்டி கொண்டுவந்து
குத்தும் செறப்ப மகனே - நான் கூட இருந்து பாக்க இருந்தன்

38. கட்டி வெச்ச கோட்டயில கல்லுடஞ்சி போனது போல் - என்ர
மனத உடச்சி மகனே - இந்த மாறு சைதார் உன் தகப்பன்

39. பந்தலப் போட்டு பல தோறணங்கள் தான் தூக்கி - நீ
சந்தோசம் கொண்டாடுகிறாய் ராத்தா சவுதியில நான் அழுதன்

40. நம்முட காரியத்தில வோத கண்டுவிட்டன் என்று செல்லி
வேத்திவிழாக் கொண்டாட - எங்கள வெறுத்துவிட்டதோ ராத்தா

41. கலியாணம் என்று கடிதமொன்று வந்ததினால் - என்ர
ஆலம் பதறி - மகனே நான் அண்டெடுத்த ஒப்பாரி

42. கண்ணால் அழுதால் பொஸ்கி கண்டு கதைகேட்பாள் என்று- நான்
கக்கூசிக்க போயிருந்து - மகனே என்ர கற்பனய நொந்தழுதன்

43. கலியாணம் என்டுற அந்தக் கதை கேட்ட நாள் கூடி - என்ர
ஆலம் பதறி மகனே - நான் அண்டெடுத்த ஒப்பாரி

44. கலியாணம் என்டுற அந்தக் கதை கேட்ட நாள் கூடி - நான்
உண்ணுற சோறும் - என்ர உடலிலையும் ஒட்டுதில்ல

45. ஏங்கி விறச்சி - என்ர எண்ணமெல்லாம் மெய்மறந்து
நாதிச்சிப் போனன் ராத்தா - நெக்கு தகடு தந்தாய் என்று செல்லி

46. உண்ணப் பசிக்குதில்ல உறங்க நெக்கி எண்ணமில்ல - என்ர
இதயம் கொதிச்சி ராத்தா என்னுள்ள நான் குளர்ரன்

47. வாசலில நிக்கிம் வளரும் அந்தத் தென்னயில
அண்ணாந்து பார் அதில நிக்கு என் றோகு

48. ஆழிக் கடலில் அலை எழும்பி வாறது போல் - என்ர
ஏழை மனம் பொங்கி - நான் இருந்தழுதன்கா ராத்தா

49. நான் உண்ணுறதும் சோறோ உறங்கிறதும் நித்திரையோ
படுக்கிறதும் பாயோ - என்ர பாடறிஞ்சதார் தாயே

50. பள்ளியறிய பத்தும் விளக்கறிய - இந்த
ஓதலறிய ராத்தா - என்ர உடன்பிறப்பு என்றிருந்தன்

51. உடன் பிறப்பு என்று உத்தரிச்சன் ஒன்னளவில் - இந்த
மாறு நினச்சால் - என்ர மனம் பொறுக்குமோ ராத்தா

52. அள்ளி அணச்சி மக்கள ஆசதீரப் பாக்காமெல் - நான்
சவுதிக்கிப் போனன் மச்சான் உங்களுக்கு தலிரு சைய வேணுமென்று

53. முந்தி எடுத்த மச்சான் என்று சொல்லி - நான்
சவுதிக்கிப் போனன் மச்சான் உங்களுக்கு தலிரு சைய வேணுமென்று

54. காணி பூமி இல்ல வாப்பா-நம்மள கரை சேக்க மாட்டார் என்று- நான்
கால் எடுத்து வெச்சன் மச்சான் உங்கட கடமைகள சைவோமென்று

55. ஊர எழந்து -என்ர உடன் பிறப்பு தான் எழந்து
சவுதிக்கிப் போனன் ராத்தா ஒனக்கு தலிரு சைய வேணுமென்று

56. பட்டிக்கித் தலயாரி உம்மா பாத்தெடுத்த மூத்த மச்சான் - எங்கள
பாதுகாப்பார் என்று மச்சான் - நம்முட பாங்குகள நான் தேடுறன்

57. என்ர கட்டை சவுதியில நான் காலம் கழத்துறன் - என்ர
உசிரு பறந்து மச்சான் ஒங்கிட ஊட்ட வந்து பாத்திரிக்கி

58. என்ர உசிரு பறந்து ஒங்கிட ஊட்ட வந்து பாத்திரிக்கி - நெக்கி
ஆறுதலச் செல்லி அதோ அனுப்பி வைங்கோ மூத்த மச்சான்

59. கலியாணம் பண்ணி உங்கிட களரி நிறவேற மட்டும் - நான்
எரந்து துவாக் கேட்டு ராத்தா - நான் இறையோன நொந்தழுறன்

60. என்னதான் குத்தம் - உம்மா இருந்துனக்குச் சைதாலும் - நம்மள
ஈண்டெடுத்த தாய்க்கி - நீ ஏன் அடிச்சாய்கா ராத்தா.

61. ஒண்ட ஈரமில்லா கல்ப அல்லா ஏன் படைத்தான் என்று செல்லி-நான்
அந்தி விடிஞ்சி அவனிட சிராத்தத்தில் கேட்டழுறன் ராத்தா

62. ஒண்ட கல்பில் கசடறுத்து - நீ கலப்பறுதல் லாயிருந்தால்
வயிரத்தால் சிறப்பான கூட்டுறவில் அல்லா ஒன்ன சேத்து
வெப்பான்கா ராத்தா.

63. உண்ட கல்பக் கழுவி கசடுவினை தான் அறுக்க
குழறி ஒருபோத்தல் - ராத்தா குடுத்து வரக்காட்டுகிறன்.

64. தாயார் மனத தவிக்க வெச்ச பேர்க்கெல்லாம்
நாய்போல் அலறி ராத்தா - அந்த நரகில் கிடக்கிறதாம்.

# மச்சான் மீராமுகைதீனுக்கு அனுப்பிய கவிகள் (1979)

### மு.இ.அஹமதுலெவ்வை

அக்கரைப்பற்றைச் சேர்ந்தவர். வயது 89, எஸ்.எஸ்.சி. வரை கல்விகற்ற இவர் ஓய்வுபெற்ற ஆசிரியராவார். அகதிகள் ஒப்பாரி, ஊரின் பழங்கால இக்கால நிலை, சிருங்காரம், மச்சான் மீராமுகைதீனுக்கு அனுப்பிய கவிகள் (எம்.பைசானா என்பவருக்குப் பாடிக் கொடுக்கப்பட்டது) முதலிய பல பாடல்களை எழுதியிருக்கின்றார்.

1. வங்காளக் கடலில் வந்துறைஞ்ச காத்தமுக்கம்
சூறாவளியாகிச் சுழண்டடிச்ச செய்தி இது.

2. காத்தும் மழையும் கடும் புசலும் தானெழும்பி
மாத்தி நிலைகுலைச்ச மாதிரியை நான் என்ன சொல்ல

3. ஊழியின் கூத்தோ இது உலகின் நிலை முடிவோ
ஆழிக்கடல் பெருக்கோ அங்கிரிந்து நீங்க காணயில்ல

4. மின்னும் முழக்கமும் மீறிவந்த மழை புசலும்
கண்ணும் உறங்காமல் நாங்க கலங்கி நிண்டோம் அண்டிரவு

5. வெள்ளமும் மழையும் வீசிவந்த காத்திடியும்
கண்டு கலங்கி நாங்க கையேந்தி நிண்டழுதோம்

6. தென்னை பனையும் தேன்மா பலாவாழை
காடுவெட்டிச் சரிச்சது போல் நீங்க காணயில்ல கடும்புசல

7. வீடு வாசல் வேலி மதில் வெளிச்சம் தரும் கம்பிக் கட்டை
பாதையெல்லாம் சரிஞ்சுழுந்த பாழ்வெளிய நீங்க பாக்கயில்ல

8. கூடு சிதறிக் குருவி பறந்தது போல்
வீடிடிஞ்சு சனம் அடைஞ்ச வேதினைய என்ன சொல்ல

9. அயலூரில் இருந்து சனம் ஆறுதல் சொல்ல வந்தார்
விபிலையில் இருந்த மச்சான் எங்கிட வேதினைய ஏன் மறந்தார்

10. அக்கரைப் பத்தூரை அடியோடதான் மறந்து
விபிலைதான் தஞ்சமெண்டா - மச்சான் வந்து இஞ்ச பாக்கயில்ல.

# நோய் நீக்கும் ஒப்பாரி (1990)

**ஏ.எல்.மீராஉம்மா**

அக்கரைப்பற்றைச் சேர்ந்தவர். 1949 இல் பிறந்தார். பாடசாலைக் கல்வியைப் பெறாதவர். கண் பார்வை அற்ற இவர் உடனுக்குடன் பாடல்களைக் கட்டி இசையுடன் பாடவல்ல புலமை பெற்றவர். பாடுவதையே தொழிலாகக் கொண்டவர். 2017 இல் இறந்துவிட்டார். அவரது பாடல்கள் மக்கள் மத்தியில் வாய்மொழியாக நிலவுகின்றன. பிரிந்த குடும்பத்தைச் சேர்த்தல், நோய் நீக்கும் ஒப்பாரி, நோயுற்றவருக்குப் பாடிய இரப்புத் துவா, பெண்ணைக் கைவிட்டுச் சென்றவன் மீது அறம், வேளாண்மைக்கு விழுந்த புழுக்களுக்குப் பாடிய அறம் என அதிகமான பாடல்களைப் பாடியவர்.

அறிவு நிலமஅதிகம் நான் அறியவில்லை
கலிமாப் பொருளால அல்லா என்ர கண்வருந்தல் ஒப்பாரி
சங்கைக்குரிய சபாயிடம்மாட மகள்
நோய்வாயில இருந்து அவ நோகிறது ஆண்டவனே
மவுத்தாகும் தறுவாயில அந்த மாபெரிய சபாயிட
சப்காத்தில் வாழுகின்ற றகுமான் அவக்கு சந்தோசத்த நீ கொடுப்பாய்
ஆகிறத்தில் போற அந்த அழகான சபாயிட - அவள
நோய்வாயை நிப்பாட்டி றகுமான் அவக்கு நின்மதிய நீ கொடுப்பாய்
நோய்வாயை நிப்பாட்டி அவக்கு நின்மதிய நீ கொடுத்து அவட
எரணம் கிடந்தாஅவட ஏலாமய நீ தீரும் அல்லா
எரணம் கிடந்தா அவட ஏலாமய நீக்கி நீ
பழயபடி போல நீ பாதுகாப்பாய் றகுமான்
எரணம் இல்லாட்டி அந்த இரக்கமுள்ள சபாயிட - அவட
கணக்க முடித்துஅல்லா கட்டாயமா அவட றோகெடுப்பாய்
கணக்க முடித்து நீயும் கட்டாயமா றோகையெடுத்து - அவ
மறுமைக்குச் செல்வதற்கு நீ மனமிரங்குவாய் றகுமானே
மறுமைக்குச் செல்வதற்கு நீ மனமிரங்க வேணுமென்று
மணிவிளக்கு சாபாய்க்கு அல்லா மன்றாடி கேக்கிறன் நான்
அங்காலயும் இல்ல அவக்கு இங்காலயும் இல்லாம
நடுவில இருந்து றகுமான் றணமாய் அவ வாடுகின்றா
நடுவில இருந்து அவ அவஸ்தப் படாமலுக்கு - அவட
எரணம் முடிந்துதென்றா நீ எடுத்துவிடு ஆகிறதி

சிறிதிப்பாய் அவட எரணம் முடிந்துதெண்டா - அவவ
வருத்தப்படுத்தாம வல்லமையை நீ எடுப்பாய்
காதிதிர வழிந்தாக்கா கவலையில்ல எங்களுக்கு - அவட
வருத்தம் சுகமாக வாவா என் ஆண்டவனே
செலவழிஞ்ச காசும் அவக்கு சீரழிவு வந்ததற்கும் - அவ படுகிற
கஸ்ரமெல்லாம் அல்லா பகல் வேணும் சொல்லியழ
சம்புசெய் கொண்டு அவட சிரசில எழுதாமலுக்கு
காரமுள்ளக் கொண்டு அவக்கு நீ கடனழித்தாய் ஏன் றகுமான்
வந்த பிணி நீங்கும் அவட வருத்தமெல்லாம் தேறிவரும்
ஏலாம நிப்பதற்கு நீ இரங்க வேணும் ஆண்டவனே
ஏழக்கி இரங்கி நீயும் ஏழமுகம் பாப்பாய் என்று
நான் பாடிக் கேக்கேன் அவக்கு வந்தபிணி நீக்கிடுவாய்
தாதாகு நபிர தாதி கிடைத்து சபாயிட
நல்லவிதம் நோய் தீர நீ நாடி முகம் பாரும் அல்லா.

## நோயுற்றவருக்குப் பாடிய
## இரப்புத் துவா (1997)

1. அல்லாகு அல்லா அல்ஹம்துலில்லா
அழகுள்ள தாசியாவுக்கு நோயைத் தீத்தருள்
அழகுள்ள ஆயிசாட நோயைத் தீத்தருள்
ஆயிசாட நோயை இறைவன் இரங்கி
அன்புடனே நீ நீக்கிவிட
ஆதி றகுமானே உன்னிடத்தில் நானும்
அனிதினமும் அவர்க்குப் பிராத்திக்கிறேன்
அனிதினமும் அவர்க்குப் பிராத்திக்கிறேன் - (அல்லாகு அல்லா)

2. வருடக்கணக்கில் வருத்தமாயிருந்து
மருந்துகளெல்லாம் பாவித்தார்கள்
ஒரு மருந்துக்கும் நோய் தீரவில்லை - உன்னை
அல்லா மருந்தாக்கி வாழ்த்துகிறேன் உன்னை
அல்லா மருந்தாக்கி வாழ்த்துகிறேன் - (அல்லாகு அல்லா)

3. எரணமிருந்தால் ஆயிசாம்மாக்கு
ஏலாமையை நீ நீக்கி விட்டு
உடனடியா அவ எழும்பியே குந்த
உதவிகள் புரிவாய் இறைவனே
உண்மையைக் காட்டு றகுமானே - (அல்லாகு அல்லா)

4. ஏரணமில்லாட்டி ஆயிசாம்மாக்கு
இறைவனே உந்தன் மனமிரங்கி
ஆயிசாம்மா றோகை கைப்பற்றி நீயும்
அவக்கு நின்மதியைக் கொடுத்தருள்வாய்
அவக்கு நின்மதியைக் கொடுத்தருள்வாய் (அல்லாகு அல்லா)

# வெளிநாடு போன வெள்ளம்மா (1986)

சீ.இல்யாஸ், எம்.இஸ்மாயில்

## 1. வெள்ளம்மா கணவனிடத்தில் சம்மதம் கேட்டல்

1. காசி பணம் சேர்க்க வேண்டுமா - மச்சான்
கல்லூடு கட்ட வேண்டுமா - நாம
பூணாரம் நகைநட்டு போடோணுமிண்டா
வெளிநாடு போய் வரவேண்டும்

2. அந்தக்கத பேசாதடி - வெள்ள
அறபியெல்லாம் பொல்லாதவன் - நீ
வெளிநாடு போய்வந்தா ஊருல நானும்
தலை காட்ட ஒண்ணாதடி

3. வெளிநாடு போய்வர வேணும் - மச்சான்
வேண்டியதச் சேத்திட வேணும் - காசிம்
போடியார் முதலாளிமாரெல்லாம் சேர்ந்து
கடன் கேட்டு வந்திட வேணும்

## 2. வெள்ளம்மாவின் குணாதிசயங்கள்

வெள்ளம்மாவுக்கு நேரிங்கே யாருமேயில்லே - அவ
கலந்து கொள்ளா விசேசங்கள் எதுவுமேயில்லே

1. கலியாண வீடுகளைக் கலகலப்பாக்கி - பல
கருமாரி வீடுகளில் எடுபிடியாகி
சுன்னத்து வைபவத்தில் சுறுசுறுப்பாக்கி - பல
சாதனைகள் புரிந்திடுவா வெள்ளம்மா மாமி

2. நெற்றி வேர்வை சிந்த நெல்லுக் குத்துவா வெள்ள
புல்லெடுத்து பாய் பெட்டி பை பின்னுவா புள்ள
கலந்தர் காக்கா கண்டெடுத்த நல்லதொரு கழுத - சும்மா
ஊட்டுக்கூடு குந்திருந்து போக்குது பொழுத

3. கலந்தருக் காக்காவை கட்டியடிப்பா - கையில்

காசிருந்தா போதும் அவ திண்டு முடிப்பா
சச்சரவு சண்டைகளில் முன்னுக்கு நிப்பா - ஆரும்
வாய் துறந்தா போதுமவ உசத்திப் புடிப்பா

4. ஆனான ஆம்புளைகள் கண்டவள் வெள்ள
அறுதாலிப் படையெல்லாம் வெண்டவள் புள்ள
சூணான வேலையெல்லாம் திண்டவள் உள்ள - அவள்
சிறப்பெல்லாம் பின் சொல்வோம் கேளுங்க மெல்ல

### 3. உம்மா மகள் வெள்ளம்மாவைப் பற்றிக் கனவு காணல்

போகாதே போகாதே வெள்ள உம்மா
பொல்லாத சொப்பனம் நானும் கண்டேன் - வெள்ள (மறு)

1. கப்பலில் ஏறிச் சறுக்கக் கண்டேன் - உண்ட
கால்கள் உடைந்து பறக்கக் கண்டேன் - வெள்ள (மறு)
குப்பையில் உன்மேனி கிடக்கக் கண்டேன் - அதை
கூடியே நாலுபேர் தூக்கக் கண்டேன் - ஐயோ (மறு)

2. கட்டிலில் நீ தூங்கக் கண்டேன் - உந்தன்
கிட்ட வந்தறபியும் குந்தக் கண்டேன் (மறு)
எட்டி நீ காலால் உதைக்கக் கண்டேன் - புள்ள
முட்டி உனைத் தள்ளி ஓடக் கண்டேன் - அறபி (மறு)

### 4. கலந்தரின் கோபம்

1. அடை வச்ச கோழி பறந்து போகுது ஆகாசத்தாலே
அருகிருந்த குடையும் முறிந்தது கலந்தரடியாலே
தண்ணிக் கோப்பை கிளாசு படிக்கம் தலைக்கு மேலாலே - கண்ட
மாமியாவுக்கு உடம்பு நடுங்கி....

2. ஊட்டுக்க போவார் திண்ணைக்க வருவார் கலந்தர் நாய் போலே
போட்ட தொப்பி வெனியன் சிறுவாலெல்லாம் பறக்குதுபேய் போலே
மோட்டுல தட்டக் கிளம்பியடிச்சார் கலந்தர் போள்போலே - அங்கே
உடுத்திருந்த சாறன் உரிஞ்சி....

3. பொறுத்திருந்த வெள்ளம்மாவும் பொங்கிடப் புலிபோலே - அதைப்
புரிந்து கொண்ட கலந்தர் காக்கா அடங்கினார் எலிபோலே
குறுக்க கிடந்த பொல்லைத் தூக்கி உட்டாள் தலை மேலே - அதை
தடுக்கக் கலந்தர் கையைக் குடுத்தார் முன்கை துண்டாக

4. கலந்தர் கத்திய சத்தம் கேட்டு சனங்கள் வளவுக்கே - இப்ப
சங்கதியெல்லாம் புரிஞ்சு போச்சு சனங்கள் முன்னுக்கே
சண்டை சச்சரவெல்லாம் வாணா வாடி என் வெள்ளே - நாம
சமரசமாய் பேசிக்கொள்வோம் வாடி என் புள்ளே

## 5. கலந்தர் மனைவிக்கு கெசற் பேசி அனுப்புதல்

1. கப்பலிலே போனவளே கண்ணிறைஞ்ச வெள்ள உம்மா - நீ
எப்பத்தான் வருவாயென்றேங்குறேன் - நான்
இரவும் பகலும் முழிசி முழிசித் தேம்புறேன்

2. பன்னிரெண்டு வரிசமாகப் பாதுகாத்து வந்தேண்டி
இன்னொன்று நான் எடுக்க என்னை நீ வச்சிராத
எண்ணிரெண்டு வரிசத்திலே இலங்கைக்கி நீ வருவியெண்டா
கண்ணை இமை காப்பது போல் காத்திடுவேன் கண்மணியே

3. எழும்புகின்ற நேரமெல்லாம் ஏக்கம் என்னை வாட்டுதடி
உழுந்துழுந்து சாகிறண்டி உன்னாலே ஏங்கிறண்டி
பொழுது பட்ட பின்னாலே பொங்குதடி என்மனசு
பழுதுபட்டு வந்திடாதே பச்சக் கிளி வெள்ள உம்மா

4. ஆட்டிறைச்சும் மீன் குழம்பும் ஆசணிப் பிலாக்கறியும்
ஆக்கியாக்கித் தந்தவளே ஆரணங்கு வெள்ள உம்மா
உன்னைப் பிரிந்திருக்க என்னாலே தாங்கவொண்ணா
கொட்டுக் கிணறு போலே சொட்டுச் சொட்டாய் ஊறுதடி

5. நித்திரக் கண்ணிலேயும் நினவிலயும் தோணுதடி
கலிமா விரலும் - உண்ட கல்பதித்த மோதிரமும்
போற போற இடத்திலெல்லாம் பொண்டுகளக் காணக்குள்ள
ஏற இறங்கப் பாக்குறண்டி என்னவெல்லாம் செய்யுதடி

## 6. கலந்தரின் சோக்கு

1. நல்லதொரு சோக்காளி நல்லதொரு சோக்காளி
நல்லதொரு சோக்காளி கலந்தராக்கா
நாள்தோறும் மாடுபோல மேய்ந்து திரிகிற
நல்லதொரு சோக்காளி கலந்தராக்கா

2. காலையில் ஏழியாய் எழும்பிடுவார்- மண்டிக்
கள்ளக் குடிக்கவர் போய் வருவார்
மாலையில் அம்பாறைச் சந்திக்குப் போய்வந்து
மல்லுக்கு நிப்பாரு கலந்தராக்கா

3. கையில றெசிலட்டு கைலேஞ்சி சப்பாத்து
காதுக்க அத்தரு அந்தாளுக்கு
கையிலே பைலட்டு வாயிலே நவிக்கட்டு
வாறாரு றோட்டால கலந்தராக்கா

4. அபினோடு கஞ்சாவும் தூள் கட்டும் வாங்கியே
அழகாகப் போடுவார் கலந்தராக்கா
புளிச்ச பணியாரம் புட்டோடு இடியப்பம்
காலயில் சாப்பாடு கலந்தராக்கா

## 7. வெள்ளம்மா தாய்க்கு கெசற் பேசி அனுப்புதல்

1. போறாய் வெள்ள புறப்பட்டுப் புரியும் வேதன பின்னாலே
சாறாய் புழிந்து உடலெல்லாம் சதக்காய்க் கொடுத்து வருவாடி
சாத்திரம் பாத்தாப் போல என்ர தம்பிர வாப்பா சொன்னாரே
ஆத்திர புத்தியாலே நான் அவசரப்பட்டு வந்தேனே

2. அறபிர சட்ட கழுவக்குள்ள அறிவு மயங்கி விழுவேனே
ஆறடி நீளம் அவன் சட்ட அதற்கும் நீளம் அவள் மெச்சி
ஒரு கார்கழுவி முடியக்குள்ள மறுகார்கழுவு என்பானே
மறுகார்கழுவி முடியக்குள்ள மாடியைக் கழுவு என்பாங்கா

3. ஆடறுத்துக் கறியாக்கி ஆறுகொத்தரிசில சோறாக்கி
மூட்டி வச்சா ஒரு நிமிசம் முழுங்கி ஏவற உடுவான்கா
திண்டு முடிஞ்ச ஏனங்கள கழுவி முடிய அசராகும்
நிண்டு நிண்டு கால்வீங்கி நீட்டி முடக்க ஏலாகா

4. கையில ஒண்டு காலுக்கொண்டு பையில ஒண்டு பணியொண்டு
கக்கத்திலொண்டு அவண்ட கிள கஸ்டம் பொறுக்க ஏலாகா
உம்மாலக்கா உம்மாலக்கா உம்மாலக்கா உம்மாலக்கா
உங்கட கதையெல்லாம் கேக்காம ஊரை உட்டு வந்தேங்கா

## 8. வெள்ளம்மா ஊருக்கு வருதல்

1. வேக்கிடுக்கி குடைபிடித்து சொண்டுக்கு மை பூசி
விறுவிறெண்டு நடந்து வாறா பொட்டி ரெண்டு தூக்கி
குதி உசந்த சப்பாத்து குதிரடவால் உடுப்பு
கறுப்பு நிறக் கண்ணாடி கலக்கி வாறா வெள்ள

2. ஒடிக்குளோண் போட்டு வெள்ள ஒழுங்கையெல்லாம் நாத்தம்
ஆடிக் கொண்டை போட்டு வெள்ள அசஞ்சசஞ்சி வாறா
வெள்ளம்மா வாறாண்டு வீதியெல்லாம் கூட்டம்
புள்ளம்மா வந்து பாத்தா புள்ளைகள்தான் மிச்சம்

3. பாட்டுக் கேட்க டேப்பொண்டு இருக்குமெண்டு பாத்தார்
போட்டுக் கழிச்ச மெச்சி ரெண்டு பொட்டிக்குள்ள கண்டார்
ஹாசியார்லேஞ்சுமில்ல கணக்கான தொப்பியில்ல
ஏசிஏசி கலந்தராக்கா எல்லாத்தயும் எறிந்தார்

## ௯. வெள்ளம்மா உம்மாவிடம் குறைகூறல்

1. அனுப்பின காசில அஞ்சி சதமில்ல
அடுப்பில உல வைக்க அரக்கொத்தரிசில்ல
ஆறஅமர்ந்திட பாயில்ல பறியில்ல
இடுப்பில கட்டிட துண்டில்ல துணியில்ல

2. ரெண்டு வரிசமாய் வெளிநாட்டில் இருந்திட்டன்
எண்ட புருசனுக்காசி அனுப்பிட்டன்
திண்டு முடிச்சிட்டான் திறமான சோக்காளி
இன்னுமிருப்பதக் கொண்டாடி என்கிறான்

3. சும்மா இருந்தவன் சோம்பேறியாகிட்டான்
சுதிபண்ணி சூன்பண்ணி காசெல்லாம் முடிச்சிட்டான்
உம்மாட பொருளயும் விற்று விழுங்கிட்டான்
ஊட்டுக்குள் இரிக்கிற உறுதிதான் மிச்சம்

4. சவுதியில் இருந்திட்டன் ரெண்டு வரிசமா
சண்டாளன் செய்திட்ட வேல தெரியுமா
சூது விளையாட்டில் காசெல்லாம் தோத்திட்டான்
சும்மா இருக்கேலா பதுங்கத் தொடங்கிட்டான்

5. ரெண்டு வரிசமா இருந்திக்க ஏலாம
பெண்ணொண்டு தேவெண்டு போயடிவாங்கிட்டான்
என்னெண்டு கேட்டா இதெல்லாம் பொய்யெங்கிறான்
என்னாலே தாங்கொண்ணா இந்தக் கொடுமைகள

# சத்தாரும் சௌதாவும் (1987)

**சீ.இல்யாஸ்**

ஏறாவூரைச் சேர்ந்தவர். தரம் 10 வரை கல்வி கற்ற இவர் இலிகிதராகப் பணியாற்றினார். ஒருசில வருடங்களுக்கு முன் மரணமடைந்தார். சுனாமி அலை கடல் கொந்தளிப்பு துயரக் காவியம், வெளிநாடு போன வெள்ளம்மா (இணை) முதலிய பாடல்களைப் பாடியுள்ளார்.

## 1. சத்தார் தாயிடம் முறையிடல்

1. சட்ட புடவ வாங்கி வந்தா சள்ளென்று நாய்போல் பாய்றாள்கா
சந்தைக்கிப் போய் கறிவாங்கி வந்தா சத்தம் போட்டுக் கொம்புறாள்கா

2. சட்டி நிறயக் கறியாக்கி பானை வழியச் சோறாக்கி
பொட்ட நாயப்போல விழுங்கி பொழுது விடிஞ்சிம் படுப்பாள்கா

3. பொழுது கொஞ்சம் சாஞ்சிட்டா பொரிச்ச கிளங்கு பட்டீசு
கொத்துறொட்டி முட்டப்பம் கேட்டு கொக்காட்ட தாங்கொண்ணா

4. கையில ரெண்டு காப்பிருக்கா காதில டிஸ்கோதானிருக்கா என்று
சண்டைக்கு இழுத்தென்னை எட்டி உதைக்க வாறாள்கா

5. அவுள்றா மடிய எண்டு சொல்லி அடிக்கடி காசி கேக்கிறாள்கா
இவள்ற கஸ்டம் என்னால இதுக்கு மேல தாங்கொண்ணா

## 2. சௌதா சத்தாரைக் கூப்பிடல்

1. சவுதிக்கு நான் போகப் போறன் சம்பாரிச்சிக் கொட்டப்போறன்
வகைவகையாய் தேடப்போறன் வாரி வாரிக் கட்டப்போறன்
நாளைக்கே நான் போகப் போறன் நம்பி வந்து சேரு மச்சான்
இப்படியே நீயிருந்தா கிழிஞ்சாப்போலான் இருக்கும் மச்சான்

2. கல்லூட்டில் இருக்கப்போறா காணிவயல் செய்யப்போறா
கொல்லண்ட கம்மாலையை கொந்தராத்து எடுக்கப்போறா
அலுமினியம் பித்தாளை லைற்றுக் குழல் வாணா மச்சான்
இப்படியே நீயிருந்தா கிழிஞ்சாப்போலான் இருக்கும் மச்சான்

3. வூடோகுளோண் போடப்போறா டீவி டெக்கு பாக்கப்போறா
ஊட்டிலேயும் இருக்கப்போறா ஒய்யாரமாய் வாழப்போறா
நாலுபேரு பாத்து நம்மள நக்கலடிக்க வாணா மச்சான்
இப்படியே நீயிருந்தா கிழிஞ்சாப்போலான் இருக்கும் மச்சான்

4. இறால் குழம்பு தின்னப்போறா ஈரல் பிஸ்கேட் உண்ணப்போறா
நெய்ச்சோறு விழுங்கப்போறா நீட்டி நிமிந்து படுக்கப்போறா
சேர்ந்து இனி நாமிருப்போம் சண்டை கோவம் வாணா மச்சான்
இப்படியே நீயிருந்தா கிழிஞ்சாப்போலான் இருக்கும் மச்சான்

## 3. மனைவி வெளிநாடு செல்வதற்கு சத்தார் தடை விதித்தல்

1. சவுதிக்குப் போகப் புள்ள ஆசைப்படாதே
சப்ஏஜென்சி டூப்படிப்பான் நம்பிவிடாதே
ஏஜென்சி பேரு சொன்னா எலும்புடைப்பேன் பாரு

2. பத்துப் பெண்ணை ஏத்திவச்சான் பம்பாயிலே இறக்கிவச்சான்
எத்தனையோ பொண்டுகள ஏமாத்திப் பொழச்சிருக்கான்
ஏனென்று கேட்டாவிசா இன்னும் வரவில்லை என்பான்
மெத்தயிலே படுத்தான் ஏழைக்கெல்லாம் கொள்ளி வச்சான்
மரதான றோட்டக் கண்டா மறந்திடுவா ஊட்ட

3. அடுத்தூட்டு ஆமினாத்தா அலியார் மகள் ஆசியாத்தா
போறதுக்கு ஆசைப்பட்டா போகாம நாசப்பட்டா
கொடுத்த காச வாங்கிவர கோடுவரை ஏறிப்புட்டா
என்ன கதை ஆச்சி அவ இடுப்புடயலாச்சி

4. வெளிநாடு போகச் சொல்ல வேகுதில்லை என்மனசு
அஞ்சாம் நம்பர் றூம எண்ண அருவருப்பாய் இருக்குதடி
நம்ம கலாசாரமெங்கே நாசமத்துப் போச்சுதாடி
நாமெல்லாம் முஸ்லிம் என்ற நாமங்கெட்டுப் போச்சி

# ரெண்டாயிரத்திப் பத்தாம் ஆண்டு வெள்ளம் (2010)

**த.கதிர்காமத்தம்பி**

கரையாக்கன்தீவைச் சேர்ந்தவர். வயது 78. பாடசாலைக் கல்வியைக் கற்காத இவர் கூலித்தொழில் செய்துவருகின்றார். பாலப்பாட்டு, தனிநாடு, செல் வெடி, கப்பல் அடி, சரிபுக்காக்கா, ரெண்டாயிரத்திப் பத்தாம் ஆண்டு வெள்ளம், றால் கட்டு, வெள்ளாம வெட்டு, சூடடி, ராவயில சூடடி என அதிகமான குறும்பாடல்களைப் பாடியுள்ளார். உடனுக்குடன் பாடல்களை இயற்றி இசையுடன் பாட வல்லவர். அவரது பாடல்கள் கேலியும் கிண்டலும் மிக்கவை. அதனால் அவரது பாடல்களை மக்கள் மிகவும் விரும்பிக் கேட்பர். எந்தப் பாடலையும் அவர் எழுத்திலே பேணிவைக்கவில்லை. இவரது பாடல்கள் பலவும் மக்கள் மத்தியில் வாய்மொழியாக நிலவுகின்றன.

1. ரெண்டாயிரத்திப் பத்தாமாண்டு வறச்சி
செய்த போக வெள்ளாம நரச்சி
ஊட்டுக்க இருந்ததெல்லாம் வடிச்சித்தொறச்சி
இருந்த நெல்ல ஏத்திக்கொண்டு வயலுக்குள்ள விதச்சி
(ரெண்டாயிரத்தி)

2. மாரிமூலப் பக்கத்தால மழ இருண்டு வருகும்
மதியத்தால கிறுகிட்டெண்டா இது கலஞ்சி போகும்
ரெண்டு மணிக்குப் பொறகுதானே திறம் வெயில் எறிக்கும்
நாலுமணிக்குப் பொறகுதான் நல்ல கச்சான் அடிக்கும்

3. மாரிமழ கேட்டு மனவருத்தப்பட்டு
ஊரயடிப் புள்ளயார தூக்கி வெளிய போட்டு
ஒவ்வொரு தரமும் தூக்கி வெச்சி பொங்கலுமே போட்டு
வானம் பாத்த பூமி வயலுக்கேத்த சாமி
மாரி மழ எங்களுக்குப் பொழியவேணும் சாமி

4. தூக்கிவெச்ச கோபத்தில அவர் நினச்ச வேகத்தில
அடமழையும் புடிச்சி அடியோட கரச்சி
வெள்ளாம செய்தவண்ட தலயெல்லாம் விறச்சி
(ரெண்டாயிரத்தி)

5. வாய்க்காலத் தள்ளித் தள்ளி வயலாக்கிறான்
வாடிப்புட்டியத் தள்ளி வயலாக்கிட்டான்
லேவர் மெசிண்ட கேசிதான் இது நமக்கு லேசிதான்
மணித்தியாலம் ஒண்டு போனா மூவாயிரம் காசிதான்
(ரெண்டாயிரத்தி)

6. உழவு மெசினும் விதநெல்லும் கையில இரிக்கிடா
நெனச்ச நேரம் விதைக்கப் போக ஆளிரிக்கிடா
மெசின்காறப் போடி மெசினெடுத்து ஓடி
நாலு பேரு வாங்கடாண்டு ஆக்களக் கொண்டேத்தி

7. ஏத்திக்கொண்டு உட்டுப்போட்டு என்ன சொல்லுறான்
நீங்க விதைக்க நானடிக்கன் எண்டு மெசின் ஏறி
ஒழவெல்லாம் அடிச்சி மூலயெல்லாம் புடிச்சி
ஏர்நாளும் செய்யிறல்ல விதநாளும் செய்யிறல்ல
ஆண்டவன் இரிக்காரெண்டு அடியோட நினக்கிறல்ல
(ரெண்டாயிரத்தி)

# வெள்ளாம வெட்டு (1985)

## த. கதிர்காமத்தம்பி

1. பரமக்குட்டி போடிர சூடு நாங்க பட்டபாட்ட நீ கொஞ்சம் கேளு
அள்ளிப்பாரு பரமா நீ அள்ளிக் கொட்டு விசுமா
சும்மா இருந்த சூட்ட நாங்க அள்ளிப் போட்ட
அடிக்குது மழடா அது நல்ல மழடா
(பரமக்குட்டி)

2. வெள்ளாம சேனவட்ட மழயிலதான் பட்ட
காயவைரா ரெட்ட ஒண்ட தல மொட்ட
காத்திக மாசம் வெட்டுக்காரன் காச வாங்குறான்
கண்டகண்ட நேரமெல்லாம் காசக் கேக்கிறான்
போடி அவனத் தேடிப் போனா ஓடி ஒழிக்கிறான் - அங்க
பொறகு எடுத்த வெள்ளாமய வெட்டித் தள்ளுறான்
(பரமக்குட்டி)

3. சீப்பியேசிக் கட்டு நல்லா ஏத்தி ஏத்திக் கொட்டு
காலாச்சிரா வெள்ள இது ஒனக்கு வந்த தொல்ல
காலயில வெட்டுறான் பின்னேரம் கட்டுறான்
கடைக்குள்ள கொட்டுறான் காலடிக்கச் சொல்லுறான்
(பரமக்குட்டி)

4. வலயிறவுக்குக் கொண்டு போக மடி நெல்லு எங்கிறான்
வழிஞ்சிக்கிட்டு பாத்திட்டு மணக்குதெண்டு சொல்லுறான்
ஏறாவூருக் காக்கா நீ அள்ளி அள்ளிப் பாக்கா
ஈரநெல்லு எண்டு சொல்லி மொணந்து மொணந்து பாக்கா
(பரமக்குட்டி)

# ஊரின் பழங்கால இக்கால நிலை (2001)

மு.இ.அஹமதுலெவ்வை

1. எல்லா உலகும் ஏத்துகிற வல்லவனே - நாங்க
நல்ல கவி சொல்ல எங்களுக்கு வல்லமையைத் தந்தருள்வாய்

2. அக்கரைப்பத்தூரு ஆரம்பம் பெரியபள்ளி
பெரிய பள்ளியடி இருந்து சனம் பெருகிக் குடியேறினாங்க

3. களிமண்ணால் செவரு வச்சி கதியாக்கம்பு வேலி கட்டி
வைக்கலால கூரை மேஞ்சி வாண்டதொரு காலமப்போ

4. கிடா மாடுதான் பொணச்சி கேட்டிக்கம்பு கொண்டடிச்சி - இந்தப்
பள்ளவெளிவயல் மிரிச்சி அப்ப பழங்காலம் சோறுதிண்டார்

5. ஒரு மாதம் வயல் மிரிச்சி ஊத்துத் தண்ணி தான் மறிச்சி
ஏத்துக்காலி கட்டி எறச்சி அப்போ சோறு திண்டார்

6. வேலிப்பறண் காவல் பறண் விரட்டி பம்பை அட்டாளை
கட்டிவச்சி கண்முழிச்சி காவல் காத்துச் செஞ்சாங்க

7. நஞ்செண்ணை பசளையில்ல பயிருக்கு நசல் ஒண்டும் வாறதில்ல
பள்ளித் தண்ணி கொண்டெறிஞ்சா பல நசலும் பறந்துவிடும்

8. வட்டை அதிகாரி போடியார் வட்டானை
வட்டை வளச்சி வருவாங்க ராக்காவல்

9. பச்சை காய் நெல் துவச்சி பதமான அவல் இடிச்சி
இச்சை வச்சி திண்டாங்க இப்ப அது ஏது ராத்தா

10. சோளகன் றொட்டி சோக்கான குரக்கன் களி
ஒல்லிக்காய் சோறும் ஒடியல் புட்டும் திண்டாங்க

11. வாரிக்காலன் புணச்சி ராவயில வட்டயெல்லாம் சூடடிப்பார்
பொலிபொலியோ பாட்டு அதைக் கேட்டிரிக்க சலிப்பாறும்

12. காறுமில்ல சைக்கல் இல்ல கால்நடையும் வண்டிலும்தான்
றோட்டுமில்ல லைற்று இல்ல மணல் ஒழுங்கையெல்லாம்
இணல் மரங்கள்

13. எங்கிட ஆபாக்கள் எல்லாரும் அப்புடித்தான் வாண்டாங்க
ஒரு வாதை வருத்தமில்ல அவங்க வங்கிசங்கள் கனக்க தம்பி

14. வங்கிசங்கள் பெருகி ஒரு வளவுக்குள்ள நாலு ஊடு
குப்பை போட எடமும் இல்லை குந்தி இரிக்க வாசல் இல்லை

15. தென்னந்தோட்டமெல்லாம் அழிச்சி கடல் தொங்கல் மட்டும்
குடியேறி
குந்த இடம் இல்லாம குளம் குட்டை எல்லாம் சனம் இரிக்கி

16. மையத்துப் புட்டி எங்கே மத்த வேனா குளமும் எங்கே
அவரிப்புட்டிக் களமும் இல்லை அங்க யெல்லாம் சனமிரிக்கி

17. வரிசாவரிசம் வந்தடிக்கும் வெள்ளமெல்லாம்
ஊர்களுக்கி ஓடி வந்து இந்த உப்பளத்தில் தான் உழுகும்

18. எள்ள வெள்ளான் குளமும் இல்ல பாலா மோடப் பள்ளமில்ல
உப்புக்கரச்சி இல்ல வெள்ளம் வடிஞ்சோட வழியுமில்ல

19. பாலை வீரை கடலாஞ்சி கிளா வீணாச்சிப் பழம் ஆஞ்ச இடம்
கொக்குப் பீச்சிக் காடும் இப்ப குடியிருப்பாய் தான் போச்சி

20. வேரடி ஓடையில்ல படை வெட்டின குடாவுமில்ல
ஊவாமுனைக் கட்டுமில்ல மொட்டயன்ர வெளியுமில்ல

21. இரிக்க இடம் இல்லாம இந்த ஹிஜ்றாவாடிக்கு வந்து
குடி அமந்தோம் நாம இந்த வடிவ இப்ப கேள் ராத்தா

22. வடிச்சலோடும் பக்கமெல்லாம் மறிச்சி மண் போட்டாக்கி
மில்லுக்கட்டிப் போட்டாங்க வெள்ளம் மல்லுக்கட்டி நிக்குதுகா

23. ஒழுங்கையெல்லாம் றோட்டாக்கி ஓடுது கார் ஆட்டாவெல்லாம்
வெள்ளம் வந்தால் பல்லிழிவு பாக்கொண்ணா சண்டை மண்டை

24. ஊர்களுக்கி ஓடிவந்த ஊத்தை நாத்தத் தண்ணியெல்லாம்
ஊடு வாசல்தான் நிறஞ்சால் நமக்கு ஒதுங்க இடம் ஏது தம்பி

25. அடுப்புக் கூட்ட இடமும் இல்ல ஆக்கிக் காச்சி தின்ன இல்ல
படுக்க எடமும் இல்ல நாங்க பட்டதுயர் ஆர்அறிவார்

26. ஊர்தாண்ட வெள்ளத்திலே நாங்க ஒதுங்க இடம் இல்லாம
பகலும் ராவும் படுக்கயில்ல பசிக்குத்தின்ன ஒண்டுமில்ல

27. வெள்ள அழிவுமில்ல வேற எந்த உதவி இல்ல
கூப்பன் அரிசில்ல குடிக்க நல்ல தண்ணி இல்ல

28. நெளும்புக்கடி தாங்க ஒண்ணா நித்திரயும் வாறதில்ல
ஒழும்பிக் குந்தி நெளும்படிக்க உடம்புலயும் சீவன் இல்ல

29. தலை விதியோ ராத்தா நம்முட தாங்காத வேதினக்கி
முடிவு என்னெண்டு நீ முன்னே வந்து சொல்லு ராத்தா

30. றோட்டுப் பள்ளம்தான் நிறப்பி சைற்றுக் கானும் கட்டி விட்டால்
தண்ணி ஓடித்தான் போகும் நாம தாண்டு ஒழும்பத் தேவல்ல.

31. சம்புக்களப்பு தளைக்கும் வள்ளல் தாமரையும்
வெள்ளாமை செஞ்ச பூமி தண்ணிக்க வீணாக தாண்டிரிக்கி

32. பாளிமெந்துக்குள்ள மந்திரி பவுறாக போயிருந்து - இந்த
குறைகள் சொல்லி எங்களுக்கு நிறைவு செய்து தர வேணும்

33. பாட்டுப் படிச்சவர்க்கும் பாட்டெழுதித் தந்தவர்க்கும்
கேட்டு இருந்தவர்க்கும் கிருபையுடன் கார் வாழி

## பொலிவெழந்த ஊர் (2012)

**எம்.ஐ.எம்.ஜெலீல்**

அக்கரைப்பற்றைச் சேர்ந்தவர். வயது 49. க.பொ.த (சாதாரண தரம்) வரை கல்வி கற்ற இவர் பாடசாலைப் பாதுகாப்பு உத்தியோகத்தராகப் பணியாற்றி வருகின்றார். காதல் கவிகள், பொலிவெழந்த ஊர் முதலான பல கவிகளை எழுதியுள்ளார். தனது கவிகளை இசையுடன் பாடவும் வல்லவர். அண்மையில் தான் எழுதிய கவிகளைத் தொகுத்து வெளியிட்டுள்ளார்.

1. செவரில்லாச் சித்திரமோ சீவனில்லா வெறும் ஜடமோ
தாளில்லா மையெழுத்தோ - எந்த தாயுமில்லா மகப்பிறப்போ

2. காடுவெட்டி வேர்புடிங்கி காணிபூமி சேத்து வெச்சு
கொண்டுபோற தொண்டுமில்ல கூடரிக்க ஆர் வெருவா

3. காலாதி காலமெல்லாம் கனத்த சனம் மீம் புடிச்சி
வாழ்ந்த கொளம் பாருபுள்ள - இப்ப வழி நெறய ஆளிரிக்கி

4. இயற்கை என்னும் சாமான் இறைவனோட சீதனந்தான்
அழியாப் பொருள நீங்க ஆளுமட்டும் பாத்துருங்கோ

5. காடு கடல் மலயும் கனிய வளம் அத்தனயும்
ஆறும் கொளமும் - இப்ப அழியிறத பார் சனங்காள்

6. பறவ பச்சி யெல்லா மிஞ்ச பசி தீத்து போன கொளம்
பொலிவெழந்துபோன - இந்த பொறிய இப்ப பார் சனங்காள்

7. ஆறும் அழிஞ்சி வெறும் அரிவாய்க்கால் ஆனதென்ன
சோறும் கொழஞ்சி - இந்த சொதிக்கடங்கா மாயமென்ன

8. கட்டடங்கள் கட்ட எண்டு கன மரங்கள் அழிஞ்சதில்
கால் சூடும் தாங்குதில்ல - இப்ப கண் நெறய தித்திரெல்ல.

9. மரமழிஞ்சி வெறகானா மாரிக்கித்தா னொதவும்
சுத்தமான காத்த நாம சுழி ஓடினாலும் காணவெரா.

10. கடற்கரயில் மண்ணெடுத்து கரயழிஞ்சி போகுதெண்டா
காலமெல்லாம் நாம புள்ள கதச்சிரிக்க எங்க போற.

11. கரயும் அழிஞ்சி இஞ்ச கன மரமும் கெல்லாந்து
வாழ்வும் வளமும் பெரும் வஞ்சனயாய் ஆனதென்ன.

12. மல ஒடச்சி கல்லெடுத்து மாளிகைகள் கட்டுறென்ன
நெல நடுக்கம் வந்தா - நீங்க நெல குலஞ்சி போறதென்ன.

13. பாத செய்ய எண்டு செல்லி பன தென்ன பால பலா
பல நூறு மரமெழந்தா பாலவனம் ஆகிறதான்

14. காவட்டு பாத செய்ய எண்டு காச்ச தென்னய தறிக்க
கெதி எழந்து நிண்ட நெல - அத கேக்க இங்க ஆர் இரிக்கா

15. வழிப்போக்கர் எல்லாம் - இந்த வழி நெடுக இணப்பாறி
இருந்த மதிர எங்க - அந்த ஈர மாலும் காணல்ல

16. ஒலகிலுள்ள எல்லாரும் நாம ஒத்துமயாக் கூடி நிண்டு
மல ஒண்டச் செய்யலாமோ - அப்ப மடத்தனமா ஏனொடப்பான்.

17. கோழி முட்ட வித்து கொறட்ட கருவாடு வாங்கி
திண்ட சனம் இஞ்சரிக்கி - எப்ப திருந்துமடோ ஆண்டவனே.

# அறப் பாடல்கள்

## 1. பெண்ணைக் கைவிட்டுச் சென்றவன் மீது அறம்

**ஏ.எல்.மீராஉம்மா**

அடமடயா சாம்பிராணி என்ர மனசத் தெரியா உனக்கு
பத்தாம பத்தி நீ ஒண்ட பண்ணயிலே நீ உழுகுவா
பத்தி எரிவாய் நீ பண்ணயிலே நீ உழுவாய்
சுத்தும்டா என் நெருப்பு நீ சூழ்ந்திருக்கும் மாளிகையில்
கறுமம் புடிப்பாய் நீ கக்கிசத்தில் வந்திடுவாய் என்ர
பால் போல் மனத நீ பதற வச்சிப் போட்டயடா
கொமரை அலச்ச கொடும்பாவி எங்கே என்று
கண்ணப் பிரட்டி மடயா ஒன்னில கடிந்தேறுவார் மலக்கு
மூடு பலக ஒன்ன முன்னெழுந்து கேக்கிறது - இந்த
கொமர அலைத்த கொடும்பாவி எங்கே என்று
கொடிய நரகம் கூட்டிவரச் சொல்லிடுமாம் - அந்த
நரகத்துக்கு மடயா நீ ஆளாகப் போறேயோடா
காலுக்குச் சங்கிலியாம் கழுத்தில ஒரு மாலயுமாம்
தேடி நிக்காம் ஒரு பாம்பு இப்படித் தீங்கு செய்த பேர்களுக்கு
போற இடத்தில நீ புள்விரியன் தீண்டிடுவாய் என்ர
தங்க மனச நீ தளம்பவச்சிப் போட்டயடா

## 2. மிதிவடிக் கட்டை களவெடுத்தவன் மீது அறம்

**சேகுமதார்**

மட்டில் அடங்காத மன்னவா - உன்னை
வணங்கும் திருப்பள்ளி வாசலில்
கட்டை களவெடுத்த கள்ளனை - இங்கு
கலங்கிடச் செய்திடு யாறப்பு

### 3. தேநீர்க் கடைக்காரனுக்கு அறம்

**அப்துல் றகுமான் ஆலிம்**
அக்கரைப்பற்றுப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்.

சூலாக்கும் கோலாக்கும் சுடுகாட்டுப் பாலாக்கும்
ஏலாக் கலந்தனுக்கும் இறக்காமத்தில் கடையாமா

### 4. பன்றி மீது அறம்

**அப்துல் றகுமான் ஆலிம்**

வில்லம்பினாலும் விசை மிகுந்த குண்டாலும்
கொல்லவொண்ணாப் பண்டியதைக் கூரவே - என்
சொல்லம்பு தைத்துருவிப் பாய்ந்ததுவே தாரணியிலே
இரணம் அற்றறுந்து போனதுவே சூ.

### 5. வேளாண்மை திண்ட மாட்டுக்குப் பாடியது

**காளியப்பு வீரசிங்கம்**
திருகோணமலை - சேனையூரைச் சேர்ந்தவர்.

பாலிப் பசுவைப்போல வேலி மறித்திட - இந்த
ஞாலத்தில் உண்டோ மாடு
பச்சைப் புல்லு மேயாது பசும் வைக்கோலக் கண்டால் விடாது
கழுத்தில கயிறப் போட்டு கணுவில கட்டினா
கண்ணால சொரியும் கண்ணீர்

### 6. பயிரை நாசம் செய்த எலிக்கு அறம்

**கருதுலெவ்வை**
அக்கரைப்பற்றுப் பிரதேசத்தைச் சேர்ந்தவர். வட்டவிதானையாகக் கடமை யாற்றியவர்.

சிந்தை மனம் வாடுறேனையா - எலிகள் செய்த
தீவினையைப் பாருங்களையா - எலிகள் செய்த
தீவினையைக் கேளுங்களையா
எட்டு வயதினிலே எட்டேக்கர் காடு வெட்டி நான்
பட்டபாட்டையெல்லாம் பாழடைய விட்டுதையா
ஒரு மாதம் வெட்டினதையா - என் சேனையை
வெளிசாக்கின பத்துநாளையா - என் சேனையை

பொந்து துளைத்துக் கொண்டு புரையருகே தானிருந்து
கண்டு கண்டாய் தின்னுது கக்கல் புடிச்ச எலி
பொந்து துளைத்துக் கொண்டு புரையருகே தானிருந்து என்
குடியைக் கெடுக்குது குட்டல் புடிச்ச எலி
இத்தனை கோபம் எரிச்சல் புகைச்சல்
எத்தனை நாளாய் காட்டி வாறாய் - உன்
பித்துக் கலங்கி பெருங்குடலத்து
பேறுபெறுவாய் பேசாமல் இருந்துவிடு.

**7. வேளாண்மைக்கு விழுந்த புழுக்களுக்குப் பாடிய அறம்**

**ஏ.எல்.மீராஉம்மா**

ஒத்த வினை எங்களூர் பிச்சிடா மடுவில்
குறையாத நெற்பயிர் விதைத்து முடிவானால்
சற்றுமே பொறுமையில்லாத புழு வந்து
தரையுண்ட பயிர் முழுதும் அறையுண்ணலாமா
அறையுண்ட பயிர் முழுதும் அழிபாகலாமா
அநியாயமான செயல் இது செய்யலாமா
நிறை கொண்ட செந்நெல் பயிர் செழிவுடை கெடுமோ
நீதியோ இது செய்த சோதி மண்ணாணை.

**8. தென்னை மரத்திற்கு அறம்**

**உமறுப்பிள்ளை**

தென்னை மரங்காள் நீங்கள் செய்யும் உபகாரம் - இந்தக்
கன்னார்கள் இருக்குமட்டும் காயாது நின்றிடுவீர்.

**9. தென்னை மரத்திற்கு அறம்**

**வ.சின்னலெவ்வையின் தங்கை**

அக்கரைப்பற்று - இறக்காமத்துக்கு அடுத்துள்ள வரிப்பத்தஞ்சேனையைச் சேர்ந்தவர். வட்டவிதானையாகக் (குறிப்பிட்ட ஒரு பகுதி நெல் வயல் களின் நிர்வாகப் பணிகளை மேற்கொள்வதற்காக நியமிக்கப்படுபவர்) கடமையாற்றிய சின்னலெவ்வை என்பவரின் தங்கை.

தென்னை மரமே தேடிவந்தேன் உன் காலடிக்கி
இப்புவியில் சாறா இளனி இல்லையென்றாள்
கற்றோனை முன்னிறுத்தி நீ காயாமல் நில் மரமே

# 3

## அஷ்ரப் ஒப்பாரி (2000)

**அ.றஹ்மத்தும்மா**

மருதமுனையைச் (பிரான்ஸ் சிற்றி) சேர்ந்தவர். அவரது வயது 90 இற்கு மேல். தரம் ஐந்து வரை கல்வி கற்றவர். கவி வடிவத்திலேயே பாடல்களைப் பாடியுள்ளார். அஷ்ரப் ஒப்பாரி, வீடமைப்புக் கவிகள், சுனாமிக் கவிகள், சரத்பொன்சேகாவின் சிறை பற்றிய கவிகள் முதலான கவிகளைப் பாடியவர். இவர் தனது கவிகள் பலவற்றை எழுதி வைத்துள்ளார்.

1. ஆதி பெரியவனே அடங்காப் பெரும் கோமானே
நீதி உடயவனே எங்கள் நிறைந்த றப்பீல் அலமீனே

2. நாங்கள் ஏழைகள் கூடி இருந்தழுத ஒப்பாரி
ஆலம் நிறைந்த றப்பு உண்ட அனுசது மேல் தூக்கி வையடா

3. ஆலம் நிறைந்த ஆதி றகுமானே - நாங்கள்
சுக்குறு செய்து தூக்கி வைத்தோம் உன்னளவில்

4. சந்தன மரத்த தாழியாலும் நாட்டாம
பாளிமன்றில் நாட்டி வைத்தோம் அல்லா பறித்தெடுத்துப் போட்டயடா

5. பச்சப் புறாவே பகலிறைக்கும் செம்பகமே - எங்குட
நீலக் கருங்குயில காபிர் கருவறுத்துப் போட்டான் அல்லா

6. வண்டமுழுகும் காட்டில் மரமழுகும் வீணதுபோல் - இந்தப்
பாலர் அழுகுறத்தெ எனக்கி பார்த்தா மனம் பதறுதல்லா

7. நடுக்கடலில் பின்ன மரம் நாலு திக்கி வேரோடி
பூக்குமந்த வேளையிலே காபிர் புழப்படுத்திப் போட்டான் அல்லா

8. பொன் என்று எண்ணி பூவென்று போற்றி வைத்து
தங்கமென்று விலைமதித்த எங்குட தலைவர் எங்கே யாறப்பே

9. சிகிரியா என்னும் காட்டில் கமரி என்னும் பாதயிலே
தேவி என்னும் மலையருகில் காபிர் செய்த சதியோ றகுமான்

10. கப்பல்ல ஏத்தி கடும் உயரமாய் பறந்து
வருகுமந்த வேளையிலே அவர வழி மறித்ததார் குருவி

11. கூட்டுக் குருவி கூவும் குயில் இனங்கள்
தொழுகும் புறாவே இந்த துயரனைகளைச் சொல்லிடுங்க

12. மாணிக்க ரத்தினமே மாறா ஒழித் தங்கமிது - எங்கிட
கல்பு நிறைஞ்ச கனி உங்கள நாங்க காணுவது எக்காலம்

13. சேக்குறுட்டு பங்களாவுக்கு சீக்கிரமாய் ஓடிவந்து
மக்களாச்சி மன்னர் நல்ல மறுமொழிகள் சொன்னாராமே

14. விடிஞ்சி ஒழும்பி விரவில் பயணமுற்று
வாரணெண்டு போனவர இப்ப வழிமறிச்ச ஆர் றகுமான்

15. ஈரலும் ஏங்கி எங்கிட இருதயத்தில் மூச்சடச்சி
நாசிமே காஞ்சி அல்லா நாங்க தெருத்தெருவா நின்றழுதோம்

16. அல்லா உன்னத் தெரியாம ஓர் அணுவும் அணுகாது
எல்லாம் தெரிந்தவனே எங்கள் ஏக றப்பில் ஆலமீனே

17. வெளிச்ச வீடு கட்டி அங்கே வேணுமென்றோர் மேடை போட்டு
ஊரூராய் மக்களல்லாம் அல்லா ஒதுங்கிவரச் செய்தவர்ரா

18. திராய்க்கேணிக் காட்டில் தெரிவு கண்டு றோட்டோரம்- அவர்ர
பேரு வளங்க பெரும் ஊடு கட்டி வைத்தாரல்லா

19. ஒலுவிலென்னும் நகருக்கு ஓடி வந்து அவர் சேர்ந்து
செய்து வைத்த சேவைகள் எனக்கி செல்ல முடியா றகுமான்

20. எண்பத்தி ஒன்பதில் நாம இருபேரும் வைத்த மரம்
இரண்டாயிரம் ஆண்டில் மச்சி இது இறந்துழுத்த மாயமென்ன?

21. தாழமரம் வைத்து தனித்தனியாய்த் தண்ணி ஊத்தி - நாம
தழைக்க வைத்த தாழமரம் இத தரிச்செறிந்த யாரு மச்சி

22. இலந்த மரமொன்று நாம இருபேரும் தாம் விரும்பி
காத்து வளர்த்த மரம் மச்சி நம்மட கைதவறிப் போச்சிதடி

23. இணல் விரித்த ஆலமரம் நாம் எல்லோருக்கும் சொந்த மரம்
விழுதிறங்கிப் படர்ந்த மரம் இப்ப காணல்ல யாறகுமான்

24. தங்கம் போல் மேனி தளதளத்த கண்ணொளிவு
முத்துப் போல் பல்லு அவர்ர முகத்தொளிவ நாங்க காணுரெப்போ?

25. மொட்டத் தலயும் மொழுகு நிற கண்ணொளிவும்
சித்திரம் போல் நெத்தியையும் றகுமான் இந்த சீமயிலே நாங்க
காணுரெப்போ?

26. பொண்டாட்டி புள்ள உன்னப் பெற்றெடுத்த தாயாரிடம்
மனாவில் வந்து நீங்க மாண்ட செய்தி செல்லிடுங்க

27. என்னமோ ஏதோ எதுவும் புரியயில்ல உங்குட
தாயாரிடம் வந்து இந்த சரித்திரத்தச் சொல்லிடுங்க

28. கொத்தமல்லி கோமதகமே குங்குமப் பூ குங்கிலிங்கமே
சாம்புறாணி கற்பூரமே தலைவர நாங்க எங்க தேடிக் கண்டெடுப்பம்

29. ஆபத்தால் வந்ததோ இல்ல ஆருடைய தீவினயோ
தலையில் வரியோ அல்லா எங்கிட தலைவருக்கு வந்த கெதி

30. கண்கெட்டுப் போவான் அவண்ட கண்ணிலயும் உல் உழுவான்
தலையால் தெறிச்சிடுவான் இந்தச் சதி நெனச்சிப் போட்டானே

31. மூள சிதறி முதுகால் உதிரமூத்தி
குடலும் சரிஞ்சிடுவான் இப்ப கொண்டு வந்து செய்த சதி

32. பாம்பு கடிச்சி பாதயில கார் அடிச்சி அவண்ட
மூள சிதறிடுவான் இந்த முடிவெடுத்துப் போட்டானடி

33. ஈரல்ல கட்டி கட்டி அவண்ட இரு கண்ணும் வெள்ள போட்டு
நாசி கரஞ்சிடுவாய் பண்டி இது நல்லமெண்டா செய்து வைத்தா

34. மறக்க ஒளியும் மகுமுதென்னும் நிண்டிலங்கும்
இரக்கமுள்ள சீமானெ இப்ப எரியவச்சிப் போட்டானுகள்

35. ஏழு கடலும் இரைகடலும் தான் அமந்து
பணிஞ்சி அலயெழும்பும் அஸ்ரப்புட பரிதாபத்தக் கேட்டவுடன்

36. ஏழயின் தூணு எத்தீனின் நிலக்கதவு
அகதியின் திறப்பு இத ஆர் முறித்தா யாறகுமான்

37. நிம்பறுக்குசக்க நிலைக்குமந்த பூமியில
மையத்தடக்க யெண்டு மன்னர் மறுமொழிகள் சொன்னாரல்லா

38. எங்கேயோ வைத்து இஸ்றாயில் என்றோகை எடுத்தாகிலும் - அந்த
ஒலுவில் நகரில் என்னை ஒழுங்கு முறை செய்யுமென்றார்

39. மையத்தெடுத்து வந்து மனங்குளிர சீரு செய்து
நல்லடக்கம் செய்யயெண்டு நம்பியிருந்தார் ஒலுவில் மக்களல்லாம்

40. மையத்துமில்லை மதிப்பதற்கு முடியுதில்லை
சாம்பலுமில்லை யென்ற சரித்திரம் தான் வந்ததல்லா

41. மையத்தெடுத்து வந்து மக்கள் மனம் குளிர சீரு செய்து
கபுறு வெட்டிப் பாக்காத இந்த கவலயெப்ப தீர்ரதல்லா

42. அரப்பை அரை அனைபேரும் தலை தேச்சி
குளிப்பாட்டிப் பாக்கயில்ல தலைவர் குடிபுகுந்தார் ஆகிறத்தில்

43. பன்னீரெடுத்து பலபேரும் தான் தெளிச்சி
நீரூற்றிப் பாக்கயில்ல தலைவர் போய்ச் சேர்ந்தாராம் சுவர்க்கம்

44. காதிர ஒலியே கற்றவரம் பெற்றவரே
குதுபொலி நாதா தலைவர கொண்டு வந்து சேர்த்திடுங்க

45. மாடு அறுத்து மனிதருக்குத் தான் கொடுத்து
ஒலிமார்க்கும் ஓதுவிப்போம் அவர் ஓடிவந்து சேர்ந்தாரெண்டால்

46. தலைவர் இருந்து தாயாரிடம் வந்தாரெண்டால்
சுன்னத்து நோன்பு நாங்க சீக்கிரத்தில் பிடிக்கரிக்கம்

47. நாகூரு மீரான் நற்தம் பெற்றவரே
முகைதீன் ஆண்டவரே இதுக்கொரு முடிவெடுத்து வந்திடுங்க

48. வானத்து வெள்ளி வான்கிழக்கின் சூரியனே
மேக்கில் படும் பொழுதே உங்கள நாங்க பாக்கிறது எக்காலம்

49. மேகம் இருளாகி மேக்கிலோர் முழக்கமுற்று
மின்னலடிச்சாப் போல அல்லா அவர்ர உயிரழிச்சிப் போட்டயடா

50. ஆழமுள்ள கெங்கயிலே அழகான ஒரு பூப்பூத்து
எங்கும் மணக்கிறது சந்திரிகா நீ இம்மணத்தக் காணயில்ல

51. கருத்த உருவாக்கி காரியத்ததான் உணர்ந்து
நீதியுடன் பார்த்து நிரபுடியா சந்திரிக்கா

52. குருந்தன் பழத்த குருவி அருந்துறாப் போல்
வருந்துறங்கா சந்திரிக்கா எங்கிட தலைவர் வரவேணுமெண்டு

53. மக்கா நகர் செண்டு அந்த மன்னவன் தான் தொழுத
உம்றாவும் செய்த அந்த உதவியாலும் இல்லயடா

54. முஸ்லிம் என்னும் கட்சி முன்னேற வேணுமெண்டு
உன்னுடன் சேர்ந்து நடந்து வந்த எங்கிட தலைவர் எங்கே சந்திரிக்கா

55. நினச்சா செருப்பு நிணல் பார்த்தால் ஓர் அடப்பு
தாள் பார்த்தால் சலிப்பு எங்களுக்குத் தாங்கயொண்ணா சந்திரிக்கா

56. யுனிவசிற்றி கட்டி மக்கள் ஒதுங்கிவர பாதமைத்து
ஓட்டம் பிளசும் கட்டி தலைவர் ஒழுங்குமுறை செய்தாரல்லா

57. ஒஸ்பிட்டல் வாட்டும் ஒழுங்கான ஒரு டெலிகோமும்
நூலகமும் கட்டி மக்கள் மகிழ்ந்திருக்க செய்தாரல்லா

58. குது பொலி முகையதீனே கொடிபிடிக்கும் நாதாவே - நாங்க
வாதாடிக் கேக்கோம் தலைவர் வந்துசேர வேணுமெண்டு

59. உசக்கப் பறக்கும் ஒரு கோடி மலக்கு - அந்த
காட்டில் பறந்து தலைவருக்குக் கையுதவி செய்ங்க

60. பத்தாம் மலக்கும் பறக்கும் ஜிப்ரிலும்
வாதாடிக் கேட்டு தலைவர வரவழச்சித் தந்திடுங்க

61. ஆதியிடம் இருந்து மக்கள் அழுது கண்ணீர் வடித்து
வாதாடிக் கேக்கோம் தலைவர் வந்துசேர வேணுமெண்டு

62. இருட்டில் பறக்கும் இருசோடிப் பச்சிகளே உங்குட
படத்த விரிச்சி தலைவர பாத்தெடுத்துத் தந்திடுங்க

63. மக்காவில் இருக்கும் மாடப்புறா சோடிகளே - அந்த
மன்னர் மௌத்த எங்கிட மனங்குளிர சொல்லிடுங்க

64. புள்ளி மான் புள்ளி புலுட்டு மான் பூச்சிகளே - அந்த
காட்டில் நடந்த கதயொளுப்பம் செல்லிடுங்க

65. மக்கமெனும் பள்ளி அந்த மன்னனுட மாளிகையில்
வாழும் மலக்குகளே தலைவர்ர வரலாற்ற சொல்லிடுங்க

66. குது பொலி முகையதீனே கொடிபிடிக்கும் நாதாவே உங்குட
உண்ணுதலக் கொண்டு தலைவர உடனே கொண்டு சேர்த்திடுங்க

67. ஆறாத காரியத்த ஆற்றி வைக்கும் கோமானிடம்
வாதாடிக் கேக்கிறோம் மக்கள் தலைவர வரவழைக்க வேணுமெண்டு

68. அலியார் படைபொருத அவ்வல் அறுசி நடுநடுங்க
கூறுனிங்கள் கையேந்தி குழறும் துவா நாங்க கேட்டமூற

69. அந்த அரசியிலிருந்து ஆனதும் சரிபார்த்து வைத்த
நங்கூரமான கப்பல் நடுக்காட்டில் பலியானதென்ன?

70. பஞ்சா புதகமென்னும் பாராம் பெரும் மலைக்காட்டில்
குடியிருந்த குருவியெல்லாம் அல்லா இப்ப கூடுவிட்டுப் பறக்குதாமே

71. வண்டு குழறி வாள் எறும்பு தான் கலஞ்சி
பாம்பு நெழுகுதல்லா தலைவர் பரிதாபத்த பார்த்து இப்ப

72. பச்சக் கிளியும் பறக்கும் பரிந்தினமும்
கொட்டுவாப்பாக்கானும் இப்ப குழறி அழுகுதல்லா

73. குத்துக் குளவி காட்டில் குடியிருந்த கரும் குளவி
தேன்பூச்சிக் கூட்டமும் இப்ப திசைதிரும்பிப் போகுதல்லா

74. காடு மலையும் கரும்மேகம் தான் இருளும்
புல்லும் குழறுதல்லா தலைவர் இந்தப் பூலோகத்தில் இல்லையெண்டு

75. கொட்ட போட்டு மரமெழுப்பி குளுந்த தண்ணி நாங்க ஊத்தி
பழம் தரும் வேளையிலே அல்லா இந்தப் பழுது வந்த மாயமென்ன?

76. தக்குபீர் முழக்கமும் தானே யொரு சலவாத்தும்
திக்கிரும் செய்து வந்த எங்கிட தில்லை மரம் இப்ப இல்லையல்லா

77. காபிர் முஸ்லிம் என்று ஒரு பாகுபாடும் இல்லாமெ
பாத்துதவி செய்து வந்த எங்கிட பாசமலர் யாறகுமான்

78. அந்தப் பாளிமெண்டு சபயதிலே சாய்ந்திருந்த கதிரையது
சலிச்சழுகிறதாம் எங்கிட தலைவர் எங்கே போனதென்று

79. வானம் முழங்குதே வையம் ஏங்குதே நாளும்
எல்லாம் ஏங்குமே தலைவரே நாளும் எல்லாம் ஏங்குமே

80. எங்கிட பள்ளியடி வந்து மகன் பதறி நிண்டு
கண்கலங்கி கதைக்க முடியாமகா போனாருகா தங்கமகன்

81. தங்க மகனே தாக்கி ஒரு மகனே நீ
தனிய வந்த நேரம் ஒன் மனம் தாங்காமெ அழுதாயாமே

82. சீமயக் கண்ணாடி சிரிச்சா முகம் தெரியும்
ஏழட வங்காளக் கண்ணாடி வாறதெப்போ யாறகுமான்

83. அறுகும் படருதில்ல ஆடும் ஏறி மேயுதில்ல
கொடியும் படருதில்ல அல்லா அவர் குடியிருக்கும் ராச்சியத்தில்

84. இப்லாந் துறந்தங்க உறு வாக்கா செடுத்து சீல கிழிச்சி
தலை வந்தா நேத்து வைப்போம் அவர் சீவனுக்கு

85. மக்கச்சரீபில் மாதாழ கன்னிகட்டி
உடனே பழம் பழுக்கும் அல்லா ஊர்வந்து தலைவர் சேந்தாரெண்டா

86. எங்கள் தலைவர் என்ன பாவம் செய்தாரோ அதை பொறுத்திடு
யாஅல்லா
தெரிஞ்சிம் தெரியாமலும் செய்த குத்தத்தையும் பொறுத்தருள்வாய்
யாஅல்லா

87. ஆக்கின சோறு எலக்கிற போல்
ஊர்மக்கள் கிடந்து மக கலங்குதுரா உன்னாலே

88. அனிச்ச மரத்திலே அணிலேறி மேஞ்சது போல்
இடி உழுவாய் அவர்ர முழுக்கறுமம் உன்னோடடா

89. சீருடைய அன்பினால் சிறப்பின் பண்பினால்
தீமை செய்தீர் அல்லாவே யாறுகூலே தீமை செய்தீர் அல்லாவே

90. அல்லா இடத்தில் ஆகிறத்தில் அங்கேயுள்ள
கூருனின்களோட கூடிட்டிரிக்க அல்லா உதவி செய்வாய்

91. வெள்ளப் புடவ வாங்கி வேணுமெண்டு மோதின் சட்ட தச்சி
போட்டழகு பாக்கயில்ல தலைவர் போய் மறைந்தார் இறையிடத்தில்

92. அல்லாட வாசலிலே அலநபி தொட்டிலிலே
பொன்னூஞ்சல் ஆட அங்கே போய் சேந்தாராம் தலைவர்

93. சுவர்க்கத்து வாசலிலே சுகமாரிக்கும் கூறுனிங்கள்
அமானமொன்றனுப்பிரிக்கோம் அத பார்த்துதவி செய்திடுங்க

94. நீ அறுசில் கொடிமரம் குறுசில் தனிமரம்
சொர்க்கம் புகுந்து போனதே என் தங்கமே சொர்க்கம் போய்ப்
புகுந்தியே

95. நீ அல்லாவின் மறையே அன்பான அழகே
வல்லோனின் கரத்தில் மகாவீரரே யாறகூலுல்லா

96. ஈரல் கொதிச்சி இதயமும் தான் துடிச்சி என்ட
உள்ளம் பதறுதெண்டு அல்லா இந்த பாட்டெடுத்து நான் படிச்ச

97. பாட்ட இணக்கி பதிஞ்செடுத்து கொப்பியிலே
கிசட்டில் கொடுத்திருக்கேன் இதில் குறை தீர்ப்பாய் யாறகுமான்

98. ஆகிறம் துனியாவிலே ஆலநபி மாளிகையில்
கூட இருக்க தலைவருக்குக் கொடுத்துதவி செய்வாய்

99. சுவர்க்கத்து வாசலிலே துலங்கு மந்தக் கொடி நிழலில் அவர்
அமர்ந்து இருக்க அருள் புரிவாய் நீ வாழி

100. பிர்தௌசி என்னும் அந்த பேராம் பெரும் சுவர்க்கம்
பொன் கட்டிலில் தூங்க நீ கருணை புரிவாய் வாழி

# இராசமாணிக்கம் கும்மி (1960)

**வே.சின்னத்தம்பி**

பழுகாமத்தைச் சேர்ந்த இவரை அவ்வூர் மக்கள் ''புலவர்'' என்று கூறுவர். விவசாயத் தொழில் புரிந்தவர். கூத்து அண்ணாவியாகவும் விளங்கியவர். பல வருடங்களுக்கு முன் இறந்துவிட்டார். இராசமாணிக்கம் கும்மி, எதிர் மன்னசிங்கம் மீது வசை, இறந்த பிள்ளை மீது அம்மானை, வடசூரன் தென்சூரன் கூத்து எனப் பல பாடல்களைப் பாடியுள்ளபோதும் அவற்றை எழுதி வைக்காமையால் அதிகமானவை மறைந்துவிட்டன. 1978 ஆம் ஆண்டு ஏற்பட்ட சூறாவளியினால் ஏற்பட்ட அழிவுகளையும் துன்பங்களையும் கருவாகக் கொண்டு ''வட சூரன் தென் சூரன்'' என்ற பெயரில் ஒரு கூத்தை 1979 இல் எழுதி அதனைப் பயிற்றுவித்து அரங்கேற்றினார். அவ்வப்போது நடக்கும் சம்பவங்களை உடனுக்குடன் பாடலாகப் புனைந்து பாடுவதில் வல்லவர்.

1. வோட்டைக் கொடுங்கள் கொடுங்கள் என்று வந்து
நாட்டைக் கலக்கிறீர் நண்பர்களே
வோட்டைக் கொடுப்பது யாருக்கு என்று - இந்தப்
பாட்டைப் படித்துத் தெரிந்துகொள்வீர்

2. ஏழைகள் அன்பனாம் எல்லோர்க்கும் நண்பனாம்
எங்கள் இராசமாணிக்கத்தை
கூடிக்கவுண்சிலுக் கனுப்புவோமென்று
கூடிக் கும்மியடியுங்கடி

3. மூக்குக் கண்ணாடியப் பாருங்கடி - அவர்
முன்னே புள்ளடியப் போடுங்கடி
பேசியவரை ஏத்தியெல்லோரும்
சேர்ந்து கும்மியடியுங்கடி

4. பட்டிருப்பு நற்பகுதி வாழ்க - அந்த
பாராளுமன்ற துயர் கேட்க
மட்டக்களப்பு குறை தீர்க்க
ராசமாணிக்கம் வெற்றியென்றும் வாழ்க

## கனவு கண்டேன் (1960)

**ஜமால்தீன்**

1. கனவு கண்டேன் நான் கனவு கண்டேன்
காதங் கமகமன கமளக் கண்டேன் - மாக்கார்
கடிமுடி தானணிந்து வரவும் கண்டேன்
நாதங்கள் எழுந்து ஜொலிக்கக் கண்டேன் - அங்கு
பிடிமடி கூட்டங்களும் நழுவக் கண்டேன்

2. வேழம் விரைந்து வனத்தில் ஓடக்கண்டேன் - அங்கு
வேசதாரி விழுந்து படுக்கக் கண்டேன்
ஆழமறிந்திடாமல் அழவும் கண்டேன் - ஐயோ
அப்பால் கரிமன்னர் அழியக் கண்டேன்

3. இழிச்சவாய் அறிவிலியும் இயம்பக் கண்டேன் - இங்கு
இழிவாகப் பேசி மட்டி ஓடக்கண்டேன்
பழிச்சவாய் பாதகன் பதுங்கக் கண்டேன் - ஐயோ
படியில் சறுக்கி மன்னர் விழவும் கண்டேன்

4. மட்டி மதுவருந்தி மயங்கக் கண்டேன் - ஐயோ
மாதுமேல் மோகி யுள்ளம் இலங்கக் கண்டேன்
கெட்டித்தனத்தால் மட்டி கிளம்பக் கண்டேன் - ஐயோ
கேவல முறையில் சட்டை கிளியக் கண்டேன்

5. கரி போன்ற உடல் கரியும் ஓடக் கண்டேன் - இங்கு
நரிக்கூட்டம் காகங்களையும் விரசக் கண்டேன்
பரிமேலே மாக்கான் மாக்கார் வரவும் கண்டேன்
எரிமூஞ்சி அழுது அலறக் கண்டேன்

# மணப்பாறை மாடுகட்டி என்ற மெட்டு (1960)

மன்சூர்

## விருத்தம்

மட்டு நகர் மீதில் வாழும் கனவான்களே!
மனமுகந்து மாக்காரைத் தெரிவீர்களே!
மகிழ்ச்சியுடன் மாக்கான் மாக்காருக்கே வோட்டு
செய்வீர்களே! செய்வீர்களே!! செய்வீர்களே!!!

1. மாநில மெல்லாம் புகழும்
மட்டுநகர் மீதில் வாழும்
மகாஜன கனவான்களே வாரும்
ஏ.எச். மாக்கான் முகம் பாரும்

2. நம் தொகுதி மக்களுக்கு
நல்ல சேவை செய்வதற்கு
நாடிவந்து போட்டியிடும் ஹாஜிக்கே
நமதுரிமை வோட்டுச் செய்வோம் - யானைக்கே (மாநி)

3. எதிராய் வரும் தேர்தலன்று
ஏற்ற திகதி இருபதன்று
யானைக்கே வெற்றியென்று தீனோரே
ஏற்று வோட்டைச் செய்ய வேண்டும் - தீனோரே (மாநி)

4. மக்காவுக்குச் சென்றவரும்
மக்களுக்குகந்தவரும்
மாணிக்க வியாபாரியாம் தீனோரே நல்ல
மார்க்க தொண்டு செய்பவராம் தீனோரே (மாநி)

5. ஏழைமீது இரக்கங்கொள்வார்
ஏற்றதொண்டு செய்திடுவார்
யானைச் சின்னம் கேட்டிட்டவர் - மாக்காரே
ஏற்று வோட்டுச் செய்திடுவீர் தீனோரே (மாநி)

6. போலிங்கிலே சென்றிடுவீர்
போடும் காட்டை வாங்கிடுவீர்
போட்டிடுவீர் புள்ளடியை தீனோரே
போற்றும் யானை நேராகவே தீனோரே (மாநி)

# அசறப்பை ஆதரிப்பம் (1994)

**சு.லெ. றசியா**

இறக்காமத்தைச் சேர்ந்தவர். வயது 70 இற்கு மேல். முதலாம் தரம் வரையில் கல்வி கற்ற அவர் வீட்டு வேலை புரிகின்றார். கவிகள் பாடுவதில் வல்லவர். அசறப்பை ஆதரிப்பம், இடுப்பு முறிந்த பிள்ளைக்குப் பாடியது, கட்டு வந்த பெடியனுக்குப் பாடியது, பிரசவம் ஏற்பட பாடியது, புயல்காவியம் முதலான பாடல்களைப் பாடியவர். தனது பாடல்களை எழுதி வைக்கும் வழக்கமுடையவர்.

1. ஆதி பெரியவனே அடங்காப் பெரும் பொருளே
நீதி உடையவனே எங்கும் நிறைந்த றேப்பில் ஆலமீனே

2. காங்கிரஸ் என்னும் ஒரு கச்சை உருவாக்கி வந்து - நம்முட
ஆதரவக் கேக்கார் அசறப்பு ஆதரிப்பம் வாசனமே

3. வெத்தி எடுக்க அசறப்பு விருப்பமுடன் கையெடுக்க - அவர்
ஒத்துமையாய் சேவை சைய - நீ உதவி சைவாய் என் ஆண்டவனே

4. சட்டத்தறணி தலைசிறந்த வள்ளல் - அவர்
திட்டம் நிறவேற - நீ தீர்ப்பளிப்பாய் என் ஆண்டவனே

5. ஏழைகளுக்காக அசறப்பு எதுத்து நிண்டு போராடி - இந்த
கச்சியில வெல்ல - நீ கருண சைவாய் என் ஆண்டவனே

6. இலங்கயில வாழும் ஏழை முஸ்லிம்களுக்கு
ஒகப்பான வள்ளலின்று ஆதி உயத்திவைப்பான் வாசனமே

7. தாயார் பதற தகப்பன் சலிச்சி நிக்க - நம்முட
புள்ளகளக் கொண்டு ஆமின் போட்டெரிச்சானே மடுவில்

8. இறக்காமத்தில் வாழும் எளம் சிறார வாலுவர
பதறப்பதறக் கொண்டு பத்தவெச்சான் நாம பாத்திருந்தோம்

9. பதறப்பதற மக்கள பறிச்சி அங்க கொண்டு வச்சி
நெருப்புக்கொடுத்தெரிச்சான் நமக்கு நீதி எங்கே பார்சனமே

10. தாலி எழந்து தகப்பன் இல்லாப் பிள்ளயளும் வீதியில்
அலயிறத்த நீங்க வெறுக்கயில்லயோ சனமே

11. ஏன் என்று கேக்க ஒரு எம்பி நமக்கில்லாமல்
கையெழந்த மக்களெல்லாம் நாம காண்பதெப்ப வாசனமே

12. வட்டரியாச் சந்தியில மூன்று வாலுவர கொண்டு வெச்சி
சுட்டெரிச்ச துக்கம் உங்களுக்குத் தோண்ட இல்லயா சனமே

13. சட்டத்தறணி அசறப்பு தரத்தால் உயர்ந்த வள்ளல் - அவர்
திட்டம் நிறைவேற நீ தீர்ப்பளிப்பாய் என் ஆண்டவனே

14. காக்கும் கரங்கள் - நமக்குக் கைதருகும் எம்பி என்று
உத்துணந்து பாத்து - நாம உதவி சைவம் வாசனமே

15. பாளிமன்தில் போய்க் கதைத்து - நம்முட பங்குகள வாங்கித்தரும்
எம்பியுடன் நாம எணைந்து நிப்பம் வாசனமே

16. முந்திரியம் பழம்போல் அசறப்பு முதிச்சி பெற்ற முதிரமரம் -அந்த
எணல அழிக்க நீங்க ஏன் துணிந்ததோ சனமே

17. வளரும் சமுதாயம் வாலிவர்கள் ஆச்சிபண்ண
ஒகப்பான திட்டம் என்று நீங்க உணந்து சலாம் செல் சனமே

18. பாதயாத்திரயாம் அசறப்பு பல ஊரெல்லாம் நடந்து
பிரசாரம் செய்தார் முசிலிமப் பலப்படுத்த வேணும் என்று

19. ஏழைகளுக்காக அசறப்பு எடுத்த திட்டம் வெத்திபெற - நான்
கையெடுத்துக் கேக்கேன் - நீ கருணை சைவாய் என் ஆண்டவனே

20. சந்திரிக்கா அசறப் என்ற தத்துவத்த பேத்து வந்து - நம்முட
உரிமைகளக் கேட்டவருக்கு - நாம உதவி சைவம் வாசனமே

21. இருள அகற்றி எல்லோரையும் ஒன்றாக்கி - இந்த
மரத்திணலில் நிக்க - நீ மதிப்பளிப்பாய் என் ஆண்டவனே

22. சந்தண மரமாம் சாதிலிங்கப் பெட்டகமாம்
எக்கின் மரமாம் நமக்கு எணல் மரமாம் வாசனமே

23. அநாதைகளப்போல நாம அடைபட்டுப் போயிக்கிடக்கம்- நம்மள
துறந்து வழியெடுக்க அசறப்பு துடிக்கிறத்தப் பார்சனமே

24. உயிர எழந்து மக்கள் உடப்புறப்பத்தான் எழந்து - இந்த
சமுதாயத்துக்காக அசறப்பு தவிக்கிறத்தப் பார்சனமே

25. ஒங்குட காலில் விழுந்து கையெடுத்துக் கேக்கிறது - இந்த
காங்கிரசி வெண்டால் - நம்முட கஸ்ரமெல்லாம் தீரும் என்று

26. உயர்பதவியாக்கி அசறப்ப ஒரு உறுப்பினராத் தேந்தெடுத்து
இந்நாட்டுக்குச் சேவ சைய நீ நாடி கபுல் சைய் இறைவா

27. ஏழைகள் கூடி எந்நேரமும் கையேந்தி
கண்ணீர் வடிக்கோம் ஒண்ட கருணயத்தா என் ஆண்டவனே

28. மகுடமுடி சூடி அவர ஒரு மந்திரியா போயமந்து - எங்கட
கண்ணீர் துடைக்க நீ கருண சைய் என் ஆண்டவனே

29. சாது சரணம் என்று தலைகுனிந்து போகாமல் - நம்முட
தீனுக்கு வரமளிக்க நீங்க திரும்பிவர மாட்டயளோ

30. தகப்பனில்லாப் பிள்ளயப்போல்-நாம தளிர்குறைந்து
போயிரிக்கம் - அவர்
உறுப்பினராப் போயிருந்து நமக்கு உதவிசைய காத்திருக்கார்

31. இலை உதித்துப் பழம் பழுத்து - நாம எடுத்தருந்தும் வேளயில
- அந்த
மரத்தத் தறிக்காமலுக்கு ஒங்கிட மதிப்பளிக்க வாசனமே

32. ஆச்சி கொடுக்க அசறப்பு ஆசனத்தில் போயமர - அந்த
காச்சிய நான் பாக்க நீ கருண சைவாய் என் ஆண்டவனே

33. இறசுல் நபிய அல்லா ஏழு வானமதில் கொண்டு வெச்சி
பதவி கொடுத்த பலன் தருவான் உங்களுக்கு

34. நான் ஒரு ஏழை இருந்து எடுத்தழுத ஒப்பாரி - இந்த
ஆலம் நிறைந்த அல்லா அனுசது மேல் எங்களக் கார் வாழி

# பாலப் பாட்டு (1996)

## த.கதிர்காமத்தம்பி

1. பாலம் பாக்கப் போவம் வாறியா என்னிட மதினி
பாலம் பாக்கப் போவம் வாறியா
கல்லடிப் பாலம் அன்னா வருகுது
கவட்டு வருகுது குவட்டு வருகுது
நடந்து வாடி சுறுக்கென வாடி (பாலம் பாக்க)

2. கோட்ட முனைக்குள்ள பாலமிரிக்கி
கோடிக்கணக்கில் சனங்களிரிக்கி
குனிஞ்சி நடந்தா கூப்பிட்டுப் பாப்பான்
கையில புடிச்சி சுறுக்கென வாடி (பாலம் பாக்க)

3. செமதாங்கி வோக்கில சென்றிக்கி இரிக்கிறவன்
திரும்பிப் பாத்தா கையக் காட்டுவான்
குனிஞ்சிபுடிச்சி கெதிவண்ணி வாடி (பாலம் பாக்க)

4. வலயிறவில பாலமிரிக்கி வழியில நல்ல சனங்களிரிக்கி
தங்கத்துரைக்கிட்ட சறுவத்து இரிக்கி
குடிச்சித்துப் போவம் சுறுக்கென்ன வாடி (பாலம் பாக்க)

5. குறிஞ்சாமுனயென்னும் ஊரப் பாரு
உறங்கிக் கிடக்கிற கிடயப் பாரு
காளி அம்மன் கோயிலப் பாரு
கப்பல் அடிச்ச அடியப் பாரு (பாலம் பாக்க)

6. கண்ணாக்காட்டுப் பாலத்தப் பாரு
கன்னன்குடா துறயப் பாரு
குறுக்கால போனா சுறுக்கென்னப் போவோம்
தோணில புடிச்சி ஏறிட்டு வாடி (பாலம் பாக்க)

7. திமிலதீவெண்ணும் ஊரப்பாரு
திரும்பி வந்த சுறுக்கப் பாரு
கிட்டுணசாமி கோயிலப் பாரு
மட்டக்களப்புக்கு வசியப் பாரு (பாலம் பாக்க)

# சூட்டி (1994)

## த.கதிர்காமத்தம்பி

1. சூடடிச்சி ஏத்துவோமடா தம்பி தூணடில கிடப்போமடா
சென்றியில கிடக்கோமெண்டு எங்க வீட்ட கொஞ்சம் விசளம்
சொல்லடா
குத்திப் பாக்கச் சொன்னா கொட்டிக் காட்டச் சொல்லுறான்
கொட்டிக்காட்டிப் போட்டு குனிஞ்சி குனிஞ்சி பாக்கிறா
எங்களத்தான் அவன் போட்டு என்ன பாடு படுத்துறாண்டா

சேத்துக்குடாச் சென்றியில் திருப்பி இறக்கச் சொல்லுறான்
சிமதாங்கிச் சென்றியில் சிக்கிறேட்டுக் கேக்கிறான்
எங்கட வயல் நெல்லப் போட்டு என்ன பாடு படுத்துறாண்டா

மாமாங்கப் போடிர சூடு இப்போ வந்தேண்டா அடிச்சத ஏத்தி
மில்லுக்க நெல்லிடயப் போட்டு இப்போ எடுத்தாண்டா அவன்
கொஞ்ச நோட்டு
புடிச்சேண்டா கோட்டமுன றூட்டு அடிச்சேண்டா கோணவாறுக்குள்ள
எடுத்தேண்டா வலயிறவ நினச்சி இப்போ ஏத்தினண்டா
பொண்டுகள நானும்

முதலாவது சென்றியில் முழுப்பேரையும் இறக்குறான்
ரெண்டாவது சென்றியில் ரெண்டு மூண இறக்குறான்
மூணாவது சென்றியில் முழுப்பேரையும் ஏத்தச் சொல்லுறான்

2. ராவயில சூடடி பகலயில தூணடி
எங்கால போறடி இரிக்கிற ஆரடி
அங்க இரிக்கிற ஆமிதான் நமக்கு சாமிதான்
கூட்டாளிப் பொலிசிதான் குத்திப் போட்டு முழிசுறான்

வவுணதீவுக் கேம்படி வழியில நமக்கடி
இந்தியண்ட கோயிலடி என்னடாப்பா சென்றியடி
தூணடி நூறடி சும்மாருந்த நமக்கடி
எயாபோசிச் செல்லடி எங்களுக்குப் பொல்லடி

# செல்வெடி (1999)

த.கதிர்காமத்தம்பி

1. எங்கட நாட்டுக்குள்ள என்னடாப்பா நடக்குது
எந்நேரம் பாத்தாலும் செல்லுத்தாண்டா வெடிக்குது
அடிபுள்ள ராசம்மா சிவருக்க மாறம்மா
புள்ளகளப் பாரம்மா புடிச்சிட்டு நில்லம்மா (எங்கட)

2. இந்திய நரசிம்மரா ஏன்கொடுத்த செல்லு
சந்திரிகா அம்மாவுக்கு பாதுகாப்பாத் தள்ளு
பல்பொடி கொம்பனி பாத்தடி தம்பி நீ
பக்கத்தில போடாம தள்ளிப் போடு செல்ல நீ (எங்கட)

3. கச்சரிக்கி மேல இருந்து அவனடிச்ச செல்லு
காயாமடுப் பள்ளிக்குள்ள அது உழுந்து வெடிச்சி
அங்க இருந்த சனமெல்லாம் அதக்கண்டு துடிச்சி
அப்படியே ஓடுதப்பா களிமடுவப் புடிச்சி
களிமடு கழண்டாச்சி காயாங்காடு போயாச்சி
கச்சேன வந்தாச்சி காட்டுக்குள்ள மறஞ்சாச்சி (எங்கட)

4. மம்முனத் துறயில இருந்து அவனடிச்ச செல்லு
வாழக்கால ஏத்தத்தில மாமரத்தக் கிழிச்சி
பக்கத்தில இருந்தவண்ட பாதி ஊட்ட இடிச்சி
அங்க இருந்த சனமெல்லாம் ஆத்துச்சேன புடிச்சி (எங்கட)

# கப்பல் அடி (2007)

**த.கதிர்காமத்தம்பி**

1. *கப்பல் நிண்டு அடிக்கிறது கவலையாக இரிக்கிது*
*எண்ட புள்ள ரெண்டு மூணும் எங்க போச்சோ தெரியல்ல*
*எட்டாங்கட்ட ஏத்தம் ஏறிநிண்டு பாத்தம்*
*இருப்பம் எண்டு கேட்டு எடுத்துப்புடிச்சம் ஓட்டம்*
*கொரக்கஞ்சேன காடு ஒழிச்சிருந்து பாரு*
*ஒழவடிச்ச வரவ ஒடவொண்ணா சிலுவ (கப்பல்)*

2. *ஆறாங்கட்ட ஊரு ஏறி அதப் பாரு*
*எண்ட மகனே முருகா எடுத்த சாமான் சொல்லுகா*
*எழும்பி நீயும் ஓடுடா நான் எடுத்துவாறேன் மறுகா*
*பத்திரக் கட்டு றோட்டு வாய்க்காக் கட்டப் பாத்து*
*பயமில்லாம நீயும் குறுக்கால ஓடு (கப்பல்)*

3. *தூணடி ஊரு சுறுக்கா நீ ஓடு*
*பாசிபோட்டுக் கேட்டா பயமில்லாம காட்டு*
*வலயிறவுச் சென்றி வரிசையாக நிண்டு*
*வழியிலதான் நமக்குமே பயமில்லடா இன்று (கப்பல்)*

4. *அரசடிப் பள்ளி இரிக்க நல்ல பள்ளி*
*கொஞ்சக்காலம் இருந்தமெண்டா இருக்கயொண்ணா சகதி*
*அடிபுள்ள வள்ளி அதுகளிட்டச் சொல்லி*
*அயிடிங்காட்டக் கொண்டு போயி பதிஞ்சிவாடி சொல்லி*
*(கப்பல்)*

# அகதி (2007)

## த.கதிர்காமத்தம்பி

1. செல்லப்போட்டு அடிச்சி அடிச்சி துரத்துறாண்டா சனத்த
நெறிகெட்டு ஓடிஓடித் தேடுதிடா இனத்த
எடுத்த சாமான் கையில போட்ட சாமான் வீட்டில
எடுத்துப்புடிச்சி ஓடிப் போனம் வலயிறவு றோட்டில

2. பட்டுறுப்பால போன சனம் களுவாஞ்சிகுடில
மம்முனயால போன சனம் ஆரயம்பதில
வலயிறவால போன சனம் மட்டக்களப்பில
நாங்க மாடு ஆடு கோழி ஒண்டும் கொண்டு போகல
(செல்லப்போட்டு)

3. அம்மாவப் பாக்கப் போனன் கல்லடில நான்
அவதிப்பட்டு ஓடி வந்தன் செல்லடில
அண்டக்கி நான் கண்ட வேங்கடில
நேத்து வந்து இரிக்கான் வோக்கடில

4. தாய் போன அழிப்பாடு புள்ளக்கித் தெரியா
புள்ள போன அழிப்பாடு தாய்க்கித்தெரியா
போனண்டக்கி ஓடி முகாமெல்லாம் தேடி
எண்டழகு மகனே நீ எதால வந்தெண்டு கேக்கிறா
(செல்லப்போட்டு)

5. வெள்ளக்காறண்ட கொட்டில் ரவல் தொட்டில்
விடிஞ்சி பொழுது ஏறிக்கெண்டா அது நெருப்புச் சட்டி
விசிக்கிறான் விசிக்கிறான் விசிக்கி விசிக்கி ஓடுறான்
விசிக்கி விசிக்கி ஒடி இணலப்பாத்துக் குந்துறான்
(செல்லப்போட்டு)

6. நிறுவனத்திட காட்டு நேரத்தோட கொண்டு போட்டு
வேல செய்யிற சனத்துக்கெல்லாம் இதுவுமொரு சாட்டு
நிறுக்கிறான் நிறுக்கிறான் நிறுத்து நிறுத்துக் குடுக்கிறான்
பாதிப்பாதிக் கத்தரி அதக்கேத்த நெத்தலி
பகுந்து பகுந்து குடுக்கான் திண்டு போட்டு உத்தரி
(செல்லப்போட்டு)

7. ஆக்கின சோறு கூடாண்டு ஆர்ப்பாட்டம் பண்ணுறான்
அதுக்கேத்த சாமான் அள்ளி அள்ளிக் குடுத்தான்
நிறுவனம் இல்லாட்டி நெலம என்ன ஆச்சி
நிறுத்து நிறுத்துக் குடுக்காட்டி நம்ம பாடு போச்சி
(செல்லப்போட்டு)

8. மீளக்குடி ஏத்தினாங்க வசியப் போட்டு ஏத்தினாங்க
கொண்டு போய் இறக்கினாங்க முத்தவெளியில
ஊருக்கொரு போளின் உட்ட இடம் தெரியா - நாங்க
தீத்தமாடி அமுது குடுத்து திண்டுபோட்டு வந்தாப்ப
(செல்லப்போட்டு)

9. ஊருக்கு ஓடி வந்தா ஒரே நாத்தம்
ஊட்டுக்குள்ள போகவொண்ணா செடிநாத்தம்
ஏழுமாடு செத்துக் கிடந்தா எடுக்கிறெப்படி
கழுவிக்கழுவிப் போட்டுப் பாத்தா மணக்குதிப்படி
(செல்லப்போட்டு)

## அகதிகள் ஒப்பாரி (1997)

**மு.இ.அஹமதுலெவ்வை**

1. விஸ்மில்லா சொல்லி மேலோன் தனைப்பணிந்து
சிந்து கவி பாட சொல் முந்திவரந் தா றகுமான்

2. என்ர தங்க மகளே நம்முட தலைவிதியை என்ன சொல்ல - இந்தப்
பங்கமெல்லாம் வந்தெண்டு நீ பதறி அழாதே மகளே

3. நல்லா இருந்தோம் நாலு புள்ள நாங்க பெத்தோம் - இந்தப்
பொல்லாத காலம் நம்மள பூந்தழிச்சிப் போட்டுதுகா

4. வட்டைக்குள்ளே சூடடிச்சி வாறனெண்டு போன வாப்பா
சுட்டு மவுத்தான சூடு இன்னும் ஆறவில்லை

5. பொல்லாத கூட்டமொண்டு போராட வந்து நிண்டு
எல்லாரையும் சுட்டழிச்சா இது என்னவிதி யாறகுமான்

6. ஏழை எளிய சனம் என்ன குத்தம் இஞ்ச செய்தார்
ஏன் அழிச்சார் வேணுமெண்டு இது என்ன நீதி ஆண்டவனே

7. பள்ளிக்குள்ள தொழுதவரை படுக்கயிலே படுத்தவரை
எல்லாரையும் பூந்தறுத்தால் இது என்ன நீதி ஆண்டவனே

8. நம்முட ஆபாக்கள் தலை முறையாய் ஆண்டிருந்த ஊரைவிட்டு
அடிச்சி விரட்டி நாம அகதி முகாம் வந்து சேந்தம்

9. அகதிமுகாம் வந்து சேந்து அரசி தாற பிச்சையிலே
அரைகுறையாய் திண்டு வாறோம் எங்கிட தலைவிதியோ
ஆண்டவனே

10. காவலுக்குப் போன என்ர கண்டு மகனார்ர
கண்ணி பட்டுக் கால் உடய இது என்னவிதி ஆண்டவனே

11. ஆசுபத்திரி வாட்டில் அவர் ஆறுமாதம் தானிருந்து
தேறி இஞ்ச வந்திருக்கார் ஆறயில்ல என்ர மனம்

12. ஓடி ஆடி வேலை செஞ்சி உழச்சிப் பறிக்க ஒண்ணா
பிச்சை எடுக்க எங்களுக்கு இச்சயில்லே யாறகுமான்

13. அழிஞ்சிப்பொத்தானை ஊரில் அறுபட்டு மவுத்தான
எங்க வாப்பா உம்மாவும் இல்ல இஞ்ச வந்தெனக்கும் நாதியில்ல

14. குருவியினம் போல கூட்டம் பண்ணி ஊடுகட்டி - என்ர
தங்க மகளே ஒனக்கு செஞ்சி வச்சோம் கலியாணம்

15. ஊரில் குழப்பம் எண்டு நாம ஊட்ட உட்டு ஓடி வந்தோம்
அகதிமுகாம் வந்திருந்தும் நமக்கு அநியாயம்தான் மகளே

16. செல்லடிச்சி குண்டுழுந்த நம்முட செத்தைக் குடில்தான் எரிஞ்சி
செத்தவர்கள் எத்தனை பேர் என்ர சீதேவி மருமகனும்

17. தாய் எனக்கி வந்த விதி என்ர தலைமகளே உனக்குமது - என்ர
சங்கு மகளே நீ சவுறு செய்கா கண்டு மகள்

18. வத்துக்குளத்தில் வல்லாரை துளுத்தது போல் - இந்த
எத்தின் வயித்தில் நீங்க ஏன் பிறந்த என்ர தங்க மக்காள்

19. தாமரையில் புழுவிழுந்து தண்டறுந்து போனது போல் - அந்த
நாவறுந்து போவார்கள் நம்மள நாதி கெட வச்சார்கா

20. ஆடு கொடியானோம் நாம அந்தரத்தில் பஞ்சானோம்
வாடும் பயிரானோம் நமக்கு வாழவழி என்ன உம்மா

21. மாரி வந்தால் கோடை உண்டு மாறி வரும் காலமெல்லாம்
தேறி மனம் வேறுபட எங்களுக்குத் தேத்தரவு தா றகுமான்

22. ஒப்பாரிப் பாட்டு ஓசைவச்சி நாம் படிச்சோம்
கேட்டு இருந்தவர்கள் கிருபையுடன் தான் வாழி

# வுக்கர் (1999)

**ஏ.கந்தசாமி**

வவுணதீவைச் சேர்ந்தவர். வயது 64. பாடசாலைக் கல்வியைக் கற்காத இவர் கூலித்தொழில் செய்துவருகின்றார். அம்மன் தாலாட்டு, சாராயக் குடிப்பாட்டு, வுக்கர், இறந்த மகனை எண்ணிப் பாடியது முதலான பல பாடல்களை எழுதி வைத்துள்ளார். அவற்றை மற்றவர்கள் மத்தியில் பாடியும் காட்டுகின்றார்.

1. *சத்திமக மாரியம்மா சங்கரியே வாடியம்மா*
*உத்தமியே வாடி அம்மா உன்ன நினைத்துப் பாடுகிறேன்*
*பாடுகிறேன் தாயாரே வாத்தயொன்று நானுமிப்போ*
*அந்தர மார்க்கமாக ஆகாசத்தில் நின்றுகொண்டு*
*புக்கரா என்னுமொரு விமானமொன்று வந்து*
*அந்தர மார்க்கமாக ஆகாசத்தில் நின்றுகொண்டு*
*வீசுதாம் குண்டதனை வீதியெங்கும் தான் வெடிக்க*

2. *மண்கள் சிதறுவதும் மக்கள் சாகிறதும்*
*பெண்கள் அழுகுவதும் மாதாவே பாருமம்மா*
*சத்திமக மாரி சங்கரியே வாடியம்மா*
*பூராத காடுமில்ல புடுங்காத முள்ளுமில்ல*
*ஓடாத வட்ட இல்ல ஏறாத ஏத்தமில்ல*
*இப்படியாத் தாயாரே வருத்துகிறார் எங்களயே*
*பெற்றவளே தாயாரே உத்தமியே வாருமம்மா*
*உத்தமியே வாருமம்மா உன்ன நினைத்துப் பாடுகிறேன்*

3. *மட்டக்களப்பு போய்வாற நேரத்தில*
*சின்னப்பாலம் தன்னில் தாயே செக்கின்கள் பண்ணுறார்கள்*
*செக்கின்கள் பண்ணி அம்மா செருப்பால் அடிக்கிறார்கள்*
*தென்னை மரங்களம்மா வேரோடு சாயிறதும்*
*கல்வீடு மண்டபங்கள் தரைமேல் விழுகிறதும்*
*ஓலக் குடிசையெல்லாம் ஓங்கி எரிகிறதும்*
*இப்படியாத் தாயாரே வருத்துகிறார் ஏழைகளை*

4. மட்டக்களப்பு போற மனிதர்களை
கோட்டமுனைப் பாலத்தில தாயே செக்கின்கள் பண்ணுறார்கள்
எக்கச்சக்கமான சாமான்கள் வாங்கிவந்தால்
தூக்கித் தூக்கி எறிகிறார்கள் வீதியில்
கண்களக் கட்டுறார்கள் கைகாலக் கட்டுறார்கள்
குப்புறப் போட்டு அம்மா குதிகாலால் உதைக்கிறார்கள்
கையில் வைத்திருக்கும் கம்பியால் இடிக்கிறார்கள்
இப்படியாத் தாயாரே வருத்துகிறார் எங்களயே
(பெற்றவளே)

5. கட்டி இழுத்து பெற்றவளே தாயாரே
காட்டுக் கந்தோருக்கு தள்ளியே கொண்டு போறார்
தள்ளியே கொண்டு போய் செய்யும் கொடுமைகள்
சொப்பின் வேக்கதனை போடுறார் முகந்தனிலே
வக்கு தனிலே பெற்றவளே தாயாரே
புடிச்சிருக்கும் தண்ணியிலே அமுத்துகிறார் எங்களயே
மூங்கில் குழல் நிறய நிறப்பியிருக்கிறார் மண்தனை
தாறார்கள் எங்களுக்கு இடுப்புக்குத்தான் குறுக்க
(பெற்றவளே)

# தமிழ் அகதிகளுக்காக மாமாங்கப் பிள்ளையார் தோத்திரம் (2007)

**ந.மா.கேதாரபிள்ளை**

முதலைக்குடாவைச் சேர்ந்தவர். வயது 78. நான்காம் தரம் வரையில் கல்விகற்ற இவர் கோயில் பூசகராகப் பணியாற்றுகின்றார். தென் கதிரை முருகன் பேரில் சிறைமீட்ட கும்மி, செல்லப்பா சிறைமீண்ட பதிகமும் திருக்கோயில் பதிகமும், சின்னக்குள ஈச்சநகர் காளியம்மன் தலவரலாறு காவிய கும்மி, தாந்தாமலை வரலாற்று அம்மானை, மட்டக்களப்பு அமிர்தகழி பிள்ளையார் அகவல் - பிள்ளையார் தோத்திரம், தமிழ் அகதிகளுக்காக மாமாங்கப் பிள்ளையார் தோத்திரம் முதலான பல பாடல் நூல்களை அச்சிட்டுள்ள இவர் கோயில் திருவிழாக்களிலே இந்த நூல்களை விற்பனை செய்து வருகின்றார்.

சிவனே நீ படைத்த மக்கள் எல்லாம்
சீர்கெட்டு தலைகீழாய் நடந்ததாலே
பார்க்க ஏலாமல் கோபம் கொண்டு நீரும்
பதைக்க வைக்கிறாய் நல்லவரையும் தான்
சலத்தாலே அழிவு என்று தானே எழுதி வைத்து
சாகாமல் சாகவைக்கிறாய் நாட்டில் உயிரை
மாமாங்கம் தன்னிலே வந்தலிங்கம்
சுவாமி மங்காமல் மக்களை காத்தருள்வாயே

மானிடர் ஈழத்தில் செய்யும் கொடுமை
மறைமுகமாய் பாத்து இருந்துமே தான்
அடியாமல் அடிச்சி வதைக்கிறாய்
ஆர் இருக்கார் குறைகூற நாங்கள் தான்
ஈழத்தின் போரை நிறுத்தி எல்லோரும் ஒன்றாக
எங்களுக்கு வந்த விதி தன்னை தீத்து வையும்
மாமாங்கம் தன்னிலே வந்தலிங்கம்
சுவாமி மங்காமல் மக்களை காத்தருள்வாயே

மீண்டும் உனை பாட ஆரால் ஏலும் ஐயா
வினை அறுப்பவன் நீ அல்லோ உலகில்
கடல் இரைபோலே வெடியின் ஓசை
காற்றுபோல் பறக்கிறார் மக்கள் எல்லாம்
மூதூர், கிளிவெட்டி வாகரை மக்கள்
முற்றாக ஓடுது வந்து பாரும் இப்போ
மாமாங்கம் தன்னிலே வந்தலிங்கம்
சுவாமி மங்காமல் மக்களை காத்தருள்வாயே

முற்றாக மக்களை அழித்தால் நாட்டிலே
மூர்த்தியே உனை வணங்க ஆரும் உண்டோ
செல் வெடி ஓசையினால் மக்கள் தானும்
சிதறியே ஓடுகின்றார் ஊரை விட்டே
லட்சக்கணக்கில் மக்கள் அகதிபாரும்
நிம்மதி இல்லை தவிக்கிறோம் ஐயா
மாமாங்கம் தன்னிலே வந்தலிங்கம்
சுவாமி மங்காமல் மக்களை காத்தருள்வாயே

மூர்த்தியே சித்திகளை ஒழியாவண்ணம்
முற்றாக மக்களுக்கு தாரும் அப்பா
இருகாதும் கேட்குதில்லை பாரும்
ஈழத்தில் நடக்கிற போர்கோலம்
கப்பலிலும் குண்டு ஏத்திபோடுகிறார்கள்
காகம் போல் பறக்கிறார் மக்கள் தானும்
மாமாங்கம் தன்னிலே வந்தலிங்கம்
சுவாமி மங்காமல் மக்களை காத்தருள்வாயே

மென்மேலும் எங்கள் துயர் சொல்ல ஏலா
வெடி ஓசையில் சனம் ஓடும் விதம்
இரவோடு வருகுது எறிகணையாம்
எழும்புது கரடியன் ஆறு ஆயித்தியமலை
சீராக அடித்துமே வாறார்கள் வெடி
சீர்கெட்டுப் போகுது பொருள்மனையும்
மாமாங்கம் தன்னிலே வந்தலிங்கம்
சுவாமி மங்காமல் மக்களை காத்தருள்வாயே

மேடுபள்ளம் தெரியாமல் ஓடும் விதம் மக்கள்
மிகப்பெரிய கொடுமை அல்லவோ எங்களுக்கு
கத்தும் ஓசையது பார் ஊர் எல்லாமே
கண் திறந்து வாழ வழிகாட்டும்
முன்னோர் செய்த வினைப்பயனோ எங்களுக்கு
மூர்த்தியே அறுத்தெறிவாய் மக்கள் வாழ
மாமாங்கம் தன்னிலே வந்தலிங்கம்
சுவாமி மங்காமல் மக்களை காத்தருள்வாயே

மொத்தமாய் வெடிகள் வந்து விழ
முற்றாக ஊர் மக்கள் ஓட்டம் பார்
வண்டிரைவுபோலே குண்டிரைவுதானும்
மண்ணாக போகுது வீடு மாடு ஆடுகள்
ஆயித்தியமலை உன்னிச்சை கோப்பாவெளி
அழகான உள்காடு அடிச்சி வாறார்கள்
மாமாங்கம் தன்னிலே வந்தலிங்கம்
சுவாமி மங்காமல் மக்களை காத்தருள்வாயே

மோதியே நீ போய் நீதிவழி காட்டும்
முற்றாக தமிழர் பிரச்சனை தீரும் ஐயா
தமிழர்க்கு முதல் தெய்வம் நீ அல்லோ
தாழ்கிறோம் நரகத்தில் வந்து பாரும்.
இருந்த இடம்காண எப்பவோ சுவாமி
ஏங்கி மனம் புண்ணாச்சு சித்திவிநாயகா
மாமாங்கம் தன்னிலே வந்தலிங்கம்
சுவாமி மங்காமல் மக்களை காத்தருள்வாயே

மௌனமாய் நீ இருந்தால் நாட்டில்
வாதைகளை யாரிடம் சொல்வது
கலியுக நீதிபதி இன்னம் உண்டோ
காட்டுவாய் உன் அருளை உலகோர் அறிய
தீர்க்க ஏலாதோ இந்த நோயை தானும்
சித்தி விநாயகா இலங்கையிலேதான்
மாமாங்கம் தன்னிலே வந்தலிங்கம்
சுவாமி மங்காமல் மக்களை காத்தருள்வாயே

வழிதிறக்க வந்த தெய்வம் நீயோ அப்பா
மாழ்கிறார் மக்கள் கணக்கே இல்லை.
பெண் போன வழி கணவன் அறியான்
பிள்ளையைத் தேடி தாய் அழுகிறாள்
ஆள் ஆள் ஓடும் வழி ஆரும் அறியார்
அவர் அவர் உயிரைக் காக்க அலறிப் போறார்
மாமாங்கம் தன்னிலே வந்தலிங்கம்
சுவாமி மங்காமல் மக்களை காத்தருள்வாயே

சிறப்பாக வாழ்ந்த பணக்காரர்களும்
சீர்கெட்டு மெய்மறந்து போனார்கள்
ஆண்டிக்கும் அது தான் கெதி நாட்டில்
அரசனும் ஊரை விட்டு ஓடுகின்றார்
நீயே சமாதானம் காட்டி வைப்பாய்
நித்தமும் தவிக்கின்றோம் உன்னை நொந்து
மாமாங்கம் தன்னிலே வந்தலிங்கம்
சுவாமி மங்காமல் மக்களை காத்தருள்வாயே

முற்பிறப்பு வினயதோ சிவனே சித்தி விநாயகா
மூழ்கிறோம் நரகத்தில் முதியோர் கொடுமை
கண்திறந்து வழியைக் காட்டும் வாழமக்கள்
காகம் போல் அலைகிறார் பரதவித்துமே
நாட்டிலே மக்கள் மனம் ஒன்றாக்கியே
நல்வாழ்வு எல்லோரும் வாழ வையும்
மாமாங்கம் தன்னிலே வந்தலிங்கம்
சுவாமி மங்காமல் மக்களை காத்தருள்வாயே

நீதிக்கு முதல் தெய்வம் நீயே அப்பா
நெடிகிலும் துயர் தமிழர்க்கு தானே சுவாமி
நாடெல்லாம் காடாகி போகுதுபார்
நசிபட்டு உயிர் எல்லாம் மாண்டு போறார்
தமிழ் ஊர் எல்லாம் தாழ்கிறோம் நரகில்
தாவிநீ எடுக்காவிட்டால் எங்களுக்கு யார்
மாமாங்கம் தன்னிலே வந்தலிங்கம்
சுவாமி மங்காமல் மக்களை காத்தருள்வாயே

பாவற்கொடிச்சேனை சிப்பிமடு கண்டியன்ஆறு
பகட்டான அடச்சகல் வயல் வாடிகள்
ஊத்து திக்கோடை பனிச்சையடிமாரி
ஓடுது மாவடிமாரி ஊர் எல்லாமே
பூட்டியவெடி ஓசை ஓயுது இல்லை
புகையாக தோணுது நாடெல்லாம்
மாமாங்கம் தன்னிலே வந்தலிங்கம்
சுவாமி மங்காமல் மக்களை காத்தருள்வாயே

ஊர் மக்கள் ஓடும் விதம் உற்றுப்பார்
ஒருதர்கூட இல்லை மகிழவெட்டவான்
பங்குடாவெளிநரிபுல் தோட்டம் கரவெட்டி
விளாவெட்டவான் நாவற்காடு ஈச்சந்தீவு
மங்கிகட்டு வலையறவு குறிஞ்சாமுனை
கன்னன்குடா மண்டபத்தடி கரையாக்கன் தீவு
மாமாங்கம் தன்னிலே வந்தலிங்கம்
சுவாமி மங்காமல் மக்களை காத்தருள்வாயே

ஓடுகிறார் வயல் வட்டை வாடி எல்லாம்
தாண்டியடி கொத்தியாபுலை காஞ்சிரங்குடா
கொக்கட்டிச்சோலை முதலைக்குடா முனைக்காடு
மகிழடித்தீவு படையாண்டவெளி பண்டாரியாவெளி
பட்டிப்பளை அரசடித்தீவு கடுக்காமுனை தானும்
அம்பிளாந்துறை பழுகாமம் போரதீவு அப்பா
மாமாங்கம் தன்னிலே வந்தலிங்கம்
சுவாமி மங்காமல் மக்களை காத்தருள்வாயே

படுவான்கரை பகுதி முற்றாக ஓடுதுபார்
பாதை வழிதோணி படகு வண்டில் மெசின்
ஆளை ஆள் தள்ளியே ஏறி எழுவான்கரை
அடிபடுகின்றோம் அரச கட்டிடங்களிலும்
செல்வெடிக்கு பயந்தே மக்கள் எல்லாமே
சீர்கெட்டு போனார் சிறப்பாய் வாழ்ந்தவரும்
மாமாங்கம் தன்னிலே வந்தலிங்கம்
சுவாமி மங்காமல் மக்களை காத்தருள்வாயே

மாடு ஆடுகோழி போச்சே அப்பா
வளர்த்த நாய் பூனை மாண்டு போச்சே
சனங்களும் வீட்டை விட்டு ஓடவே
சாகாமல் இருப்போர் களவும் எடுப்பவரும்
முதலாளிமார்கள் மூச்சும் இல்லை
மூடியே கிடக்கிறார் முகாமிலே ஐயா
மாமாங்கம் தன்னிலே வந்தலிங்கம்
சுவாமி மங்காமல் மக்களை காத்தருள்வாயே

கலியுகத்திலே நடக்கிற கொடுமையாலே
காட்டுகிறாய் உன் அருள் உலகோர் அறிய
உரல் உலக்கை சட்டி பானை நெல்
ஊர்மக்கள் பெரும்மாற்று சாமான்கள்
ஒன்றுமே வையாமல் கள்ளர்கள்
ஓடியே எடுத்து ஏத்துறார்கள் எழுவான்கரை
மாமாங்கம் தன்னிலே வந்தலிங்கம்
சுவாமி மங்காமல் மக்களை காத்தருள்வாயே

இடம் விட்டு போனமக்கள் தானும்
ஏகமும் அரசாங்கமும் முகாம் அமைத்து
அம்பாரை தொங்கல் வாழைச்சேனை வரை
அழகான கொட்டிலும் அமைத்து
பள்ளிக்கூடங்கள் உறவினர் வீடு
பக்குவமாய் அடிபட்டோம் அப்பா
மாமாங்கம் தன்னிலே வந்தலிங்கம்
சுவாமி மங்காமல் மக்களை காத்தருள்வாயே

வேறு நாட்டவர் செய்கிறார் உதவி
விதமான சட்டிபானை அரிசி பீங்கான்
பாயோடு தலையாணை உடுப்புகள்
பகட்டான பால் மா சீனி தேயிலை
கத்தி கரண்டி பீங்கான் யொக்கு
கருவாடு கிழங்கு பருப்பு மீன்ரின்
மாமாங்கம் தன்னிலே வந்தலிங்கம்
சுவாமி மங்காமல் மக்களை காத்தருள்வாயே

சவுக்காரம் தேங்காய் எண்ணை உப்பு
பற்பசை விறஸ் சிலுப்பர்கள்
சோயாவோடு கடலை கோதுமை மா
சுறுக்காய் சமைக்க அடுப்புகளும்
நிலக் கிணறு கக்கூசி வாத்துவாழி
நெடுகிலும் மருந்துவகை இங்கே
மாமாங்கம் தன்னிலே வந்தலிங்கம்
சுவாமி மங்காமல் மக்களை காத்தருள்வாயே

முகாம்களில் வெள்ளையர் வந்துமே
முற்றாக மக்களைப் பார்வை செய்தார்
காச்சல் ஒடு கண்நோய் அம்மன்
கழிச்சல் வயிற்றோட்டம் வியாதி
தலைஇடி தடுமல் தாங்க ஏலா நோய்
சாப்பாடும் வித்தியாசம் அப்பா
மாமாங்கம் தன்னிலே வந்தலிங்கம்
சுவாமி மங்காமல் மக்களை காத்தருள்வாயே

முகாம்களில் சாப்பாடு வித்தியாசம்
சோறுமோ முட்டரிசி பார் அப்பாகறி
பருப்போடுசோயா கிழங்குவகையாம்
சாப்பிட்டுமுடிய சிறுவர்கள் தானும்
தாங்க ஏலா நோய் பிடிக்குது பாருமே
தவிக்கிறார் முகாமிலே மக்கள் தானும்
மாமாங்கம் தன்னிலே வந்தலிங்கம்
சுவாமி மங்காமல் மக்களை காத்தருள்வாயே

ஊர் எல்லாம் சேர்ந்துமே லிங்கம்
உன்னையே நம்பினோம் தஞ்சம் என்று
பாலர்க்குப் பழுதுகள் வாராவண்ணம்
பக்குவமாய் நாடு காடாகாமலேதான்
நீதி அரசர் நீ அல்லவோ உலகிலே
நித்தமும் கைஎடுத்தோம் பாரும்
மாமாங்கம் தன்னிலே வந்தலிங்கம்
சுவாமி மங்காமல் மக்களை காத்தருள்வாயே

பார் அப்பா ஊரை விட்டு மக்கள் ஓடவே
பழுதடைந்து போச்சு வணங்கும் தலம்
பூசையும் இல்லை கோயில் தலம்கள்
புகழ்தானோ உமக்கு இது பார்க்க நாட்டில்
எப்பவோ நாங்கள் இருந்த இடம்காண்
ஏங்கித் தவித்து அழுகிறோம் வந்து பார்
மாமாங்கம் தன்னிலே வந்தலிங்கம்
சுவாமி மங்காமல் மக்களை காத்தருள்வாயே

பார் அப்பா செய்ததொழில் இழந்தோம்
பக்குவமாய் செய்த வேளாமைகள்
வெட்டியும் கிடக்குது வேளாமை
வெட்டாமலும் அழியுது பாரும்
அடித்த நெல் ஏத்தாமலுமே தான்
கொடுத்த நெல்லுக்கு பணம் எடுக்காமல்
மாமாங்கம் தன்னிலே வந்தலிங்கம்
சுவாமி மங்காமல் மக்களை காத்தருள்வாயோ

மாடு ஆடு கோழி மக்கள் தேடிய
மண்ணோடு கூடிய பொருள்கள்
அத்தனையும் இழந்து நாங்களுமே
அகதியாய் வந்து இருக்கிறோம்
கள்ளர்கள் கொடுமை கவனித்து
காட்டுவாய் உன் அருள் உலகு அறிய
மாமாங்கம் தன்னிலே வந்தலிங்கம்
சுவாமி மங்காமல் மக்களை காத்தருள்வாயே

இப்படி அநீதி செய்கின்ற கள்ளர்களை
ஏன் என்று கேளாமல் இருப்பதேனோ
கோயில்களிலும் சாமான்கள் தான்
குடி இருந்த வீடுகள் உடைத்துமே
உரல் உலக்கை பொருள்களுமே
ஓடியே எடுத்த கள்ளர்களை நீயும்
மாமாங்கம் தன்னிலே வந்தலிங்கம்
சுவாமி மங்காமல் மக்களை காத்தருள்வாயே

எந்த நீதியும் இல்லை பார் கள்ளர்களுக்கு
ஏலாதோ உன்னாலும் அடக்கவே
குஷ்டரோகம் என்னும் பெருவியாதிக்கு
கூடிய கெதியில் பிடிப்பார்கள்
உலகமக்கள் அறிய உன் புதுமை
ஓடியே பிடி அப்பா மேனி எல்லாம்
மாமாங்கம் தன்னிலே வந்தலிங்கம்
சுவாமி மங்காமல் மக்களை காத்தருள்வாயே

படைத்த உன்னிடம் மருந்து இல்லாவிடில்
பாலர்கள் எப்படி அறிவது உன்னை
எங்கள் நாட்டின் துயர் தீர்த்து
ஏகமனதாய் எல்லோரும் சேர்ந்து
ஒன்றாக வாழவே ஒருவழி காட்டும்
உயிரோடு எல்லோரும் வாழவை
மாமாங்கம் தன்னிலே வந்த லிங்கம்
சுவாமி மங்காமல் மக்களை காத்தருள்வாயே

மூவின மக்களையும் ஒன்றுசேரும் ஐயா
முற்றாக போர்தனை விலக்கி விடும்
பாகுபாடு இல்லாமல் மனம் ஒன்றுக்கு
பதைக்கிறார் சிறுவர் பெரியோரும்
ஏன் என்று கேட்க எவரும் இல்லை
எழுதும் அப்பா நீதி ஒப்பந்தம்
மாமாங்கம் தன்னிலே வந்தலிங்கம்
சுவாமி மங்காமல் மக்களை காத்தருள்வாயே

எல்லா மக்களையும் ஒரு மனம் ஆக்கு
ஏகமும் சாதி பேதம் இல்லாமலே
உயிர் எல்லாம் ஒன்று போலே
ஓதுவாய் எல்லோர் மனதிலுமே தான்
இரத்தமே எல்லோர்க்கும் ஒன்றென்று
எண்ணி நடக்கவை எல்லோரையும்
மாமாங்கம் தன்னிலே வந்தலிங்கம்
சுவாமி மங்காமல் மக்களை காத்தருள்வாயே

## மட்டக்களப்பு அமிர்தகழி பிள்ளையார் அகவல்

## விநாயகர் தோத்திரம் (1998)

ந.மா.கேதாரபிள்ளை

உலகிலே முதல்வந்த கடவுள் நீ
உருவமே இல்லாத சோதியப்பா
உலகிலே முதற் பூசை உனக்கே ஐயா
ஊரவர்கள் தொழுதேத்தும் பிள்ளையாரப்பா
எந்தையே நீ எங்கள் பிள்ளையென்று
என்றுமே உனைப் போற்றி வாழுகின்றோம்
முந்தியே அமிர்தகழி வந்த சுவாமி
மூர்த்தியே வினை அறுத்துக் காத்திடாய்

இப்பிறப்பு முடியுமுன்னே எங்கள் கர்மா
எது வினைகள் இருந்தாலும் அறுத்துவிடு
முற்பிறப்பில் நாங்கள் செய்த பாவமெல்லாம்
முழுமுதலே முற்றாக நீக்கிவிடு
வந்தவினை அத்தனையும் மாய்த்துவிடு
வாரணமா முதற்பொருளே வந்துவிடு
முந்தியே அமிர்தகழி வந்த சுவாமி
மூர்த்தியே வினை அறுத்துக் காத்திடாய்

ஏனப்பா நீயாழும் உலகமீதில்
எத்தனையோ துன்பதுயர் எந்தநாளும்
சொல்லப்பா இவைகளுக்கு ஓர்முடிவை
சோதனைமேல் சோதனையாய் வருவதேனோ?
கந்தையா முன்னவனே கருணை மூர்த்தி
காலமெலாம் கண்ணீர் நாம் சொரிவதேனோ?
முந்தியே அமிர்தகழி வந்த சுவாமி
மூர்த்தியே வினை அறுத்துக் காத்திடாய்

உன்னாலே ஆகாத காரியங்கள்
உலகிலுண்டோ ஊமையாய் நீ இருப்பதேனோ?
என்னாலே எதுவுமிங்கு இயலாதப்பா
எதுவுமே உன்செயல்தான் அறிவோம் அப்பா
தன்னாலே மக்கள் சிலர் உனை மறந்து
தலைகீழாய் நடப்பதேனோ தருமம்தானோ
முந்தியே அமிர்தகழி வந்த சுவாமி
மூர்த்தியே வினை அறுத்துக் காத்திடாய்

தமிழ்மக்கள் கண்கண்ட தெய்வம் அன்றோ?
தயவின்றி மக்க ளெல்லாம் அழிவதேனோ?
புகழ்பூத்த ராமபிரான் பூசைசெய்த
புனித மண் இதுவென்று போற்றுவாரே
இகழ்வுற்று இம்மண்ணில் இன்று நாங்கள்
எடுப்பார் கைப்பிள்ளையாகிப் போய்விட்டோமே
முந்தியே அமிர்தகழி வந்த சுவாமி
மூர்த்தியே வினை அறுத்துக் காத்திடாய்

வெறிபிடித்துப் போச்சுதையா வீணருக்கு
விளையாட்டாய் உயிர்களெல்லாம் மாய்ந்துபோக
நெறிமுறைகள் இல்லாத நிலையினாலே
நித்த நித்தம் உயிர்ப்பலிகள் நேருதையா
வேலியிலே அகப்பட்ட கம்பியானோம்
விநாயகனே விரைந்தோடி வாருமையா
முந்தியே அமிர்தகழி வந்த சுவாமி
மூர்த்தியே வினை அறுத்துக் காத்திடாய்

மகரமீன்உருவெடுத்து வந்த கப்பல்
வழிதவற மக்கள் உயிர் காத்து நின்ற
பெருமகனே பிள்ளையாரே பிரார்த்திக்கின்றோம்
பிள்ளைகள் போல் எங்களை நீ காத்தருள்வாய்
புகழ்பெரிய புண்ணியனே புனிதனே உன்
பொற்பாதம் போற்றுகின்றோம் காருமையா
முந்தியே அமிர்தகழி வந்த சுவாமி
மூர்த்தியே வினை அறுத்துக் காத்திடாய்

சாபத்தில் வீழ்ந்தாரோ தமிழர் இங்கு
தத்தளித்துச் சாம்புகின்றார் மார்க்கமின்றி
ஆபத்தில் காத்தருளும் ஐயனேவா
அரகரா என்றுன்னை அழைத்தோம் இப்போ
கோபத்தில் வெறிகொண்டு கயவரெல்லாம்
கொல்லுகிறார் எம்மவரைக் கேள்வி இன்றி
முந்தியே அமிர்தகழி வந்த சுவாமி
மூர்த்தியே வினை அறுத்துக் காத்திடாய்

மானிடர்கள் இப்போது நுளம்புபோலே
மாழ்கிறார் வகை சொல்ல யாருமில்லை
நாநிலத்தில் இதுபோன்ற கொடுமை உண்டோ
நல்லவர்க்கும் இது போன்ற சோதனையோ
ஆனைமுகத் தைங்கரனே அருள் பாலிப்பாய்
அடுக்குமோ எங்களுக்கு இந்த நீதி
முந்தியே அமிர்தகழி வந்த சுவாமி
மூர்த்தியே வினை அறுத்துக் காத்திடாய்

பிள்ளையார் நீயேதான் இங்கு வந்து
பேதலிப்போர் மனம் காத்துப் பேணவேண்டும்
கொள்ளையரின் சூழ்ச்சியினால் குலைந்து போகும்
குவலயத்தைக் காத்தருள் நீ செய்ய வேண்டும்
வெள்ளை உள்ளம் படைத்த மக்கள் அனைவரும்
பேதமின்றி ஒற்றுமையாய் வாழவேண்டும்
முந்தியே அமிர்தகழி வந்த சுவாமி
மூர்த்தியே வினை அறுத்துக் காத்திடாய்

எமதிலங்கை நாட்டிலே மக்க ளெல்லாம்
இதயத்தால் ஒன்றிணைந்து இனிமை சேர்த்து
அமைதியுடன் வாழ்வதற்கு அருளவேண்டும்
ஆனைமுகனே உனது கருணை வேண்டும்
சுகமுடன் நல்லுறவு பேணவேண்டும்
சுகமாக எந்நாளும் வாழவேண்டும்
முந்தியே அமிர்தகழி வந்த சுவாமி
மூர்த்தியே வினை அறுத்துக் காத்திடாய்

# வன்செயல் கட்டுப் பாடல் (1991)

**செ.தம்பிராசா**

வம்மிவட்டவானைச் சேர்ந்தவர். வயது 79. தரம் ஐந்து வரை கல்வி கற்றவர். விவசாயத் தொழில் புரிகிறார். வன்செயல் கட்டுப் பாடல், முருகன் பத்திப் பதம், விநாயகர் அகவல் முதலான பாடல்களை எழுதி வைத்துள்ளதுடன் பெரும்பாலும் அவற்றைக் கோயில் வழிபாட்டின்போது பாடுவார்.

1. காத்துவரும் விஷ்ணுபாதம் கருத்தில்கொண்டேன்
காயாம்பு வண்ணருன்மேல் கரம் குவித்தேன்
ஓடியே அரகரா என்று தொண்டர்
ஓலமிட்டலைவதுவும் ஒப்புத்தானோ
பாரப்பா வன்செயலின் கொடுமை தன்னை
பதைக்குதப்பா பாவி மனம் பயந்து நொந்து
கூறப்பா வன்செயலின் கொடுமை தீர சுவாமி
குருகுலத்தைக் காத்தது போல் குறைதீர்ப்பாயே

2. வாதாடி வாலிபர்கள் மடியலானார்
மனைவிமக்கள் அன்னை சுற்றம் முகம்காணாமல்
சீருடனே செல்வமாய் வளர்ந்த மைந்தன்
சிவஞானம் தன்னுடனே செல்வ மைந்தர்
பாதைதன்னில் கட்டியே அடித்திழுத்து
பரதவிக்கக் கொண்டு செல்லும் பாவம்தன்னை
ஏனென்று கேளுமையா இந்தவேளை சுவாமி
இனம் பிரிந்த குரங்கானோம் இரங்குவாயே

3. பாதமலர் தினம் பணியும் பாலரெல்லாம்
பாசமற்றோர் சிறைச்சாலை வாசியானார்
ஏனென்று கேளுமையா இந்தவேளை
இரக்கமற்றோர்க் கெதிர்த்து படைவென்று நீயும்
சீருடனே சிறைச்சாலை வாசம் நீங்க
செந்தமிழர் உனது பாதம் போற்ற
பாருமையா பால்கடலில் பள்ளிகொள்ளும்
பச்சைமால் உன்பாதம் பணிந்திட்டேனே

4. திருமாலே உனது சோதனைகள் தானோ
செந்தமிழர் செய்த தவப்பேறு தானோ
பெற்றதாய் தந்தை சுற்றம் முகம் காணாமல்
பிடித்தடித்து வாட்டியே கொண்டு போக
குற்றமென்ன செய்துவிட்டார் பாவிமைந்தர்
குருகுலத்தைக் காத்து அருள் செய்தாற் போலே
செப்பையா திருநாமம் சிறைச்சாலைக்குள் சுவாமி
செங்கருடன் மீதேறி அருள் செய்வாயே

5. காப்பது உன்செயலல்லோ கண்ணா வண்ணா
கரியமால் நீயிருந்தால் கவலை ஏது
தீதரனே ஸ்ரீராமா கருடனேறி
சிவஞானம் தன்னை ஒத்த செல்வமைந்தர்
பாதகர்கள் கொண்டுசென்ற பாதை கண்டோம்
பாலர்முகம் காணாமல் பரதவித்தோம்
சீருடனே செங்கருடன் மீதிலேறி சுவாமி
சிறைச்சாலை மீட்பதற்கு அருள் செய்வாயே

6. எந்தை என சிந்தை நொந்து தினமும் போற்ற
எனது மகன் சிவஞானம் தன்னோடொத்த
அன்புற்ற பாலரெல்லாம் அன்னியர்க்கு
அடிமைகளாய் உயிரிழந்து அழியலானார்
கண்ணிழந்து வாழ்வது போல் கவலையாலே
கைலைமலை நாதர் உமை கருத்திணையாலே
உண்மையுடன் உடல் இழந்து வரும் வேளைக்கு
சுவாமி ஒரு குறையும் வாராவண்ணம் உகந்திடாயே

7. தீதரனார் மருகோனே சிவஞானந்தான்
செய்குற்றம் நீயறிவாய் சிவனார் மைந்தா
அப்பாவி மக்கள் எங்கள் அருமை மைந்தர்
அநியாயப் பாவிகளுக் கடிமையானார்
இப்புவியில் தமிழீழ மக்களின்று
இருந்தென்ன இறந்தென்ன இன்னதென்று
செப்புமையா சிறைச்சாலை வாசம் நீங்க சுவாமி
செந்தமிழர் தினம் வாழ அருள் செய்வாயே

8. அற்ப பணப்பேய் பிடித்தோர் ஆட்சிக்காக
அநியாயப் படுகொலையால் பிடித்த தோசம்
எப்பையா தீர்த்து வைப்பாய் என்று நித்தம்
ஏங்கியே மனமுடைந்து இடிவீழ்ந்தாப் போல்
பெற்றமைந்தர் தமைக் காணும் பிரியம் மீறி
பேதலித்து தினம் உருகி கருகலானோம்

9. பத்தியுடன் பாடி அருள் பாலன் நானும்
பார்புகழ் சேர் செல்லப்பா தம்பிராசா
உற்றபிழை குற்றமென்ன செய்தபோதும்
கற்றவர்கள் பிழைதிருத்தி கசிந்துபாட
திட்டமுடன் வன்செயல்தான் திசைகெட்டோட
செங்கண்மால் செந்தமிழர்க் கருள் செய் என்று
பொற்பாதம் தனைப்பணிந்தேன் மைந்தர் வாழ
புண்ணியனே அருள் புரிந்து காத்திடாயே

10. ஈசருடன் நால்மறைகள் வேதம் வாழி
இசைந்த செந்தமிழரெல்லாம் என்றும் வாழி
தேசமதில் செந்நெல் பயிர்செழித்து வாழி
சிவனடியார் போராடி உடல் அற்றோரும்
நேசமுடன் மால் பதமே சேர்ந்து வாழி
நினைத்துருகி நிதம் பாடி பணிந்தோர் வாழி

## திருக்கோயில் சித்திரவேல் செம்மல் பேரில் தமிழ் மொழி அனுதாபப் பத்து (1956)

**வ.இராசையா**

திருக்கோயிலைச் சேர்ந்தவர். பல வருடங்களுக்கு முன் இறந்துவிட்டார். தரம் ஒன்று வரை கல்வி கற்ற இவர் இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ் வண்டிச் சாரதியாகக் கடமையாற்றினார். திருக்கோயில் சித்திரவேல் செம்மல் பேரில் தமிழ்மொழி அனுதாபப்பத்து, சூறாவளிக்கும்மி, வெள்ளக்காவியம் முதலிய பல பாடல்களைப் பாடியுள்ளபோதும் அவை பேணப்படவில்லை. முதலாவது பாடல் நூல் மட்டும் கிடைத்துள்ளது.

**வெண்பா**

முத்தனே வேத முதல்வனே மூவோர்க்கு
சித்தனே தேவர் திருமேனியே - அத்தனைக்கும்
காரணமாய் நின்றிலங்கும் கற்பகமே மெய்ப்பொருளே
பூரணமாய் நற்பதங்கள் தந்தருளே.

**விநாயகர் துதி**

கந்தருக்கு முற்பிறந்த கஜமுகா கேள்
கண்ணியமாய் வாழ்ந்து வந்தோம் கவலையின்றி
தொந்தரவு செய்கிறார் துரோகமுற்றோர்
துணிகரமாய் எங்கள் பிரதேசமெல்லாம்
தந்திரமாய் தங்கள் வசமாக்கிக் கொண்டு
தமிழர்களைத் தாழ்ச்சியுறச் செய்கிறார்கள்
வந்துனது கருணை முக வடிவைக் காட்டி- சுவாமி
வாழ்வதற்கு வழி தேடவகை செய்வாயே.

**சரஸ்வதி துதி**

வெள்ளை மலர் தனில்மலருந் தாயே வா வா
வீணை ஒலி மீதொளிரும் வேயே வா வா
உள்ளத்தின் ஒளி தனிலே ஓங்கி நின்று
ஊற்றாக ஊறிவரும் அறிவே வா வா

கள்ளத்தில் உண்மையில்லை கலையுமில்லை
கவி பாடும் அறிவும் எனக்கதிகமில்லை
பிள்ளைத் தேன் அமுதூறும் அறிவுத் தாயே
எந்தன் பிழை பொறுத்து ஆதரித்து அருளுவாயே.

1. கதிரெறியும் கதிரமலை முருகவேளே
கதிதாரும் தமிழ்த் தாயின் கவலை தீர
சதி செய்யும் சிங்களவர் சட்டம் மாய
சக்திவேல் கொண்டெழுந்து வாருமையா
கொதி கொண்ட நெஞ்சம் உள்ள தமிழர் மானம்
கோதி வரும் வஞ்சகர் மேல் வஞ்சகந் தீர்க்க
கதிகொண்ட மலை கிழித்தகுலவு வேலே -சுவாமி
குலவு திருக்கோயிலுறை குமரவேளே.

2. காவடிகள் வருகுதையா கோடா கோடி
கந்தனே வந்துனது கருணை காட்டும்
தாவடியொன்றின்றியே தமிழர் நாங்கள்
தவிக்கின்றோம் தரணியில் எம்மைக்காக்க
வாவி தன்னில் தோன்றி வந்த வள்ளி பங்கா
வண்தமிழின் அடிமை தன்னை அறுப்பதற்கு
தேவியுடன் மயிலேறி வாருமையா- சுவாமி
திருக்கோயில் தன்னிலுறையும் தேவ தேவா.

3. கிருபையுடன் எங்களை நீ காப்பதற்கு
கிளி மொழியார் வள்ளி தெய்வானை கூட
வருவீரே மயில் மீதில் ஏறி நீரும்
வடிவேலா வந்தெமக்கு உதவி தாரும்
தருணமிது தமிழ் மொழியை வாழப்பண்ண
தயங்காமல் நீ வந்து தயவைக் காட்டு
இருகரமுமேந்துகிறோம் எங்களை -சுவாமி
இனிய திருக்கோயிலுறை இறையே வா வா.

4. கீர்த்தியுடன் வாழ்ந்து வந்த தமிழர் நாங்கள்
கிருபையுடன் உனதருளைக் கோருகின்றோம்
பார்க்காது நீ இருந்தாய் பழனி வேலே
பழிவாங்கிக் கொண்டதுவே பௌத்தர் கூட்டம்

வார்த்தையொன்று இனியுரைத்து வழியைக் காட்டு
வாய்மூடி ஆலயத்துள் இருக்கலாமோ
காக்கைக்குந் தன் குஞ்சு பொன் குஞ்சல்லோ - சுவாமி
கருது திருக்கோயிலுறை கந்தவேளே.

5. குலை காட்டும் செங்குரும்பை முலையாள் வள்ளி
குவளை மலர் விழிபதியும் குலவு தோளாய்
மலை நாட்டுத் தமிழர்களின் மானம் போக்கி
மனிதரிலே உரிமையற்ற மடையராக்கி
சிலை காட்டும் பொம்மைகள் போற் செய்து விட்டார்
சிங்களத்தின் தலைவர்களின் சீற்றங் கண்டு
கொலை காட்டும் வேலேந்தி வாருமையா- சுவாமி
குலவு திருக்கோயிலுறை குமரவேளே.

6. கூண்டிலே அடைபட்ட கிளியைப் போலே
குலப்பெருமை குறைந்தடிமையாகி விட்டோம்
மீண்டிடவே வழியுரைத்துக் காக்க வேண்டும்
மேத்தானந்தாக்கள் உரை தோற்க வேண்டும்
தூண்டிலே பிடிபட்ட மீன் போலானோம்
துரைத்தனங்கள் பேசுகிறார் துட்டர் கூட்டம்
மாண்டிடவே மயிலெடுத்து வாருமையா - சுவாமி
மன்னு திருக்கோயிலுறை மகிமை வேலே.

7. கெதியிலே எங்கள் துயர் தீர்க்க வேண்டும்
கிளிமொழியார் இன்னல் எல்லாம் தீர்க்க வேண்டும்
கதியிலே உயர்ந்த தமிழ் காக்க வேண்டும்
கல்லோயாக் கசடர்களைப் போக்க வேண்டும்
துதியிலே சிறந்து நின்ற மாகோன் மைந்தா
துரௌபதைக்குத் துயில் அளித்தோன் மருகவேளே
சதியிலே வீழ்ந்து மனம் வாடுகின்றோம் - சுவாமி
சங்கு திருக்கோயிலுறை சக்தி வேலே.

8. கேடுகள் செய்திடவே கருத்துக் கொண்டு
கெடுபிடியாய்க் கூடுகின்ற பிக்குக் கூட்டம்
நாடியே தமிழர்களைத் தொலைப்பதற்கு
நாற்புறமும் குழி தோண்ட நயந்து வாறார்
கூடியே கோள் கூறும் சூரியாக்கள்

## செல்லப்பா சிறைமீண்ட திருப்பதிகம்

## (பதிப்பு: 1996)

ந.மா.கேதாரபிள்ளை (பதிப்பு)

1. வருந்துகிறேன் ஏழைதன்னில் இரங்குமையா
வடிவேலா ஆறுமுகனே வாவா சுவாமி
இருந்தடியேன் சிறைமனக் கவலையெந்தன்
துயரமெல்லாந் தீருமையா சிவபெருமான் மகனே
வந்து கருத்தரியாத மூடனுக்கே
இந்தவேளை குற்றமொன்றும் வாராமல் காக்க வேண்டும்
விக்னேஸ்வரா வுன்பாதம் துதிப்பேனையா
விஷ்ணுகுறை தனைதீர்த்து வருகுவாயே.

2. வாருமையா ஆறுமுகனே மயில்மீதேறி
வருந்துகின்றேன் நெடுநாளாய் மறியல் வீட்டில்
பாருமிதோ அன்புவையு மெந்தன்மீது
பார்த்தெனது சிறை மீட்பாய் பழனிவேலா
ஆருமில்லாப் பரதேசியானேனிப்போ
அருமையுடன் பெற்றெடுத்த தாயாரில்லை
ஆதரித்து ஆளுமையா அடியேன் தன்னை
அருள்புரிந்து சிறைமீட்க வருகுவாயே.

3. விரும்பியே உன்பாதம் பணிந்து வாறேன்
வேறொருவர் துணையெனக்குக் காணேனையா
கரும்புதனை எறும்புவந்து கடித்தாற் போலே
கடிக்குதையா மூட்டை யெந்தன் தேகமெல்லாம்
பொறுத்தருளக் கூடாமல் விடியுமட்டும்
புலம்பியே எனது நெஞ்சம் வாடுதையா
புள்ளி மயில் ஏறிவந்து வள்ளிகூட
புகழ்ந்தடியேன் சிறைமீட்க வருகுவாயே.

4. வீரமுள்ள கொத்தாப்பர் விதானமாரும்
வெகுசனங்கள் கூடியென்னைக் கட்டிக் கொண்டு
ஓரமுள்ள நீதி செய்து கள்ளனென்று

வெளவியே உந்தனது மயில் மீதேறி
வாருமையா காத்திடற்கு வள்ளி வேலா
திவ்வியமாய் உன் பாதந் துதித்தேனையா - சுவாமி
திருக்கோயில் தன்னிலுறையும் செந்தில் வேலா.

13. இக்கணமே எங்கள் குறை தீர்ப்பதற்கு
எழுந்தருளி வந்துனது அருளைத் தாரும்
பக்குவமாய் வாய்பொருதி பதுங்கி நின்று
படிவாங்கிச் சோறுண்ணும் காலமாச்சு
தக்க கலையறிவற்றோன் ஆக்கியோன் நான்
தாய்காக்கக் கடன் உண்டு தயங்கிடாதே
பக்கமுள கடல் கக்கும் அலைகள் மோதி - சுவாமி
பாயு திருக்கோயிலுறை பழனி வேலே.

## செல்லப்பா சிறைமீண்ட திருப்பதிகம்
## (பதிப்பு: 1996)

ந.மா.கேதாரபிள்ளை (பதிப்பு)

1. வருந்துகிறேன் ஏழைதன்னில் இரங்குமையா
வடிவேலா ஆறுமுகனே வாவா சுவாமி
இருந்தடியேன் சிறைமனக் கவலையெந்தன்
துயரமெல்லாந் தீருமையா சிவபெருமான் மகனே
வந்து கருத்தரியாத மூடனுக்கே
இந்தவேளை குற்றமொன்றும் வாராமல் காக்க வேண்டும்
விக்னேஸ்வரா வுன்பாதம் துதிப்பேனையா
விஷ்ணுகுறை தனைதீர்த்து வருகுவாயே.

2. வாருமையா ஆறுமுகனே மயில்மீதேறி
வருந்துகின்றேன் நெடுநாளாய் மறியல் வீட்டில்
பாருமிதோ அன்புவையு மெந்தன்மீது
பார்த்தெனது சிறை மீட்பாய் பழனிவேலா
ஆருமில்லாப் பரதேசியானேனிப்போ
அருமையுடன் பெற்றெடுத்த தாயாரில்லை
ஆதரித்து ஆளுமையா அடியேன் தன்னை
அருள்புரிந்து சிறைமீட்க வருகுவாயே.

3. விரும்பியே உன்பாதம் பணிந்து வாறேன்
வேறொருவர் துணையெனக்குக் காணேனையா
கரும்புதனை எறும்புவந்து கடித்தாற் போலே
கடிக்குதையா மூட்டை யெந்தன் தேகமெல்லாம்
பொறுத்தருளக் கூடாமல் விடியுமட்டும்
புலம்பியே எனது நெஞ்சம் வாடுதையா
புள்ளி மயில் ஏறிவந்து வள்ளிகூட
புகழ்ந்தடியேன் சிறைமீட்க வருகுவாயே.

4. வீரமுள்ள கொத்தாப்பர் விதானமாரும்
வெகுசனங்கள் கூடியென்னைக் கட்டிக் கொண்டு
ஓரமுள்ள நீதி செய்து கள்ளனென்று

உபாயமதாய் மாஞ்சிட்டு கொண்டு போறார்
ஆரமுள்ள மயில்மீதேறி நின்று
பாருமையா பன்னிரெண்டு கண்களாலும்
பாரமுள்ள கைமாஞ்சி நோகுதையா
பட்சமுடன் சிறைமீட்க வருகுவாயே.

5. உனது மனம் உருகி அருள் தருவீரென்றா
உந்தன் புகழைச் சொல்லலுற்றேன் உமைதன்மைந்தா
எனது மனம் பயந்து நொந்து வாடுதையா
இதுவே பறந்து வந்து சிறையை மீட்பாய்
உனது மனது கொண்டு வள்ளியைச் சேர்வதற்கு
வனந்தனிலே வேடுவனாய் சென்றாப் போலே
கனதுயர் மாகியுனைத் தெண்டனிட்டேன்
கடவுளே சிறைமீட்க வருகுவாயே.

6. ஊரைவிட்டு பிறதேசங் கொண்டு போனார்
ஒருவருமே துணையெனக்குக் காணேனையா
வாரமிட்டு வழக்கதனை வெல்லவென்று
வாறார்கள் வெகுசனங்கள் எதிரிபக்கம்
ஆரமிட்ட மணிமார்பன் மேனிதுன்ன
அன்புடனே அப்புக்காத் திப்போவைத்து
சோரவிடா வண்ணமதாய் பேசுமையா
சுவாமி தோகை மயிலேறிவந்து தோற்றுவாயே.

7. வெள்ளியினால் வேலலகு நாகபாஷம்
விலங்கிட்ட கைதனிலே மாஞ்சிட்டு
வள்ளியம்மை தெய்வானை தாயார் பாதம்
வந்துயான் ஓர்மனதன்பாய்த் தொண்டு செய்வேன்
தெள்ளியதோர் வேலவர்க்குச் சொல்லுமம்மா
சிறைதனையே விலக்கிவிட வேணுமென்று
முள்ளினது முதுகிலிட்டு வருவேனையா
முன்னின்று சிறைமீட்க வருகுவாயே.

8. வேற்றுருவமாகினான் சிறையில் பட்டு
மிகமெலிந்து வாடுகிறேன் விதிவண்ணத்தால்
மாற்றிடுவாய் இச்சிறையை வானோர் கோவே
மாற்றுவது தங்கநிற மானமேனியிலே

வடிவேலா ஆறுமுகனே வாவா சுவாமி
காற்றுனக்கு வெண்சாமரம் வீசுதையா
வண்ணமயிலில் ஏறிவந்து வள்ளிகூட
வடிவேலா சிறைமீட்க வருகுவாயே.

9. வையகத்தில் பொய் வழக்குச் சொன்னபேரை
வடிவாக உலகிலுள்ளோர் கண்ணால் காண
மெய்யாக இவ்வுலகில் கண்முன்காண
ஏதுமொரு கேடுவரக் காட்டவேணும்
பொய்யான காயமதை நான் சுமந்து
பேரரசர் சிறையிருக்க வைத்தாய் பிரம்மா
ஐயாவே உனைப்பணிந்து தெண்டனிட்டேன்
கடவுளே சிறைமீட்க வருகுவாயே.

10. வொன்றுமறியாதெனது நெஞ்சம் உருகுதையா
தீயிலிட்ட மெழுகு போல கொண்டென்னை
கொலைசெய்ய வேணுமென்று
கூட்டமதாய் கூடியவர் பேசும் போது
கண்டுனது மனமிரங்கி அன்பு கூர்ந்து
கருத்துடனே வந்தெனக்கு கனவில் சென்றாய்
அன்றுமுதல் இன்றளவும் உனைத் தெண்டனிட்டேன்
கடவுளே சிறைமீட்க வருகுவாயே.

11. வோதுமொழி தனைக்கேளும் உமைமாதீன்ற
உண்மையுள்ள தற்பரனே உமைதன் மைந்தா
தீது செய்து சண்டாளச் சிறையில் வைத்தாய்
சிவ சிவா இதனைப்போல கொடுமையுண்டோ
சூதுசெய்த சண்டாளன் நெஞ்சந் தன்னில்
சூலத்தால் குத்திடுவாய் வருத்தங்கொள்ள
மாது உமை பார்வதியும் ஈஸ்பரரும்
மனதிரங்கிச் சிறைமீட்க வருகுவாயே.

12. வெளவியிலே மரமதனைச் சேர்த்தாப் போலே
வந்து என்முன் பொய்ச்சாட்சி சொன்னபேரை
கெளவியே நாகமது கடிக்கோணும்
கதிர்காமந்தனை நினைத்தால் வினைகள் தீரும்
ஔவியே அரவமது தீண்டுதற்கு

அருள்புரிவாய் சத்துரு சங்காரவேலே
பௌவியே பழனிமலை மீதமர்ந்து
பட்சமுடன் சிறைமீட்க வருகுவாயே.

13. இவ்விருத்தம் பாடினேன் உனைநினைத்து
ஏது பிழை இருந்தாலும் பொறுத்தேயாழ்வாய்
சொல்விருத்தம் தன்னிலுள்ள குற்றமெல்லாம்
தும்பிமுகன் சொற்குற்றம் பொறுத்து ஆள
நல்விருத்தம் என்று சொல்லி பாடுதற்கு
நலமுடனே சரஸ்பதியென்னாவில் நிற்பாய்
எவ்வுயிர்க்கும் தாயான ஈஸ்பரனார் மைந்தா
இச்சணமே சிறைமீட்ட வருகுவாயே.

# கள ஆய்வில் தகவல் வழங்கியோரின் விபரங்கள்

பெயர், வயது. கல்வி, தொழில், ஊர், சந்தித்த நாள் என்ற ஒழுங்கில் தரப்படுகிறது.

1. அருளம்மா,சி.,56, இல்லை, வீட்டுவேலை, வவுணதீவு, 05.02.2010.
2. அஜிவத்,எம்.எம்.எம்., 65, எஸ்.எஸ்.சி. ஆசிரியர், ஏறாவூர், 04.02.2010.
3. ஆதம்லெவ்வை, எம்.ஏ., 62, தரம் 4, விவசாயம், இறக்காமம், 12.05.2010.
4. இப்ராலெவ்வை,மொ.கா., 84, தரம் 1, அண்ணாவி, மருதமுனை, 04.08.2010.
5. கக்கீம்,கலைதாசன், 46, தரம் 10, நெசவு, மருதமுனை, 18.07.2010.
6. கிருபாகரன்,சி., 42, தரம் 5, வியாபாரம், வவுணதீவு, 05.02.2010
7. சண்முகநாதன்,நோ., 53, இல்லை, அண்ணாவி, கன்னன்குடா, 04.02.2010.
8. சாமித்தம்பி,சு., 61, தரம் 5, வட்டவிதானை, சந்திவெளி, 20.09.2010.
9. சிவப்பிரகாசம்,த., 67, க,பொ.த.சாதாரண தரம், ஆசிரியர், பழுகாமம், 27.10.2010.
10. சிவலிங்கம்,செ., 73, தரம் 4, வட்டவிதானை, கதிரவெளி, 03.02.2011.
11. சுக்கூர்,சீ.மொ., 48, க.பொ.த.சாதாரண தரம், மௌலவி, அட்டாளச் சேனை, 23.01.2012.
12. செல்வராசா,செ., 73, தரம் 4, விவசாயம், வம்மிவட்டவான், 18.09.2010.
13. தாமோதரம்,ந., 63, இல்லை, விவசாயம், சித்தாண்டி, 04.11.2010.
14. நூர்யு யன்னா, 42, க.பொ.த.சாதாரண தரம், வீட்டு வேலை, ஏறாவூர், 20.02.2011.

## கிழக்கிலங்கை வாய்மொழிப் பாடல் மரபு

### ''கட்டுப்பாடல்'' களின் தொகுப்பு

கிழக்கிலங்கைத் தமிழ்பேசும் மக்கள் மத்தியில் பயிலப்பட்டு வந்த 'மக்கள் சார் இலக்கிய மரபொன்றை' இந்நூல் பதிவு செய்கின்றது. வாய்மொழி மரபின் ஒரு பகுதியாக - வளர்ச்சி நிலையாக அமைகின்ற இக் 'கட்டுப்பாடல்' மரபு இந்த மக்களின் சமகால வாழ்வியல் அநுபவ வெளிப்பாடுகளின் தொகுப்பாகும். அந்தவகையில் அவர்கள் காலத்திற்குக் காலம் தமது அன்றாட வாழ்வில் எதிர்நோக்கியப் பல்வேறுபட்ட சமூக, அரசியல் சிக்கல்களையும் முரண்களையும் மத அநுபவங்களையும் தமது மொழியின் இயல்புநிலையில் நின்று பாடி வந்திருக்கின்றனர். இத்தகைய சிக்கல்கள், முரண்களின்போது பாடல்களினூடாகத் தொடர்பாடல் கொள்கின்ற 'சடங்கியல் தொடர்பாடல் மரபு' இப்பாடல் மரபிலே முக்கியமானது. ஆகவே, இந்தப் பாடல் தொகுதி கிழக்கிலங்கைத் தமிழ்பேசும் மக்களின் சமூக வரலாற்றைப் பதிவு செய்யும் ஓர் ஆவணமாக அமைகின்ற அதேவேளை ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றினுள் இந்த மக்கள்சார் இலக்கிய மரபை உள்ளீர்க்க வேண்டிய தேவையையும் முன்னிறுத்துகின்றது.



**சின்னத்தம்பிசந்திரசேகரம்:** இவர் கிழக்குப்பல்கலைக்கழகத்தில் சிறப்பு இளங்கலைமாணி, முதுகலைமாணி, கலாநிதிப் பட்டங் களைப் பெற்றவர். தற்போது கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராகவும் கலைப்பீட பிற்பட்டப்படிப்புகள் அலகின் இணைப்பாளராகவும் கடமை யாற்றி வருகின்றார். மரபிலக்கியம், நவீன இலக்கியம், ஈழத்து இலக்கியம், நாட்டாரியல், பண்பாடு, வரலாறு ஆகியவற்றில் ஈடுபாடுடைய இவர் இத்துறைகள் தொடர்பாகப் பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதியிருக்கின்றார். ஈழத்து ஆரம்பகாலச் சஞ்சிகைகளில் ஒன்றான 'பாரதி' (மண்டூர்) இதழ் தொகுப்பின் ஆசிரியரான இவர் 'மொழிதல்' ஆய்வுச் சஞ்சி கையின் ஆசிரியர்களில் ஒருவராகவும் விளங்குகின்றார்.

குமரன் புத்தக இல்லம்

விடயம்: தமிழ் இலக்கியம்

ISBN 978-955-659-573-4

9 789556 595734